# கல்கி

குடும்பத்துடன் படிக்க...

KALKI
27.8.2006 ரூ.8.00
80 பக்கங்கள்



நியாயமா கலைஞரே!





அடக்க விலைதனில் யாரும் - துணி
அள்ளிச் செல்லும் கலைக்கூடம்...
ஜவுளி உலகில் இது ஆச்சரியம்
சாரதா'ஸ் நமது பாரம்பரியம்..!
சாரதாஸ்
45,என்.எஸ்.பி. ரோடு, திருச்சி-2. போன்:2702077.
தன்பில்டிங், 827, மவுண்ட்ரோடு (தேவிதியேட்டர் எதிரில்)
சென்னை-2, போன்:28521177.













# ஒலிப்பதிவுத் துறையில் அபஸ்வரங்கள்!

சமீபத்தில் ஸா ரி கா ம ஒலிப்பதிவு நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் சட்டோபாத்யாய ஒரு பேட்டியில் கூறியிருந்தார் : ராயல்டி மேனேஜ்மென்ட் புரோக்ராம் என்றொரு திட்டத்தின்கீழ் எங்கள் நிறுவனத்தில் ஒலிப்பதிவாகும் அனைத்து சி.டி.க்கள் / காஸெட்களுக்குமான விற்பனைக் கணக்குகள், இனி மாதந்தோறும் ஈமெயில் மூலம் அந்தந்த கலைஞர்களைச் சென்றடையும். 'பழைய பாக்கி'கள் விரைவில் 'செட்டில்' ஆகும். ராயல்டி கணக்குகள் சீராகும். எல்லாம் ஸா ரி கா ம நிறுவன வெப்ஸைட்டிலேயே பதிப்பிக்கப்படும். கலைஞர்களுக்குத் தரப்படும் பிரத்யேக கோட் நம்பர் மூலமாக அவர்கள் வெப்ஸைட்டில் தங்கள் சி.டி. விற்பனை விவரங்களை அறியலாம். இதற்கென சிறப்பான மென்பொருள் தயாரித்திருக்கிறார்களாம்.

காஸெட் / சி.டி. பதிப்புத் தொழிலில் இது ஒரு புரட்சிகரமான மாற்றமாக அமைய வாய்ப்பிருக்கிறது.

தற்போது தமிழ்நாட்டில் காஸெட் / சி.டி. வெளியீடு எப்படி நடக்கிறது என்று பார்ப்போமோ?

ஒலிப்பதிவு நிறுவனம், சம்பந்தப்பட்ட கலைஞரை அணுகி, ஒலிப்பதிவு உரிமையை மொத்தமாக பேரம் பேசி வாங்கிக் கொள்கிறது. அதன்பிறகு எத்தனைப் பதிப்புகளை வேண்டுமானாலும் வெளியிட்டு விற்றுக் கொள்கிறது. விற்பனையாகும் ஒவ்வொரு சி.டி. அல்லது காஸெட்டுக்கான 'ராயல்டி' என்று கணக்கு போட்டுப் பார்த்தால், ஒலிப்பதிவு நிறுவனத்துக்குக் கூடுதல் லாபம்; கலைஞருக்கு நஷ்டம் என்கிற நிலைமைதான் பெரும்பாலும். (ஓரிரு விதிவிலக்குகள் உண்டு)!

இந்த நடைமுறையின் விளைவாக, ஒலிப்பதிவு நிறுவனங்களுக்கும் கலைஞர்களுக்குமிடையேயான உரசல்கள் அதிகமாகின்றன. 'உன்னதமான கலை என்று கொண்டாடப்படும் கர்னாடக சங்கீதத்தைப் பாடுபவர், இப்படிப் பேராசைப்பட்டுப் பணம் கேட்பதா?' என்று ஒலிப்பதிவு நிறுவனங்கள் அங்கலாய்க்க, 'நாங்களும் மற்றவர்களைப் போல்தானே வாழ்க்கை நடத்த வேண்டும்; விலைவாசி உயர்வு எங்களை மட்டும் பாதிக்காதா?' என்று கலைஞர்கள் வாதாட, இதனால் ரசிகர்களுக்குத்தான் இழப்பு.

சமீபகாலமாக அதிக கூட்டத்தை ஈர்த்துக் கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கும் ஹரிகதைக் கலைஞர் ஒருவரை ஒலிப்பதிவு உரிமைக்காக அணுகியிருக்கிறது ஒரு நிறுவனம். அவர் ஒரு சில லட்சங்கள் கேட்க, ஒலிப்பதிவு நிறுவன உரிமையாளருக்கு மயக்கம் வராத குறைதான்!

இதற்கிடையே, கஷ்டப்பட்டு ஒலிப்பதிவு உரிமை வாங்கிப் பதிப்பிக்கப்படும் சி.டி.க்களிலிருந்து பாட்டுகளை அப்



படியே அனுமதியின்றி சில வெப்ஸைட்கள் வெளியிட்டு, ஒலிப்பதிவு நிறுவனத்துக்குக் கடுக்காய் கொடுத்து வந்தன. இவ்வாறு வெளியிட்ட ஒரு டாட் காம் நிறுவனத்தின் மீது சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்க முற்பட்டுள்ளது ஓர் ஒலிப்பதிவு நிறுவனம்.

பெரும்பாலான கலைஞர்கள் "பணத்துக்காகப் பேரம் பேசுவது எங்களுக்கு மிகுந்த மனக்கஷ்டத்தைத் தருகிறது" என்கிறார்கள். "இசை மிகுந்த மனநிறைவைத் தரும் தொழில். காலத்துக்கு ஏற்ப சபாக்கள் சன்மானத்தையும் ஒலிப்பதிவு நிறுவனங்கள் ராயல்டி தொகையையும் உயர்த்தித் தந்தால் நாங்கள் ஏன் பேரம் பேசப் போகிறோம்?" என்கிறார்கள்.

- ரஸிகா




# கல்கி

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

உதவி ஆசிரியர் :
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்
ச.கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 2225 1021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.440/-
ஆறு மாதம் : ரூ.220/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ். டாலர்

**Bharathan Publications Private Limited,**
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.


புலம் பெயர்ந்த தமிழர்களின் அழைப்பை ஏற்று கனடா, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு இரண்டு வார சுற்றுப் பயணம் சென்று திரும்பி யிருக்கிறார் திருமாவளவன். புது உத் வேகத்துடன் காணப்பட்டவரிடம் பேசினோம்...

**சட்டசபைக்குப் போக முடிய வில்லையே என்கிற வருத்தம் இருக் கிறதா?**

"இல்லை. வேண்டாத விவகாரங் கள்தான் சட்டசபையில் நிறைய பேசப்படுகின்றன. சிறைத்துறை மான்யத்தில் மட்டும்தான் விடுதலைச் சிறுத்தைகளுக்குப் பேச வாய்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். கல்வி, உள்ளாட்சி போன்ற முக்கியமான கோரிக்கைகளில் என்ன முயன்றும் பேச வாய்ப்புக் கிடைக்கவில்லை. அ.தி.மு.க. ஆட்சியிலும் எங்களுக்கு இதே நிலைதான். எனவே நான் சட்டசபைக்குச் சென்றிருந்தாலும் இதே நிலைதான் தொடர்ந்திருக்கும்."

**அ.தி.மு.க. தினமும் ஏதாவது ஒரு பிரச்னை செய்து வெளிநடப்பு செய்யும்போது, தோழமைக் கட்சியான உங்களுக்கும் அவர்களைத் தொடர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறதா?**

"அப்படியெல்லாம் எந்தக் கட்டாயமோ, ஒப்பந்தமோ எங்களுக்கு இல்லை. பல முறை அ.தி.மு.க. வெளிநடப்பு செய்தபோது நாங்கள் கலந்துகொள்ளாமல் இருந்திருக்கிறோம்."



**தேர்தலுக்குப் பின்பு ஒரே மேடையில் ஜெயலலிதா மற்றும் வைகோவுடன் தோன்றிய நீங்கள், தேர்தலுக்கு முன்பு அப்படிப்பட்ட ஒருங்கிணைப்பைக் காட்டியிருந்தால் அதிக இடங்களில் வெற்றி வாய்ப்புக் கிடைத்திருக்குமே!**

"இப்போது அதற்காக வருந்த வேண்டிய அவசியம் இல்லை. மகிழ்ச்சியால் மார்தட்டும் அளவுக்கு தி.மு.க.வுக்கு மக்கள் மாபெரும் வெற்றியைக் கொடுத்துவிடவில்லை. துவண்டு போகுமளவுக்கு நாங்களும் தோல்வியைச் சந்திக்கவுமில்லை."

**மூன்று மாத கால கலைஞர் ஆட்சி எப்படியிருக்கிறது?**

"கொடுத்த வாக்குறுதிகளில் சிலவற்றை நிறைவேற்ற முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். பல வாக்குறுதிகளைப் பற்றி எந்த ஒரு தொடர் முயற்சியும் இல்லை. மற்றபடி குறிப்பிட்டுச் சொல்ல ஒன்றும் இல்லை."

**தி.மு.க. அரசில் ஐந்து குடும்ப அதிகார மையங்கள் இருக்கின்றனவாமே... வைகோ சொல்கிறாரே?**

"இதுபோன்ற புகார்கள் வழக்கமாகச் சொல்லப்படும் ஒன்றுதான். ஆனால் கூட்டணிக் கட்சிகளுக்கு அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டால் தி.மு.க. ஆட்சிக்கு ஸ்திரத்தன்மை கூடும்."

**இலவச கலர் டி.வி. வழங்க அமைக்கப்பட்டுள்ள அரசு கமிட்டியில் உங்கள்**

# "நியாயமா

# – திருமா திடுக்

**தோழமைக் கட்சிகள் இடம்பெறாமலிருக்க, நீங்கள் மட்டும் இடம்பெற்றது ஏன்?**

"சன் தொலைக்காட்சி போட்ட குழுவிலா இடம்பெற்றிருக்கிறோம்? அரசு கமிட்டியில் தானே இடம்பெற்றிருக்கிறோம்! மக்கள் பிரதிநிதி கள் என்ற முறையில் இதுபோன்ற கமிட்டிகளில் இடம்பெறுவது தவிர்க்க முடியாதது."

**தேர்தல் திருவிழா பார்க்கப்போன நீங்கள், தி.மு.க. கூட்டணிக்குத் திரும்ப வேண்டுமென ராமதாஸ் அழைப்பு விடுத்திருக்கிறாரே...?**

"எங்களுக்குத் தேர்தல் என்பது திருவிழா வல்ல. அரசியல் அதிகாரத்தைப் பெறு வதற்கான ஒரு களம். தேர்தல் கூட் டணி என்பது அதிகார பங் களிப்பு கிடைப்பதற்கான இடைக்கால ஏற்பாடு. அப் படிப்பட்ட ஒரு வாய்ப்பு அ.தி.மு.க. கூட்டணியில் எங்களுக்குக் கிடைத்த போது பயன்படுத்திக் கொண்டோம். மற்றபடி தமிழ், தமிழுணர்வு, தலித், ஈழப் பிரச்னை களில் தி.மு.க.வுக்கும் அ.தி.மு.க.வுக்கும் அணுகுமுறைகளில் பெரிய அளவு வித்தி யாசமில்லை. ஈழப் பிரச்னையில் இரண்டு கட்சியுமே மத்திய அரசு நிலை யைத்தான் கடைப் பிடிக்கிறார்கள். அ.தி. மு.க. ஆட்சியில் 'ஈழத் தமிழர்களை ஆதரிக்கிறோம்' என்று சொன்னார்கள். ஆனால் அவர்களைப் பற்றி பேசக்கூடாது என்றார்கள். இப்போதும் தி.மு.க. ஆட்சியில் பேச்சுரிமைக்குத் தடை



# கலைஞரே!”

போடப்படுகிறது. கீரிப்பட்டி, பாப்பாப்பட்டியில் தலித்துக்களுக்கு இரண்டு கட்சி ஆட்சியிலும் ஜனநாயக உரிமை மறுக்கப்படுகிறது. திண்ணியத்தில் தலித்துகள் கேவலமான முறையில் பாதிக்கப்பட்டபோது, இரண்டு கட்சியும் தட்டிக் கேட்கவில்லை.

கற்பனைக் கதாபாத்திரமான கண்ணகிக்குக் கண்ணீர் சிந்தும் கலைஞர், அம்பேத்கர் சிலைகள் உடைபடும்போது மௌனம் காப்பது என்ன நியாயமென்று தெரியவில்லை. தனிப்பட்ட முறையில் கலைஞர் ஒரு படைப்பாளியாக இருந்தாலும் தமிழை ஆட்சி மொழியாகவும் பயிற்சி மொழியாகவும் கொண்டுவர ஐந்தாவது முறை முதல்வராகும்போதுதான் முயற்சி செய்கிறார். மாறாக எம்.ஜி.ஆர். ஆட்சியில் இரண்டு முறை உலகத் தமிழ் மாநாடு நடத்தினார்.

**"சிறுதாவூர் நிலத்துக்கும் ஜெயலலிதாவுக்கும் தொடர்பு இல்லை!"**



பெரியார் எழுத்துச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தார். தஞ்சை தமிழ் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. ஈழத் தமிழர்களுக்கு ஆதரவும், அனுதாபமும் காட்டப்பட்டது. ஆக, இப்போதுள்ள நிலையில் இந்தப் பிரச்னைகளில் இரு கட்சிகளின் நிலைப்பாடும் கிட்டத்தட்ட ஒன்றுதான். அடிப்படையில் மாற்றம் தேவை. எனவே கூட்டணி மாற்றத்துக்கான தேவை எழவில்லை.''

**மேயர், நகர்மன்றத் தலைவர் பொறுப்புக்கு நேரடித் தேர்தல் கிடையாதென்று தி.மு.க. அரசு கூறியிருக்கிறதே...?**

"இந்த முடிவு தலித்துகளின் நலனுக்கு எதிராகத்தான் போகும். முதலமைச்சர், பிரதமர் ஆகியோரையே நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய பரிணாமம் அடைய வேண்டிய கட்டத்தில், தி.மு.க. அரசு இதுபோன்ற உத்தரவைப் போட்டது தவறு. இது அமல்படுத்தப்பட்டால் ஆள் தூக்குவதும் அடாவடித்தனமும் பணபலமும் தான் விளையாடும். உடனே இதை வாபஸ் வாங்க வேண்டும். பழைய முறை மீண்டும் வரவேண்டும்.''

**ஜெயலலிதாவுடன் கூட்டணியில் இருப்பதால்தான் சிறுதாவூர் பிரச்னையில் நீங்கள் தீவிரம் காட்டுவதில்லையா?**

"முற்றிலும் தவறு. சிறுதாவூரில் தற்போது பிரச்னைக்குள்ளாக்கப்படும் நிலங்களுக்கும் ஜெயலலிதாவுக்கும் நேரடித் தொடர்பு ஏதும் இல்லை என்று நாங்கள் ஆய்வு நடத்தியதிலிருந்து தெரிகிறது. மாளிகை பட்டா நிலத்தில் இருக்கிறது. பிரச்னைக்குள்ளாகும் தலித் நிலங்கள், வேலிக்கு அந்தப்புறம் இருக்கின்றன (உள்ளேயும் இருப்பதாக கம்யூனிஸ்டுகள் சொல்கிறார்கள்). 67ம் வருடம் தலித்துகளுக்குக் கொடுக்கப்பட்ட இந்த நிலங்கள், பலர் கைமாறி இருக்கின்றன. நிலங்கள் மீட்கப்பட வேண்டும்; உரியவர்களுக்கு ஒப்படைக்கப்பட வேண்டும்; தவறு நடந்திருந்தால் அதைச் சரிசெய்ய வேண்டும் என்பதே எங்கள் கோரிக்கை. ஆனால் நடப்பதைப் பார்த்தால், ஏதோ அரசியல் ஆதாயத்துக்காகவே கலைஞர் அரசு செயல்படுகிறதோ என்ற கேள்வி எழாமல் இல்லை. போடப்பட்டிருக்கும் விசாரணை கமிஷன் 67லிருந்தே விசாரிக்கட்டும். இந்த விஷயத்தில் தீவிரம் காட்டும் கலைஞர், பஞ்சமி நிலங்களை மீட்பதில் காட்டுவதில்லையே! பக்கத்தில் காருணையில் பஞ்சமி நிலத்தை மீட்க நடந்த போராட்டத்தில் உயிர் இழந்த தலித்துகளுக்கு இரண்டு சொட்டுக் கண்ணீர் விடவில்லையே!''

**ஈழம் மீண்டும் பற்றி எரிகிறதே!**

"இலங்கை அரசு என்றுமே இந்தியா


வுடன் நேசமாக இருந்ததில்லை. பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளுடன் உறவை பலப்படுத்திக்கொண்டு ஆயுதங்களை வாங்குகிறது. பிரதமராக இருந்தபோது கொழும்பு சென்ற ராஜீவ் காந்தியை அணிவகுப்பு பார்வையிடும்போது கொல்லப் பார்த்தான் சிங்களச் சிப்பாய். நமது தமிழ் மீனவர்கள் தாக்கப்படுகிறார்கள். இந்த நிலையில் எந்தவிதத்திலும் சிங்கள அரசுக்கு இந்தியா உதவக்கூடாது. 1991ம் ஆண்டுக்குப் பிறகு மக்கள் மனநிலையில் எழுந்துள்ள மாற்றங்கள் நியாயமானதுதான். அதற்காக ஒட்டுமொத்த தமிழினமும் சிங்கள அரசால் கொடுமையாகத் தாக்கப்படுவதை பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. ஆனால் துரதிருஷ்டவசமாக இந்த விவகாரத்தில் மத்திய அரசை வழி நடத்திச் செல்பவர்கள் தமிழர் நலன்களுக்கு விரோதமாகவே இருந்து வருகிறார்கள். மத்திய அரசையே வழிநடத்துவதாகச் சொல்லும் தி.மு.க. தனது கடமையிலிருந்து நழுவக் கூடாது."

**உள்ளாட்சித் தேர்தலில் நீங்கள் கூட்டணி மாறும் வாய்ப்பு உண்டா?**

"அ.தி.மு.க. கூட்டணியில் இருக்கும்போது, அதில் நீடித்திருக்கும் போது, கூட்டணி மாற்றம் என்ற கேள்வி எழுத் தேவையே இல்லை."

- ப்ரியன்

படம் : ஸ்ரீஹரி



# புத்ததேவின் பஞ்ச்!

இரண்டு நாள் பயணமாக கடந்த வாரம் சென்னைக்கு வந்திருந்தார் மேற்கு வங்க முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா. 'அனைவருக்கும் உணவு; வேலைவாய்ப்பு' என்ற இடதுசாரிகளின் பிரசாரத்தின் ஒரு பகுதியாக, புத்ததேவை சென்னை கூட்டத்தில் பேசும்படி கட்சி மத்தியக் குழு பணித்தது. அவர் 'Z' பிளஸ் பிரிவு பாதுகாப்பில் இருப்பவர் என்பதால், கூடவே எட்டுப் பாதுகாப்பு அதிகாரிகளும் அவருடன் வந்திருந்தனர்.

சனிக்கிழமை மாலை சென்னை ஷெனாய் நகரில் பொதுக்கூட்டம். முதல் நாள் இரவே புத்ததேவ் வந்துவிட்டார். சென்னை - கொல்கத்தா நேரடி விமானம் மாலையில்தான் என்பதால், ஞாயிறு மாலைதான் புறப்பட்டுச் சென்றார். தாஜ் கொரமாண்டல் ஓட்டலில் தங்கியிருந்த அந்த இரண்டு நாட்களில், தமிழகத்தின் தொழிலதிபர்கள் சிலரைச் சந்தித்துப் பேசினார்.


'டாடா' நிறுவனம், தங்களது 'மக்கள் கார்' தொழிற்சாலையை மே.வங்கத்தில் ஆரம்பிக்க முன்வந்திருப்பது, மற்ற பல தொழில் அதிபர்களையும் மே.வங்கம் மீது கவனம் கொள்ள உதவியிருக்கிறது. சென்னையில் புத்ததேவை அசோக் லேலேண்ட், முருகப்பா குழுமம், டி.வி.எஸ். சன்மார் குழுமம், லட்சுமி மில்ஸ் நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் தனித்தனியே சந்தித்துப் பேசினார்கள்.

"காங்கிரஸ் ஆட்சியில் நாட்டுப் பொருளாதாரம் சீர் குலைந்து கொண்டிருக்கிறது. விவசாயிகள் தற்கொலை மிகவும் பரிதாபமானது. காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளில் எங்களுக்கு உடன்பாடு இல்லை. பி.ஜே.பியா, காங்கிரசா என்ற கேள்வி வரும்போது, எங்கள் ஆதரவு காங்கிரசுக்கு அவ்வளவுதான்" என்று பொதுக் கூட்டத்தில் விளாசிய தேவ், "இந்தியாவின் அணுக் கொள்கை குறித்து, அமெரிக்க நாடாளுமன்றத்தில் விவாதிக்கிறார்கள். ஆனால் அது குறித்து மத்திய அரசு இந்தியப் பாராளுமன்றத்தில் விவாதிக்கத் தயாராக இல்லை என்பது கேவலமானது!" என்று காங்கிரஸ் முகத்தில் விட்டாரே ஒரு பஞ்ச்!

- மௌலி

சென்னை, அரும்பாக்கம் எம்.எம்.டி.ஏ. காலனியில் உள்ள எம்.ஜி.ஆர். மூன்றாம் தெரு. அங்கே ஒரு டிங்கரிங் ஷாப். தகடுகளைத் தட்டும் ஒலியும் க்ரீச் க்ரீச்சென்று வெல்டிங் இயந்திரத்தின் ஓசையும் கலந்து எழுகின்றன. அவற்றின் இடையிடையே ஆச்சர்யமாக ஒலிக்கிறது மந்திர சப்தம்! அத்தனை கசமுசாவுக்கு மிடையே தன் ஒழுங்கில் இயக்கிக் கொண்டிருக்கிறது ஓர் அதிசய வகுப்பறை.

"முதலில் உடலைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்... அந்தச் சுத்தமில்லாமல் எந்த அர்ச்சகனும் பெருமாளைத் தொடக் கூடாது" என்று அடிப்படைகளைக் கற்றுத் தந்து கொண்டிருக்கிறார் உ.வே.நம்பிள்ளை ராமானுஜாச்சார்யார். 'திருக்குலத்தார்' என்று அழகாக அழைக்கப்படும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் உள்பட பல்வேறு வகுப்பினர் அங்கே அமர்ந்து பாடம் கேட்கிறார்கள்.




• நம்பிள்ளை ராமானுஜாச்சார்யார்

"மானஸ ஆராதனம், மானஸ யாகம் எல்லாம் பண்ணிவிட்டு அதன் பிறகு பிராணாயாமம் பண்ணிவிட்டுத்தான் பெருமாள் சன்னிதிக்குள் நுழையணும். அப்போதுதான் அர்ச்சகனுக்குத் தேஜஸ் வரும்" என்று விளக்கிவிட்டு, 'பிராணாயாமத்தை இப்படித்தான் செய்ய வேண்டும்' என்று செய்தும் காட்டுகிறார். மூச்சை உள்ளிழுத்து விரல் கணுக்களில் எண்ணி, மனத்துக்குள் மந்திரம் ஜபித்து பிராமணர்களுக்கு மட்டுமே உரியதென இன்றும் பலரால் கருதப்படும் அனைத்தையும் உபதேசிக்கிறார் நம்பிள்ளை ராமானுஜாச்சார்யார்.

ராமானுஜர் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சொன்னதுதான்; செய்ததுதான் - நாராயண மந்திரம் அனைத்து மனிதர்களுக்கும் உரியது என்று பிரகடனம் செய்து வகுப்பு பேதங்களைப் பொடியாக்கினார். 'சாத்தின முதலிகள்' என்ற பிராமணர்களுடன் 'சாத்தாத முதலிகள்' என்னும் பிராமணர் அல்லாதாரும் அரங்கன் சேவையில் ஈடுபட வழிவகை செய்தார் ராமானுஜர். ஆனால் காலப் போக்கில் மீண்டும் ஜாதி பேதம் தலை தூக்கிவிட்டது. எனினும், 1942 வரையில் கூட, அரசு நிர்வாகத்திலிருந்த வைணவ திருக்கோயில்களில் எல்லாம் பிராமணரல்லாதாருக்கும் பிரபந்தம் ஓதும் உரிமையும் பொறுப்பும் இருந்தன.

அனைத்து பெருமாள் கோயில்களிலும் தினமும் ஆழ்வார் பாசுரங்கள் பூஜை முறையில் இணைந்திருக்கின்றன. ஆண்டாள் பாசுரத்தை ஓதிவிட்டுத்தான் பூஜைகளையே ஆரம்பிப்பார்கள். பிராமணர்களும் பிராமணரல்லாதாரும் மாற்றி மாற்றி இரண்டிரண்டு வரிகளாக ஓதும் பழக்கம் 1942வரை இருந்தது.

"இந்தப் பழக்கம் எதனால், எப்படி மறைந்தது என்பது தெரியவில்லை. ஆனால் அதை மீட்டாக வேண்டும்" என்கிறார் ஸ்ரீஹரி மடத்தை இதற்காகவே நடத்தி வரும் நம்பிள்ளை ராமானுஜாச்சார்யார்.



# யாரும் வரலாம் வேதம் படிக்க!

"இன்னொரு விஷயம் தெரியுமா...? இன்றைக்கு அனேகம் கோயில்களில் 'சாற்றுமுறை' என்று அழைக்கப்படும் பாசுரம் ஓதும் பழக்கமே ஒழிந்துவிட்டது! வேறுபல கோயில்களில் பூஜை செய்ய அர்ச்சகர்களே இல்லை! வழிவழியாக அர்ச்சகர்களாக இருந்து வந்தவர்கள் அந்தப் பொறுப்பை விட்டுவிட்டு வெளி நாட்டு மோகத்தில் பறந்து போய்விட்டார்கள் அல்லது வேறு வேலைக்குப் போய்விட்டார்கள். தஞ்சாவூர், திருநாங்கூர், நவதிருப்பதிகள் போன்ற பல இடங்களில் ஒரே அர்ச்சகர், ஒன்றுக்கு மேற்பட்ட கோயில்களுக்கு ஓடி ஓடிப் போய் பூஜை செய்யும் நிலை. நூற்றைம்பது பேர் திவ்யப்பிரபந்த பாராயணம் செய்த திருவல்லிக்கேணியில் இன்று ஆறு - ஏழு பேர்தான் இருக்கிறார்கள். இருநூற்றைம்பது பாராயணக்காரர்கள் இருந்த காஞ்சியில் இன்று இருபது பேர்கூட இல்லை! அவ்வளவு ஏன், நாதமுனிகள் அவதரித்த காட்டுமன்னார்கோவிலில் இன்றைக்கு ஒரே அர்ச்சகர்தான். அவரும், 'எனக்குப் பிறகு இந்தச் சேவைக்கு யார் இருக்கிறார்கள்?' என்று கவலைப்படுகிறார்" என்று அடுக்கிக்கொண்டே போகிறார் நம்பிள்ளை.

இந்தப் பற்றாக்குறையைப் போக்கவும் ஜாதி வேறுபாட்டைக் களையவும் தான் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார் நம்பிள்ளை ராமானுஜாச்சார்யார்.

முதல்கட்டமாக 1981-இல் திராவிட வேத வித்யாஸ்ரமம் என்று ஏற்படுத்தி, திவ்யப்பிரபந்தம் மட்டும் கற்றுத் தரத்

தொடங்கினார். இது மூன்று ஆண்டு பயிற்சி வகுப்பு.

இதன் பிறகு ஆகம சாஸ்திர பயிற்சி வகுப்பு தொடங்கி, இதுவரை பதினேழு பேருக்கு ஆகமப் பயிற்சி அளித்திருக்கிறார். இந்தப் பதினேழு பேர் இன்று தனியார் நிர்வகிக்கும் கோயில்களில் பணியாற்றுகிறார்கள். இத்தனைக்கும் இவர் பயிற்சி சான்றிதழ் எதுவும் தருவதில்லை. நம்பிள்ளையிடம் பயிற்சி பெற்றதே நல்ல சான்றிதழ் என்னும் அளவுக்கு இன்று இவருக்கு அங்கீகாரம் பெருகியிருக்கிறது.



**"நடக்க வேண்டியதை நடத்த முயல்கிறேன்!"**

தற்போது, ஸ்ரீ வைஷ்ணவ அர்ச்சகர்கள் குழு மற்றும் பாஞ்சராத்ர வைணவர்கள் அறக்கட்டளை இவற்றின் ஆதரவோடு முழுமையான திட்டம் வகுத்து ஓராண்டு கால அர்ச்சகர் பயிற்சித் திட்டத்தைத் தொடங்கி நடத்தி வருகிறார். சென்னையில் அரும்பாக்கம் உள்ளிட்ட மூன்று மையங்களில் 78 மாணவர்கள் ஜாதி பேதமின்றி அர்ச்சகர் பயிற்சி பெறுகிறார்கள். பாஞ்சராத்ர ஆகம முறைப்படியான பயிற்சி இது.

சரி, பயிற்சி வகுப்பு நடத்த நம்பிள்ளைக்கு என்ன தகுதி என்று கேட்கிறீர்களா? காஞ்சிபுரம் அருகே செய்யூரில் பிறந்த இவர், அஹோபில மடத்தின் 44வது பட்டம் வகித்த முக்கூர் ஸ்ரீமத் அழகியசிங்கர் ஸ்வாமியிடம் சீடராக இருந்தவர். பதினாறு வைணவ கோயில்களுக்குக் கும்பாபிஷேகம் செய்து வைத்திருக்கிறார். இத்துறையில் இருபத்தொரு வருட அனுபவம் பெற்றவர் என்பதுடன் பல கோயில்களிலுள்ள ஆராதனை முறைகளைக் கவனித்தும், சாஸ்திர நூல்களை ஊன்றிப் படித்தும் பாடத்திட்டத்தை உருவாக்கியிருக்கிறார். தவிர, வைணவ திவ்ய தேசங்கள் அனைத்துக்கும் பாத யாத்திரையாகச் சென்று வந்திருக்கிறார். பத்ரிகாசிரமம் செல்ல (3500 கி.மீ.) நான்கு மாதங்கள் ஆகியிருக்கின்றன!

'புரட்சிகரமான இந்தப் பணியில் ஈடுபட எது தூண்டியது?' என்று கேட்டால்: "புரட்சியாவது ஒன்றாவது..." என்கிறார் நம்பிள்ளை. "வடக்கே மத்திய பிரதேசத்தில் பிராமணரல்லாதார் அர்ச்சகர்களாக இருக்கிறார்கள். பாவன நரசிம்மர் ஆலயத்திலும் அப்படித்தான்... இயல்பாக நடக்க வேண்டியதை நடத்த முயற்சி செய்து வருகிறேன்; அவ்வளவுதான்'' என்கிறார்.

சம்ஸ்கிருத அறிவு இல்லாதவர்களும் இவர் வகுப்புகளில் சேரலாம். பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும். பூணூல், பஞ்சஸம்ஸ்கார தீக்ஷை என்று அனைத்தையும் முறைப்படி ஏற்று நியமங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். முக்கியமாக, பணத்துக்காக அன்றி பெருமாளுக்குச் சேவை செய்யும் உந்துதலுடன் வரவேண்டும் - இது மட்டுமே நம்பிள்ளை ராமானுஜாச்சார்யார் விதிக்கும் நிபந்தனை!

- சுப்ர.பாலன்

படங்கள் : ஸ்ரீஹரி

# அடங்கிப்போன வதந்தி!

'சிவாஜி' படம் பற்றிய பலவித வதந்திகளை ஏவி.எம். சரவணன் அவர்களின் விளக்கமான பேட்டி அடங்கிப்போக வைத்துவிட்டது!

**- த.சத்தியநாராயணன், அயன்புரம்**

சூர்யனின் 'தீராப்பகை' கவிதையின் வார்த்தைப் பிரயோகம் உச்சி வான செங்கதிராய் இறங்கியது.

**- முகவை முத்துசாமி, ராம்நாட்**

'அட்டை' - ஜெராவின் படைப்பு வெகு அருமை. கண்ணம்மாவின் நெஞ்ச சுமை நயமாக எடுத்துரைக்கப்பட்டிருந்தது.

**- ரா.கிருஷ்ணமூர்த்தி, சென்னை**

லஜ்ஜாவதியின் சாசனம் திரைப்பட விமர்சனம் கனகச்சிதம்.

**- சாந்திசுந்தர், நெய்வேலி**

பலாச்சுளையை தேனில் நனைத்துச் சாப்பிட்டதுபோல இருந்தது அமரர் கல்கி + கோபுலு காம்பினேஷன்.


**- ரேவதிப்ரியன், ஈரோடு**

கடைசிப் பக்க வாழும்வரை போராடு புகைப்படம் ஒரு கதையையே சொல்லிவிட்டது.

**- குவளை எழில், சென்னை**

சுறுசுறுப்பாகத் தன் கடமையைச் செவ்வனே செய்யும் புதுவை முதல்வர் ரங்கசாமி பாராட்டுக்குரியவர்.

**- கே.வி.ராமன், சென்னை**



அகிம்சை வழியில் பெற்ற சுதந்திரத்தை ஆயுதங்களின் பாதுகாப்போடு கொண்டாட வேண்டியுள்ள இச்சூழலில் தலையங்கம் கவனிக்கப்பட வேண்டியது.

**- ஆர்.ராமசுப்ரமணி, திருவாரூர்**

'சினிமாவின் முகம் நிச்சயம் மாறும்' எனக் கூறும் இயற்கை பட டைரக்டர் ஜனநாதனின் ஆசை கூடிய விரைவில் நிறைவேறும்.

**- ஆர்.லட்சுமி, மதுரை**

இரண்டாம் பரிசு பெற்ற 'அட்டை' சிறுகதையை வாசித்து முடித்தபோது இதயம் கனத்து இருவிழிகளும் ஈரமாயின.

**- ரா.கீதாஞ்சலி, திருக்கோவிலூர்**

சிறந்த நேர்மையான நீதிபதி இன்றைய சூழ்நிலையில் தேவை. நீதிபதி சந்துரு மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை உள்ளது.

**- அ.அனீஸ், திருச்சிராப்பள்ளி**

அப்பண்டிசைட்டிஸ் பற்றி அறிந்து அதிர்ந்து போனோம். எச்சரிக்கை செய்ததற்கு நன்றி!

**- கதிரவன், திருவண்ணாமலை**

**அட்டைப் படம் : ஸ்ரீஹரி**

# தலைமுடியின்

நங்கநல்லூரில் டீச்சராக இருக்கும் புவனாவுக்கு வயது முப்பதுதான். அதற்குள்ளாகவே தலைமுடியெல்லாம் உதிர்ந்து போய், வகிடு எடுக்கும் இடம் வெட்டவெளியாய் இருக்கிறது. பார்ப்பவர்களெல்லாம் துக்கம் விசாரிப்பது போலக் கேட்பதால், புவனா மனதளவில் தளர்ந்து போயிருக்கிறார். தலைமுடியின் ஆயுட்காலம் மூன்று முதல் ஆறு வருடங்கள் என்பதால் பெண்களுக்கு முடி கொட்டுவது சாதாரண விஷயம்தான். ஆனால் திடீரென்று தலைமுடி அதிகமாக உதிர்ந்து போய் ஆண்களைப் போல் பெண்களுக்கும் வழுக்கை விழுவது சமீப காலத்தில் அதிகரித்து வருவதுதான் அதிர்ச்சியான விஷயம். தலை போகும் அவசரத்தோடு ஆபீசுக்கு ஓடுபவர்களுக்குத் தலைமுடியைக் கவனிக்க எங்கே நேரமிருக்கிறது?

“தலைமுடியும் நகமும் ஏதோ அழகு சமாசாரம் மட்டுமே என்று நினைப்பது தப்பான விஷயம். ஒரு சாதாரண சூட்கேஸைப் பார்த்தே உள்ளே என்னவெல்லாம் இருக்குங்கிறதைச் சொல்லிட முடியும். தலை முடியும், நகமும் சூட்கேஸ் மாதிரிதான். நம்ம உடம்புல என்னென்ன வியாதி இருக்குங்கிறதை வெளிப்படையா காட்டிடும். முடி உதிருவதெல்லாம் ஏதாவது உடல் உபாதையின் அறிகுறியா இருக்கும். அதைப் புரிஞ்சுக்காம, முடி உதிருவதை நிறுத்த ப்யூட்டிஷியனிடம் ஆலோசனை கேட்பது, கண்ட கண்ட எண்ணெய்களைப் பயன்படுத்துவதெல்லாம் ஆபத்தில்தான் முடியும்” என்கிறார் டாக்டர் எஸ்.முருகுசுந்தரம். தலைமுடி, நகம் மற்றும் தோல் சம்பந்தப்பட்ட நிபுணராகப் பதினைந்து வருடகால அனுபவமுள்ள இவர், சென்னை கீழ்ப்பாக்கத்திலுள்ள ஸ்கின், ஹேர் & நெய்ல் கிளினிக்கின் தலைவர். முகத்திலிருக்கும் தேவையில்லாத முடியை ‘டயோடு லேஸர்’ மூலமாக நீக்குவதில் ஸ்பெஷலிஸ்ட்.

“பொதுவாக உடம்பில் ஏற்படும் உபாதைகளால்தான் தலை முடி உதிர ஆரம்பிக்கிறது. ஏதாவது அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களுக்குத் தலைமுடி உதிருவது நிச்சயம். கடுமையான ஜுரம், திடீரென்று உடல் எடை குறைந்து போவது, தைராய்டு சுரப்பியின் தடுமாற்றம், விட்டமின் ஏ அதிகப்படியாக இருப்பது, கருப்பை சம்பந்தமான பிரச்னை போன்றவற்றால் தலைமுடி உதிரும். பெரும்பாலும் தலைமுடிக்குத் தலைவலியாக இருப்பது பொடுகுப் பிரச்னைதான்.

எப்போதும் தலையில் எண்ணெய்ப் பிசுக்கோடு அலைபவர்களுக்குப் பொடுகு வர பரிபூரண வாய்ப்புண்டு. அழுக்கு, தோலில் வரும் செதில்கள் மற்றும் Pityrosporum ovale என்னும் பூஞ்சைக் காளான் தொற்று இவை மூன்றும் சேர்ந்துதான் பொடுகை உண்டாக்குகின்றன. பொடுகை முழுவதும் நீக்க முடியாது. ஆனால் அதிகமாகிவிடாமல் கட்டுப்படுத்த முடியும். அதற்கு ஒரே வழி, நல்ல ஷாம்பு போட்டுத் தினமும் தலை குளிப்பதுதான்.

சிலபேர் எண்ணெயை தலையில் ஊற வெச்சுட்டு அடுத்த நாள்தான் குளிப்பாங்க. இது தப்பான விஷயம். நல்ல ஷாம்பு போட்டு உடனே குளிச்சுடணும். சியக்காயைவிட ஷாம்புதான் நல்லது. நுரை வந்தால் மட்டுமே தலையிலிருந்து அழுக்கு வெளியேறும். குளிச்சு முடிச்சதும் தலை முழுக்க எண்ணெய் தடவாமல், வெளிப்பக்கம் மட்டும் தலை படிவதற்காக எண்ணெய் தடவலாம்” என்கிறார் டாக்டர் முருகுசுந்தரம்.

தலைமுடி உதிருவது தவிர வேறு என்ன மாதிரியான தோல் வியாதிகளோடு நோயாளி



# எதிரிகள்!

கள் வருகிறார்கள் என்கிற கேள்வியையும் டாக்டரிடம் முன் வைத்தோம்.

"தலைமுடியைப் போலவே அக்கறையோடு கவனிக்க வேண்டிய இன்னொரு விஷயம் நகங்கள். ஆனால் பலருக்கு நகங்களைச் சுத்தமா வெச்சுக்கவே நேரமில்லை. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்னு சொல்லுவாங்க. உண்மையில் அகத்தின் அழகு நகத்திலேயே தெரிந்து விடும். நாற்பதுவிதமான வியாதிகளை நகத்தைப் பார்த்தாலே சொல்லிடலாம். இப்போ கொஞ்சம் விழிப்புணர்ச்சி உண்டாகி நகம் சம்பந்தமான ட்ரீட்மெண்ட்டுக்கும் வருகிறார்கள். அதேபோல் வெண்புள்ளியை வெண் குஷ்டம்னு சொல்லி லாட்ஜ் வைத்தியர்கள் பரப்பி விடும் பீதியால் மனதளவில் பாதிக்கப்பட்டு நிறைய பேர் வர்றாங்க.

முகப்பருவினால் உண்டாகும் தழும்பு, முகத்தில் வரும் கரும்புள்ளிகள், கரும் திட்டுக்கள் போன்றவற்றால் பாதிக்கப்படுபவர்களும் உண்டு. இவர்கள் Micro dermabarsion என்னும் பக்க விளைவில்லாத, வலியில்லாத நவீன சிகிச்சையின் மூலம் இப்பிரச்னையிலிருந்து விடுபடலாம்.

அடுத்து சொரியாஸிஸ். மூன்றில் ஒரு பகுதியினர் இந்தப் பிரச்னையால் பாதிக்கப்படுகின்றனர். சொரியாஸிஸ் என்பது நமது தோலில் உள்ள கெரட்டீன் என்னும் புரதத்தின் கட்டமைப்புக் குறைபாடால் வரும் ஒரு பிரச்னை. அல்ட்ரா வயலெட் லைட் ட்ரீட்மெண்ட் என்னும் மிகச் சிறந்த சிகிச்சை மூலம் சொரியாஸிஸ் பிரச்னைக்குத் தீர்வு காணலாம். நீரிழிவு, பி.பி. போன்று இதனையும் முழுமையாகக் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளலாம்" என்கிறார் டாக்டர் முருகுசுந்தரம்.

* டாக்டர்
எஸ். முருகுசுந்தரம்



- ஜெ.ராம்கி



# கல்கி



2006 ஆகஸ்ட் 27
விய ஆவணி 11
மலர் : 65
இதழ் : 4

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்.

## பசப்பும் பாகிஸ்தான்; தடுமாறும் பிரிட்டன்!


ஆஃப்கானிஸ்தானோ, லெபனானோ, ஈராக்கோ எங்கேயும் பயங்கரவாதத்தைப் போர் நடத்தி அழிக்க முடியாது; அது மேலும் வன்மத்தையும் பயங்கரவாதத்தையும் வளர்க்கவே செய்யும் என்பதற்கு மற்றொரு உதாரணம் கிடைத்திருக்கிறது.


லண்டன் விமான நிலையத்திலிருந்து அமெரிக்கா செல்ல விருந்த விமானங்களை அழிக்க ஏன் சதி தீட்ட வேண்டும்? ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களை மிகக் குரூரமான இந்த முறையில் கொன்று குவிப்பதால் என்ன லாபம்?

பிறர் அழிவிலும் துன்பத்திலும் காணும் வக்ரமான திருப்தியைத் தவிர, இத்தகைய செயலால் வேறென்ன ஆதாயம்?

நியாயமான காரணத்துக்காகப் போராடினால்கூட வன்முறையைக் கைகொள்வதை மன்னிக்க முடியாது. அவ்வாறிருக்க, பயங்கரவாதத்தை வளர்க்கவும் தூண்டவும் அனைத்தையும் செய்துவரும் பாகிஸ்தானை எவ்வாறு மன்னிப்பது?

தாக்குதலுக்குள்ளான பிரிட்டனே இவ்விஷயத்தில் தடுமாறியிருக்கிறது. ஏர்போர்ட் சதியை முறியடிக்கும் வகையில் பிரிட்டிஷ் உளவுப்பிரிவான ஸ்காட்லாந்து யார்டு, மெச்சத்தகுந்த வகையில் பணியாற்றியிருக்கிறது. ஆனால், ஸ்காட்லாண்ட் யார்டுக்குத் தகவல் அளித்ததே பாகிஸ்தான்தான் என்று செய்திகள் வருகின்றன. இதனால் பிரிட்டிஷ் அரசும் காவல்துறையும் பாக். அதிபருக்குப் பகிரங்கமாக நன்றி தெரிவித்துள்ளன. இத்தனைக்கும் இந்தச் சதி தொடர்பாக இதுவரை கைதாகியிருப்பவர்களுள் பெரும்பாலானோர் பாகிஸ்தானி இளைஞர்கள்தான். பிரிட்டனில் பிறந்து வளர்ந்த இந்த இளைஞர்கள் பேரில் வலுவான சந்தேகம் இருக்கிறது. இவர்கள் பாகிஸ்தான் சென்று பயிற்சி பெற்றதற்






கான ஆதாரங்கள் அகப்பட்டிருக்கின்றன.

பாகிஸ்தானில் பதிப்பிக்கப்பட்டுவரும் நம்பகத்தன்மைமிக்க நடுநிலை நாளேடான 'தி ஹெரால்ட்' குட்டை உடைத்திருக்கிறது - 'ஜிஹாத்' என்ற போர்வையில் நன்மக்களை ஒழித்துக்கட்டுவதில் ஈடுபட்டு வரும் லஷ்கர் ஈ தொய்பா, ஜெய்ஷ் இ முகம்மத் போன்ற அமைப்புகளுக்கு பாகிஸ்தான் உளவுத்துறையான ஐ.எஸ்.ஐ. நிதி உதவி செய்து வருவதாகச் சொல்கிறது 'தி ஹெரால்ட்'. மாதந்தோறும் இந்நிறுவனங்கள் ஐ.எஸ்.ஐ.யிடமிருந்து இரண்டு முதல் மூன்று மில்லியன் ரூபாய் வரை பெறுகின்றன. இதைத் தவிர, தொலைத் தொடர்பு கருவிகள், ஆயுதங்கள், செயல்திட்ட ஆதரவு என்று பலவிதமான உதவிகளை ஐ.எஸ்.ஐ. இந்தப் பயங்கரவாத அமைப்புகளுக்கு வழங்கி வருவதாகத் தெரிகிறது. வடமேற்கு பிராந்தியத்தில் மட்டும், பயிற்சி பெற்ற ஓராயிரம் பயங்கரவாதிகள் முகாமிட்டிருக்கிறார்கள். மேலும் பல்லாயிரக்கணக்கானோர் பாகிஸ்தான் முழுவதும் பரவிக் காணப்படுகிறார்கள்.

இந்நிலையில் பிரிட்டன், பாகிஸ்தான் மீது முழு நம்பிக்கை வைத்து நன்றி தெரிவிப்பது அறிவுடைமையும் அல்ல; ராஜதந்திரமும் அல்ல.

முஷாரஃப் ஜனநாயக முறையில் தேர்வான அதிபர் அல்லர்; ராணுவப் புரட்சியில் ஆட்சியைக் கைப்பற்றியவர். அவரை நம்பவே முடியாது என்பதற்கு இந்தியாவின் பலப்பல கசப்பான அனுபவங்களே சான்று. இப்போது உலகளாவிய பயங்கரவாதத்துக்கும் பாகிஸ்தான் ஆதரவு தர ஆரம்பித்திருப்பது, வளரும் நாடுகளுக்கு மட்டுமின்றி, வளர்ந்து விட்ட நாடுகளுக்கும் பெரிய அச்சுறுத்தல்.

பிரிட்டனும் சரி, அமெரிக்காவும் சரி, இனியேனும் பாகிஸ்தானிடம் கொண்டுள்ள அனுதாபத்தை அல்லது தவறான நன்றியுணர்வைக் கைவிட வேண்டும். பொருளாதார, வர்த்தகத் தடைகள் மூலம் பாகிஸ்தானுக்கு அழுத்தம் கொடுத்து பயங்கரவாதத்தின் பயிற்சிக் களங்களை அழிக்கச் செய்ய வேண்டும். அதேசமயத்தில், உலகின் முஸ்லிம் நாட்டுத் தலைவர்கள் அனைவரையும் அழைத்துப் பேசி, ஐ.நா. சபையின் துணையுடன் பயங்கரவாதப் போக்குக்கு முடிவு கட்டுவது குறித்துத் தீவிர ஆலோசனை நிகழ்த்த வேண்டும். உலகம் ஒன்று சேர்ந்து சிந்தித்தாலொழிய இந்த மூர்க்கத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாது. இந்தியா தனது அயலுறவுக் கொள்கை மூலம் இதனை வலியுறுத்துவது அத்தியாவசியமாகிறது. ●



இயக்குனர் ஞானராஜசேகரன் எடுக்கும் பெரியார் திரைப்படத்துக்கு 95 லட்ச ரூபாய் நிதியுதவி செய்திருக்கிறது தமிழக அரசு. முதல் தவணையாக 35 லட்சமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. 'முழு நிதியுதவி செய்ய வேண்டுமா, ஒரு பகுதி செய்தால் போதாதா' என்றும், 'ஏன் வரிவிலக்கு கொடுத்தால் மட்டும் போதாதா' என்ற கருத்தோட்டமும் கிளம்பி இருக்கிறது. இது குறித்து வெவ்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்களின் கருத்து என்ன?

# "பெரியாருக்கு மட்டும் போதாது!"

இல.கணேசன்

*(பா.ஜ.க. தேசிய துணைத் தலைவர்):* காங்கிரஸ் கட்சிக்கு மகாத்மா காந்தி அவர்கள் ஒரு வழிகாட்டி. அவரைப் பற்றிய திரைப்படம் எடுக்க மத்திய அரசு நிதியுதவி செய்தது. அது போலவே திராவிட இயக்கங்களுக்கு பெரியார் ஒரு மாபெரும் தலைவர்; வழிகாட்டி. எனவே கலைஞர் தலைமையிலான அரசு, பெரியார் பற்றிய திரைப்படத்துக்கு முழு நிதியுதவி செய்வதில் எந்த ஆச்சர்யமும் இல்லை. இதுவரை யாரும் படத்துக்காக



• 'பெரியார்' படத்தில் நடிகர் சத்யராஜ்...

நிதியுதவியை ஆட்சேபிக்கவில்லை. இதே அடிப்படையில் மற்ற தலைவர்களைப் பற்றியும் படம் எடுக்க தமிழக அரசு நிதியுதவி செய்ய வேண்டும். குறிப்பாக, தேசியம் மற்றும் தெய்வீகத் தலைவராக விளங்கிய முத்துராமலிங்கத் தேவர் பற்றிப் படம் எடுக்க தமிழக அரசு உதவ வேண்டும்.

**பரிதி இளம்வழுதி**

*(தமிழக செய்தித்துறை அமைச்சர்):*

சாமான்யர்களையும் சரித்திர சாதனை செய்யுமளவுக்கு இன்று உயர்த்தியிருப்பவர் பெரியார்தான். சமூக நீதி, பெண் விடுதலை, மூடநம்பிக்கை ஒழிப்பு போன்ற விவகாரங்களில் பெரியார் செய்த பெரும் பணியை யாரும் மூடி மறைக்க முடியாது.

படம் எடுக்க நிதியுதவி குறித்து கலைஞர் தக்க நேரத்தில் பரிசீலனை செய்வார்.

**செல்வப் பெருந்தகை**

*(விடுதலைச் சிறுத்தைகள்):*

பெரியார் பற்றிய திரைப்படம் எடுப்பதற்கு நிதியுதவி அளிப்பதைவிட, தமிழக அரசே தயாரித்துவிடலாம். யாரும் ஆட்சேபிக்கப் போவதில்லை. அதே நேரத்தில் பெரியார் பரப்பிய கொள்கைகளின் முன்னோடியாக விளங்கியவர் அயோதிதாஸ் பண்டிதர். தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த இவருக்கு, கடற்கரைச் சாலையில் ஒரு சிலை வைக்க வேண்டுமென்று வெகு நாட்களாக நாங்கள் போராடி வருகிறோம்.

பண்டிதருக்குச் சிலை வைக்க இரண்டு



• பரிதி இளம்வழுதி



• இல.கணேசன்



• செல்வப் பெருந்தகை

அவரது வாழ்க்கை தமிழ் மக்கள் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டிய ஒன்று. திரை உலகம் முழுக்க, முழுக்க வர்த்தகமயமாக இருக்கும்போது, பெரியார் பற்றிய படம் தயாரிக்க முன் வந்துள்ளவர்களைப் பாராட்டினால் மட்டும் போதாது; முழு நிதியுதவி செய்து ஊக்குவிக்க வேண்டும் என்றே கலைஞர் உதவிக் கரம் நீட்டியிருக்கிறார். திராவிட இயக்கத்தின் அடிநாதமாக இருக்கும் பெரியாரின் சீரிய பணிகளை எதிர்காலமும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் ஒரு நல்ல ஆவணமாக இந்தப் படம் இருக்கும். மற்ற மாபெரும் தலைவர்களைப் பற்றியும்


லட்சம்கூட செலவாகாது. இவ்விஷயத்தில் முதல்வர் செயல்படாதது வருத்தமாக இருக்கிறது. நாங்கள் அயோதிதாஸ் பண்டிதரைப் பற்றி படம் எடுக்கச் சொல்லவில்லை. சிலை வைக்கத்தான் கேட்கிறோம்.

பெரியார் கொள்கைகளை அனைத்து மக்கள் மனத்திலும் மறக்காமல் ஏற்ற நினைக்கும் கலைஞர், பண்டிதரை மறப்பது ஏனோ புரியவில்லை. இவ்விஷயத்தில் அவர் நல்லது செய்வார் என்று நம்புகிறோம்.

தொகுப்பு : ஸ்ரீநி

படங்கள் : ராஜன்

''எதுக்காக சட்டசபையிலிருந்து வெளிநடப்பு பண்றீங்க?''
''அதை டி.வி. கேமரா வச்சிருக்கறவங்ககிட்டதான் சொல்வேன்!''
- அம்பை தேவா





''அடிக்கடி நமது மன்னர் கடலில் போய்க் குளித்து விட்டு வருகிறாரே, ஏதாவது வேண்டுதலா?''
''நீ வேறு! வாலமீனுக்கும், விலாங்கு மீனுக்கும் கல்யாணம் நடந்தது உண்மையா என ஆராய்ச்சி செய்துவிட்டு வருகிறாராம்!''
- என்.பி.சாமி



''நமது மன்னரின் எல்லா வெற்றியிலும் நமது மகாராணிக்கும் பங்கு உண்டு...''
''எப்படி சொல்கிறாய்...?''
''மகாராணியிடம்

"மந்திரியாரே, நம் வீரர்கள் அநியாயத்துக்குத் தொடை நடுங்கிகளாக இருக்கிறார்கள். 'போர் வந்தாலும் வரலாம்' என்று ஒரு பேச்சுக்குச் சொன்னேன், அனைவரும் பயிற்சிக் கூடத்தை விட்டு ஓடிவிட்டார்கள். உடனே புகார் செய்ய வேண்டும். மன்னர் எங்கே?"

"அதோ அந்த சிம்மாசனத்துக்குப் பின்னால் ஒளிந்து கொண்டிருக்கிறார்!"

- டி.கே.சுப்பிரமணியன்



# மண்டையைப் பிளக்கும் மனைவி!

"என் மனைவி வெயில் மாதிரி..."

"எப்படி...?"

"மண்டையைப் பிளக்கறாளே..."

- கே.ஆனந்தன்

இருந்து தப்பித்தால் போதுமென்றுதானே மன்னர் வெளிநாடுகளுக்குப் படை எடுத்துப் போகிறார்..."

- கே.ஆனந்தன்



கடற்கரையிலேயே பாதி பொழுதுகளைக் கழிக்க நேர்ந்த என் ஆரம்ப கால சென்னை வாழ்வில், ஒருமுறையேனும் அங்கிருக்கும் சிலைகள் மீது சிந்தை குவிந்ததில்லை. கலைகளைப் பார்க்கும் ஆர்வத்தில் சிருஷ்டிக்கப்பட்ட சிலைகளை உதாசீனப்படுத்தியிருக்கிறேன். 'எதற்கிந்த சிலைகள் இப்பெரும் கடலழகை மறைப்பதுபோல' என்பது கூட எண்ணமாயிருந்தது.

ஒருவரைக் கேவலப்படுத்த இதைவிட எளிய வழி இல்லை. காக்கைக் குருவிகளுக்கு, கழிப்பிடமாகும் சிலையை நிறுவுவதன் மூலம் காலத்தை அசிங்கப்படுத்துகிறோம் என்ற என் ஒட்டுமொத்த சிறுபிள்ளைத்தனத்தையும் ஒரே நொடியில் பொடிபொடியாக்கியது சமீபத்தில் நிறுவப்பட்ட சிவாஜி கணேசனின் சிலை திறப்பு விழா.

ஒரு நூற்றாண்டுச் சாதனையாளரைக் கௌரவிக்க சிலையைத் தவிர நம்மிடம் வேறொரு சிறப்பான செய்கை என்ன இருக்கிறது? கடந்த தலைமுறையை நினைவுபடுத்தவும் வரும் தலைமுறைக்கு அச்சாதனையை எடுத்துக் கூறவும் சிலைகளே அத்தாட்சி. கலையுலகமே கூடி நின்று வணங்கிய அந்த விழா, வரலாற்றுப் பக்கங்களில் பொறிக்கப்பட வேண்டியது.

கடற்கரைக்குக் காற்று வாங்கப் போவதாக மட்டுமே கருதிய பலரும் முதன் முதலாக கண்களுக்கு ஒளியையும் கம்பீரத்தையும் வாங்கித் திரும்பினர். இதிகாசச் சிறப்புமிக்க இயல்புடைய நடிகர் திலகத்தின் சிலை, அவர் நடித்த பல சரித்திரப் படங்களின் வசனங்களை எனக்குள் பேசின. சிலையின் இடப் பக்கத்தில் இரண்டொரு காக்கைகள் அமர்ந்துவிட்டுப் பறந்து போயின. மனிதர்கள் மறந்து போனாலும் காக்கைகள் நடிகர் திலகத்தை மறக்காது. ஏனெனில், அவர் நடித்த முதல் படமான பராசக்தியில் வரும் அறிமுகப் பாடலே காக்கையிடம் கதை பேசுவதுதானே?

'கா... கா... கா... ஆகாரம் உண்ண அன்போடு எல்லோரும் ஓடிவாங்க' என்று காக்கைகளை அழைத்துத் தானியங்களைத் தூவிக்கொண்டே பாடும் அவரது நளினமும் முகபாவங்களும் எத்தனை ஆற்றல்மிக்கவையோ, அதே அளவு ஆற்றலை உள்ளடக்கியது அப்பாடலின் வரிகள். எழுதியவர், உடுமலை நாராயண கவி.

ஏறத்தாழ பத்தாயிரம் பாடல்களுக்கு மேல் எழுதிய உடுமலை நாராயண கவியை, அக்காலத்தில் கவிராயர் என்ற சிறப்புப் பெயராலேயே அழைப்பது வழக்கம். நாடக உலகிலும், சினிமா உலகிலும்



## நேற்றைய காற்று!

# மனிதர்கள் மறந்தாலும்...

நட்சத்திர அந்தஸ்தைப் பெற்ற கவிஞர் எனும் பெருமை அவருக்குரியது. தொடக்க காலங்களில் ஆன்மிகப் பாடல்களை எழுதியபோதும் திராவிட இயக்கங்களின் கருத்துகளை தன்னுடைய பாடல் மூலம் எழுதியதால் பகுத்தறிவுச் சிந்தனையாளராகவே இன்னும் அறியப்படுகிறார்.

'எச்சிலை தனிலே
எறியும் சோற்றுக்கு
பிச்சைக்காரர் சண்டை
ரோட்டிலே
இளைத்தவன் வலுத்தவன்
இனச்சண்டை பணச்சண்டை
எத்தனையோ இந்த
நாட்டிலே'

விரத நாட்களில் காக்கைக்குப் படைத்துவிட்டு உண்ணுகிற மரபை நாம் கொண்டிருக்கிறோம். காக்கையிடம் வடை திருடிய கதையைக் கேட்டு நரிகளின் தந்திரத்தை உணர்ந்திருக்கிறோம். காக்கை குருவி எங்கள் ஜாதி என்ற பாரதி பாட்டைக் குழந்தைகளுக்குச் சொல்லித் தருகிறோம். ஆனால், காக்கையிடம் என்றைக்காவது நம்முடைய அன்றாட அவஸ்தைகளை உரைத்திருக்கிறோமா?

# யுகபாரதி

**எ**ந்தப் பாடலானாலும் அதில் தன்னுடைய தனித்துவமான சமூக முத்திரைகளைப் பதிப்பவர் கவிராயர். எம்.ஜி.ஆர். பாடல், சிவாஜி பாடல், என்பன போல என்.எஸ்.கே. பாடல் என்ற வகையுமுண்டு. அந்த வகையை மிகைப்படச் செய்த புகழ் கவிராயரையே சேரும். அங்கதம் தொனிக்க தினசரி அல்லாட்டத்தை எத்தனையோ பாடல்களில் எழுதிக் காட்டியிருக்கிறார்.

'கொண்டவனும் கொண்டவளும்
குழந்தை குட்டியோடும்
கும்மாளம் போடுவது ஒண்ணிலே
- அவர்
கூச்சல் கிளப்பிக்கிட்டு
குஸ்திகளும் போட்டுக்கிட்டு
கோணிக்கொள்வார்
இருபத்தொண்ணிலே'

-கி.ராமநாதன் இசையில் என்.எஸ்.கே. பாடும் இப்பாடல் வெளிவந்த ஆண்டு 1955. 'முதல் தேதி' எனும் படத்துக்காக கவிராயர் எழுதியது. காலங்கள் ஓடிவிட்டன; கருத்தாளர்கள் மறைந்து விட்டார்



கள். ஆனால், எழுதி வைத்த வார்த்தைகள் இன்றைய மனிதனுக்கு - ஏன், நாளைய மனிதனுக்கும் கூடப் பொருந்தும்.

**ம**த்தியதர வர்க்கம்தான் கலை இலக்கியங்களின் மையம். மேலும் அல்லாமல் கீழும் செல்லாமல் கம்பிமேல் நடப்பது போல அந்த இதயங்கள் திணறும் திணறல்தான் தமிழ்ப் படைப்புலகத்தின் மிகுதியான பகுதிகளை ஆக்ரமித்திருக்கிறது. அலுவல் நிமித்தமும் ஒவ்வொரு நாளைக் கடத்த வேண்டிய நிர்பந்தத் தினாலும் அந்த மக்கள் அடையும் மனவேதனைகளை இம்மாதிரியான பாடல்கள் கொஞ்சமே கொஞ்சமேனும் குறைக்கும் இல்லையா?

பாரதிதாசனோடு நெருங்கிய தொடர்பு வைத்திருந்த கவிராயர், திரைப் பாடல்களில் தாசனுக்கு இணையான சீர்திருத்தக் குரலை எழுப்பியவர். 'இப்

• உடுமலை



**பாடலாசிரியனின்**

**தொழில்நுட்பச் சங்கடம்**

**எது தெரியுமா?**

படித்தான் இருக்க வேண்டும் பொம்பள' என்ற பிற்போக்குத்தனங்களை ஒரு புறத்திலும் 'என்றுதான் திருந்துவதோ நன்றிகெட்ட ஆடவருலகம்' என்ற முற்போக்கு சினங்களை மறுபுறத்திலும் முன்மொழிந்தவர் உடுமலை.

ஒரு பாடலாசிரியனின் தொழில் நுட்பச் சங்கடம் இங்குதான் வெளிப்படுகிறது. பெண்ணை உயர்த்தி ஒரு பாடலும் பெண்ணை அடக்கி ஒரு பாடலும் எழுத வேண்டிய நிலை சினிமாப் பாடலாசிரியனுக்கு அமைந்துவிடுகிறது. இந்த அவஸ்தையிலிருந்து யாருமே தப்பிக்க முடியாது. ஆனாலும் கவிராயர் மாதிரி சுயசிந்தனையாளர்கள் ஒரு காலத்துக்கு மேல் தமது ஓங்கிய கையால் நேரும் சங்கடத்தை வீழ்த்திவிடுவார்கள். கவிராயர், கதை மாந்தர்களுக்குப் பாடல் புனைந்த போதும் அதில் ஊடு பாவாக உச்சரித்த அத்தனையும் பொதுவுடமை மற்றும் திராவிடச் சார்பு நிலைதான்.

**இ**ன்னும், இடஒதுக்கீட்டு மசோதாக்கள் புறந்தள்ளப்படுவதும் போராட்டங்கள் வெடிப்பதும் தொடர் நிகழ்ச்சிபோல நடந்து வருகின்றன. இருந்த இடத்தை இழக்க விரும்பாத ஆதிக்க மனம், அசட்டையான வாதங்களை முன்வைத்துத் தன் அருவருப்பான முகத்தை வெளிப்படுத்தி வருகிறது. இத்தனையையும் வெளியே இருந்து வேடிக்கை பார்க்கிறது நம்மைப் போல் காலமும்.

திராவிட இயக்கங்களின் இணைப்பான போராட்டங்களால் ஓரளவு சாதியத்தின் கிளைகள் நறுக்கப்பட்டிருந்தாலும் முற்றிலுமாக மாறிய புத்துலகு நமக்குக் கிடைக்கவில்லை என்றே சொல்ல வேண்டும். பாப்பாபட்டி, கீரிப்பட்டி, திண்ணியம், மேலவளை, வாச்சாத்தி போன்ற ஊர்ப் பெயர்களே சாதியத்தின் சான்றுகளாக இருந்து வரும் இந்நிலையில்,

*'இழிகுலம் என்றே*
*சினத்தை வெறுத்தது*
*அந்தக்காலம் -*
*மக்களை*
*இணைத்து அணைக்க*
*முயற்சி பண்ணுவது*
*இந்தக் காலம்'*

என்ற வரிகளை (நல்லதம்பி 1949) எப்படி கருதிக் கொள்வது? நாற்பதுகளில் திரையிசைப் போக்கை உணர்ந்து கொள்ள இப்பாடல் உதவும். சமூக அவலங்களைச் சாடுகிற சாட்டைகளாக இருந்த திரைப்பாடல் துறை, சமூகமே அருவருக்கும் அவலத்துக்கு உள்ளாகி இருக்கும் நிலைக்கு யாது காரணமோ?

கட்சி அரசியல் சார்ந்து ஒரு பாடலாசிரியன் இயங்குவது விபரீத விளைவுகளைத் தோற்றுவிக்கும் என்ற மெய்மை கவிராயர் காலத்தில் இல்லை. தவிர, திரைத்துறை முழுக்கவே அரசியலை முன் வைத்து இயங்கியது என்பதால் வளமான, கருத்துச் செறிவான பாடல்கள் அவரால் புனையப்பட்டுள்ளன. காலம் ஒத்

துழைப்பு நல்கினால் மட்டுமே போதாது, நாமும் அதே சிந்தையோடு உழைக்க வேண்டும் என்னும் உணர்வைத்தான் உடுமலையின் பாடல்கள் பறைசாற்றுகின்றன.

'அன்பாலே தேடிய என்
அறிவுச் செல்வம் தங்கம்
அம்புவியின் மீதுதான்
அணி பெறும் ஓரங்கம்'

- என்ற தெய்விப்பிறவி படப் பாடலை ஒருமுறை இமை மூடி கேட்டுப் பார்த்தால், சி.எஸ். ஜெயராமனின் நிருகுக் குரலின் வசீகரம் விளங்கும். அந்தப் பாடலின் இடையீடாக வருகிற வார்த்தைகளில் கவித்துவம் கொப்பளிக்கும்.

'கடல் நிலவாய் சாட்சியிலே
கலந்து நின்றோம்
ப்ரேமையால்
புடம் நிறை மாற்றறியா
பொன்னே சொல் ஏன்
ஜாலம்?'

புடம் போட்ட தங்கம் என்பது புழக்கத்தில் சொல்லும் பிரயோகம்தான். ஆனால், பொருத்தமான இடத்தில், பொருத்தமான வர்ணனையாக மாறுகிறபோது எத்தனை நளினம்; எத்தனை யெத்தனை இயைபு!

எடுக்க எடுக்கக் கரங்கம் போல வைரக் குன்றுகளாக மிளிரும் நாராயண கவியின் பாடல்கள் சொக்க வைக்கும் தன்மையுடையன - தேனின் சுவையை எழுதி விவரிக்க முடியாததுபோல.

**பொ**துவாக, பாடல்களைக் கேட்கிற போது நம்மை பிரமிக்க வைக்கிற இடங்களும் உண்டு. மெய்மறக்க வைக்கிற இடங்களும் உண்டு. மெய் மறக்க வைப்பது பாடகர்களால் என்றால், பிரமிக்க வைக்கிற இடங்கள் பாடலாசிரியர்களால் எனலாமா? இசையமைப்பாளரின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசத்திலும் சுதந்திர ஜீவியாகச் சுற்றிவரும் சூட்சுமத்தைக் கவிராயர் போன்றோர் கைக்கொண்டிருப்பது சாதனையல்லாமல் வேறென்ன?

1932-லேயே முழுப் படத்துக்கும் பாடல் எழுதும் வாய்ப்பைப் பெற்ற கவிராயர், 1942-ல் மிகப்பெரிய கவிஞராக என்பதைவிட வெற்றிபெற்ற பாடலாசிரியராகப் பரிணமித்திருக்கிறார். பின்னும் அதே நிலையில் தன்னை இருத்திக்கொள்ள எவ்வளவோ இழந்திருக்கக்கூடும். அவர் இழப்பின் சதவீதம், மக்கள் பெற்ற நிறைவின் சதவீதத்துக்கு ஈடானது.

இந்தக் கலைவாழ்வின் உச்சமென்று கருதுகிற முழுவதையும் எட்டித்தொட்ட அவருடைய கைகளை முத்தமிட வேண்டும். பாடல் துறைக்கான முழு முகவரியாகத் தன் பெயரைப் பெயர்த்து விட்டுப்போன அவரை நினைத்துக் கொண்டே கடற்கரையை விட்டுத் திரும்புகையில் உதடுகள் முணுமுணுக்கத் தொடங்கின. கா.... கா... கா....

(வீசும்)

படம் : ஸ்ரீஹரி

## வேண்டும் பஞ்சகர்மா!



ஆயுர்வேத மருத்துவ வளர்ச்சிக்காக அகில இந்திய அளவில் செயல்படும் அனைத்திந்திய ஆயுர்வேத கூட்டமைப்பின் நூற்றாண்டு விழா, சென்னையில் சமீபத்தில் நடைபெற்றது. சுகாதாரத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் கலந்துகொள்ள, வெளிநாடுகளைச் சேர்ந்த ஆயுர்வேத மருத்துவர்கள், மாணவர்கள், ஆர்வலர்களும் பங்கேற்றுச் சிறப்பித்தனர். நூற்றாண்டை ஒட்டி கருத்தரங்கமும், ஆயுர்வேத மற்றும் மூலிகைக் கண்காட்சியும் நடைபெற்றன. தமிழகத்தில் ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட வேண்டும், ஆயுர்வேத மருத்துவ காலியிடங்களை நிரப்ப வேண்டும், தமிழகம் முழுவதுமுள்ள தாலுகா, அரசுப் பொது மருத்துவமனைகளில் பஞ்சகர்மா சிகிச்சையைத் தொடங்க வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகள் விழாவில் வலியுறுத்தப்பட்டன.

# கனவு பலிக்கும்!

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசு ரூ.2,500 பெறும் கதை

கல்லாப்பெட்டி முன்னால் கன்னங் கரேலென்று கருத்த நிறமும் கனத்த உருவமுமாய் ஒரு கதர்ச் சட்டைக்காரர் கம்பீரமாய் உட்கார்ந்திருப்பார். அவர் தான் ஆதிவிலாஸ் ஹோட்டல் முதலாளி பாண்டி பட்டத்துரை.

அவர் ஹோட்டலில் தண்ணீர் குடிக்க வரும் அந்த ஊர் ஹைஸ்கூல் பிள்ளைகள் தண்ணீர் குடித்துவிட்டு நன்றியாய்ச் செலுத்தும் ஒரு கை வணக்கங்களுக்கும்கூட புன்சிரிப்புடன் இரு கைகளையும் கூப்பி வணங்கும் இனிய முதலாளி பட்டத்துரை.

"நீங்களெல்லாம் எந்த ஊர்ப் பிள்ளைகளப்பா?"

"நாங்க சத்திரப்பட்டி முதலாளி... இவங்க மொட்டமல... அவங்க சென்னாக்குளம்... அந்தப்பய சாமிநாத புரம்... இவன் இந்தச் சங்கம்பட்டிதான்..."

பிள்ளைகளின் முகம் முகமாய்ப் பார்த்துச் சிநேகிதமாய்ச் சிரிக்கும் பட்டத்துரை, தண்ணீர் குடிக்க வந்ததற்குச் சந்தோஷம் என்பதுபோல் தலையாட்டுவார்.

"தினசரி வாங்க... நீங்க பள்ளிக்கூடம் போற வழியில எங்க ஹோட்டல் இருக்கறதால உங்களுக்குத் தண்ணி குடிக்க வசதி... தாராளமாக் குடிச்சிட்டுப் போங்க... நல்லாப் படிக்கோணும்... நாலு மைல் நடந்து வந்து படிச்சிட்டுப் போறீங்கப்பா... அந்தக் கஷ்டத்தை நினைச்சாவது கருத்தாப் படிங்க... தாய், தகப்பன் படுற கஷ்டத்தையும் நினைச்சுப் பாத்துக் கவனமாப் படிங்க... நல்லது, போய்ட்டு வாங்க..."

அதற்கு மேல் மாணவமணிகளை ஒரு நிமிஷம்கூட தன் ஹோட்டல் வாசலில் நிற்கவிட மாட்டார்.

அன்று ஸ்பெஷல் தோசை... பூரிக் கிழங்கு... பொங்கல்... கேசரி... வடை என்று வகை வகையாய்க் கேட்டு வாங்கி எவன் எவனோ தின்று கொண்டிருப்பதை ஏக்கத்தோடு இரண்டொரு ஏழைப் பையன்கள் நின்று வேடிக்கை பார்த்ததை, கல்லாவிலிருந்தே கவனித்தார் பட்டத்துரை.

மிகமிக நைந்துபோன கால்சட்டை கிழிந்து தொங்கும் புத்தகப் பைக்கட்டு... சட்டைப் பையில் மை கசியும் பேனா... எண்ணெய்ப் பசை இல்லாத தலை... எலும்பும் தோலுமாய் கை கால்கள்... ஏறுகிற விலைவாசியில் அந்த ஹோட்டலில் ஒரு வடையைக்கூட வாங்க வலிமை இல்லாத கூச்சத்தில் சட்டைப் பையில் ஒடுங்கிக் கிடக்கும் ஒரு ரூபாய் நாணயம்...

'நாணயத்தை எடுத்துப் பார்த்துவிட்டு, திரும்பவும் சட்டைப் பையில் போட்டுக் கொண்டு உதட்டை நக்கியபடி ஒவ்வோர் இலையையும் பார்க்கும் அந்தப் பையன்கள், அப்புறம் பள்ளிக்கூடம் போனாலுமே ஒரு மனசாய்ப் படிப்பானுங்களா? அவனுங்க நினைப்பெல்லாம் இந்த இலைகளில்தானே கிடக்கும். வெறும் உடம்பாய்த்தானே அங்கே பொழுதைக் கழிப்பானுங்க. வெறும் உடம்பு படிக்குமா? மனசல்லவா படிக்கும்! அதை இங்கே போட்டுவிட்டுப் போகும் அவனுங்க அங்கே எப்படிப் படிப்பானுங்க?'

கல்லாவிலிருந்தபடி கவலைப்பட்ட பட்டத்துரை, இறங்கி வந்து இலை போட்டு அந்தப் பையன்களை உட்காரச் சொல்லி அவர்கள் ஆசைப்பட்டதை இலையில் அள்ளிப் போட்டுச் சாப்பிடச் சொன்னார்.


"உங்ககிட்ட காசில்லேன்னு தெரியு

மப்பா எனக்கு... கவலைப் படாம சாப்பிடுங்க... சாப்பிட்ட பிறகாவது ஒரு மனசாப் பள்ளிக் கூடம் போங்க. போய்ப் படிங்க. நெனைச்சதச் சாப்பிடுங்க. அப்புறம் நெனைப்பு இங்க இருக்கக் கூடாது. புரியுதா?''

ஒரு நாள் அவர்களைச் சாப்பிட வைத்து அவர் அனுப்பி வைத்தது மிக அருமையான நிகழ்ச்சி. அதை அவர் யாரிடமும் சொல்லிக்கொள்ளவும் இல்லை.

கொலை, கொள்ளை, களவு, கற்பழிப்பு, அடிதடின்னு போறான் ஜெயிலுக்கு. அவனுக்கும் அங்க சோறு தான்...

நாளைய இந்தியாவோட தலை எழுத்தையே பைக்கட்டுல போட்டுட்டுப் போற இந்தப் பிள்ளைகளுக்கும் அதே சோறுதானா?



**வே. குருநாதன்**

தினம் ஒரு தினுசா, வாய்க்கு ருசியா எதையாவது செய்து கொடுத்து அந்தச் சின்னஞ் சிறுசுகளுக்கு, பள்ளிக் கூடம்னா எல்லாமே கிடைக்கும்ங்கிற நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டாமா... என்ன சர்க்கார் இது?

டிராவலர்ஸ் பங்களாவுல தங்குற மந்திரி பள்ளிக்கூடத்துச் சோறு திம்பாரா?

என்னய்யா பெரிய சத்துணவு? அதைத் திங்கிற பயகதான இங்க வந்து ஒவ்வொரு இலையையும் பாத்து உதட்டை நக்குறான். பள்ளிக்கூடம் போனா அந்தச் சோறு மட்டும்தான் கிடைக்கும்.

இங்க ஒரு மேஜை துடைச்சாலுமே வகை வகையாய்க் கிடைக்குமேன்னு ஒரு சின்னப்பய நினைப்பானா, மாட்டானா? அப்புறம் அவன் எங்க படிப்பான்? பள்ளிக்கூடம் போவான்?''

– பட்டத்துரையின் கையிலிருந்த அன்றைய நாளிதழ்கூட வெட்கப்பட்டு மடங்கியது. காரணம் அது வைத்திருப்பது ஆறிப்போன செய்திதான்... இவர் வழங்குவது சுடச்சுட ஆவி பறக்கும் புதிய செய்தியல்லவா?

''பள்ளிக்கூடத்துப் பயல்களை இங்க வரவிடாதீங்க... அதை விட்டுட்டு ஏன் என்னென்னமோ பேசறீங்க...?''

– ஆளுங்கட்சிக்காரன் ஒருவன் அந்த இடத்தில் சீறினான்.

நாலு மைல் நடந்து வந்து படிக்கிற வனப்பா. நா வறண்டு போய் வாரான். தண்ணியாவது குடிச்சிட்டுப் போகட்டு மேன்னு நெனைக்கிறதுதானே மனிதாபி மானம்? என்ன நான் சொல்றது?"

பரோட்டாவை சால்னாவில் குளிப் பாட்டி சாவகாசமாய் உள்ளே அனுப்பிக் கொண்டிருந்தவனிடம் அபிப்ராயம் கேட்டார்.

அவன் தலையாட்டிக்கொண்டே தண்ணீரைக் குடித்தான். புரையேறியது. தன் தலையில் தானே தட்டிக் கொண் டான்.

"தண்ணிகேனை வெளியில் வைங்க முதலாளி... வெளியில நின்னபடி குடிச் சுட்டுப் போகட்டும். உள்ள வந்தாதானே ஒவ்வொரு ஐட்டத்தையும் பாத்து உதட்ட நக்குவான். அதுக்கு அவசியமே இல்லாத படிக்கு தண்ணி கேனை வெளியில வைங்க..."

– அவன் சொன்ன யோசனையும் உருப்படியாய்த் தெரிந்தது. உடனே செயல்படுத்தப்பட்டது. இருந்தாலும் இரண்டொரு பயல்கள் ஹோட்டலுக்குள் நுழைந்து நோட்டமிடத்தான் செய்தார் கள்.

ஒருநாள் ஒரு சின்னப் பையன் தன் மேல் சட்டையைக் கழட்டிச் சுருட்டிப் பைக்கட்டில் திணித்துவிட்டு பைக் கட் டையும் ஒரு தூணோரம் ஒளித்து வைத்து விட்டு கல்லாப்பெட்டி அருகில் கைகட்டி நின்றான்.

"நான் படிக்கல முதலாளி... எங்க அம்மா, அப்பா என்னைப் படிக்க வைக்கல. நான் உங்க கடைக்கு டேபிள் க்ளீன் பண்ண வரட்டுமா முதலாளி... அப்புறம் எல்லா வேலையும் செய்யப் பழகிக்கிடுவேன் முதலாளீ... வரட்டுமா முதலாளீ..."

கண்களில் ஆவல் வழிய அவன் வேலை கேட்டதுதான் தாமதம்...

அவன் கன்னத்தில் பளாரென்று அறைந்தார் பட்டத்துரை. கண்கலங்க கன்னம் தடவினான் அந்தச் சின்னப் பையன்.

"நீ படிக்கிறவன்தானடா?"

'இல்லை' என்று தலையாட்டினான் அவன்.

"உண்மையச் சொல்... நீ படிக்கிறியா இல்லையா?" அவன் காதைத் திருகிய போதும்கூட, 'இல்லவே இல்லை' என்று அவன் தனது சின்னத் தலையை வேக மாய் ஆட்டியபோது... அவன் பிஞ்சு முதுகிலும் சுளீரென்று கொடுத்தார் பட்டத்துரை. அழுது விட்டான்.

அவர் பிடியைத் தளரவிட்டதும் ஓடிப்போய்ப் பைக்கட்டைத் தூக்கிக் கொண்டு தெருவில் இறங்கி ஓடினான். போனவன் கொஞ்ச நேரத்திலேயே தாய், தகப்பனோடு பத்துப் பேரையும் சேர்த்துக் கூட்டி வந்தான். அவர்கள் வந்த வேகத் தைக் கண்டு பயப்படாத பட்டத்துரை, 'என்ன விஷயம்' என்று கண்களால் கேட்டார்.



## எளிமையால் வந்த அடக்கம்!

ஐம்பது வருடங்களுக்கு முன்பு திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி விடுதியில் மூன்று மாணவர்கள் தங்கிப் படித்தார்கள். ஒருவர் கிறிஸ் தவர். அடுத்தவர் இந்து. மூன்றாமவர் இஸ்லாமியர். மூவருக்குள்ளும் நல்ல நட்பு... ஒற்றுமை...

காலப்போக்கில் கிறிஸ்

"என் பிள்ளைய என்னத்துக்கு அடிச்ச? உன் கடையில களவாண்டானா அவன்?"

குரலை மிகமிக உயர்த்தியதோடு மேஜையில் ஓங்கிக் குத்தினான் அந்தப் பாமரன். மேஜை ஆடியது. மேஜை மேலிருந்த கண்ணாடி டம்ளர் கீழே விழுந்து உடைந்து நொறுங்கியது.

"அடிச்ச கை உனக்கு விளங்காமத் தான் போகும்... அந்தப் பச்ச மண்ணப் போயி அப்படி அடிச்சிருக்கியே பாவீ..."

அடிபட்ட பையனின் அம்மா சாபமிட்டு அழுதாள். அடிபட்டதால் ரொம்பவும் பாதிக்கப்பட்டுவிட்டதைப்போல ஒரு முகபாவம் காட்டி ஓரமாய் ஒதுங்கி நின்றான் அந்த நிகழ்ச்சி நாயகனான சின்னப் பையன் ஆறுமுகம்.

"எங்க ஜாதிக்காரப்பயல அடிச்சுட்டு நீ இங்க கடை நடத்திருவியா? நீ என்ன சாதிக்காரன்னு எங்களுக்குத் தெரியாதுன்னு நினைச்சியா?"

சமயம் பார்த்து ஒரு ஜாதிக் கலவரத்துக்கு அங்கேயும் அழகாய் அடிக்கல் நாட்டினான் ஓர் அயோக்கியன்.

"வேலை கேட்டா இல்லடான்னு விரட்டிவிடு. ஏன் கன்னத்துல அடிக்கணும்? நீ பெத்து வளத்துவிட்டியா? அந்தச் சின்னப் பயல அடிச்சிருக்கியே... எங்க, என்னை அடிய்யா பாக்கலாம்... அடிய்யா... அடி... ஏலேய் அடிடா பாக்கலாம்..." என்று கத்தியபடி அவர் முன்னால் பாய்ந்து வந்த ஓர் இளைஞனை, ஹோட்டலுக்குள்ளிருந்து வந்து அவன் முதுகில் ஓங்கி மிதித்துக் குப்புற விழ்த்தினான் சப்ளையர் வடிவேலு. அதன் பிறகு ஆளாளுக்கு அடித்துக் கொண்டார்கள். கூச்சலும் கூப்பாடுமாய் நிலைமை மிக மோசமானது. பட்டத்துரை போலீசுக்கு போன் செய்தார். போலீஸ் வேன் வந்தது. அங்கிருந்த அனைவரையுமே அள்ளிப்போட்டுச் சென்றது.

**ஸ்**டேஷனில் பட்டத்துரை மட்டுமே மரியாதையாய் விசாரிக்கப்பட்டார். நடந்ததைச் சொன்னார். இன்ஸ்பெக்டர் முக இறுக்கம் குறையாமலே பட்டத்துரையின் கண்களில் தன் கண்களை கால்மணி நேரம் செலுத்தி... பட்டத்துரையின் ஆழம் அறிந்து... அறிந்ததையும் வெளிப்படுத்திக் கொள்ளாமல்...

"பேசி முடிச்சிட்டீங்களா? இனி மிச்ச மீதி இல்லையே... அவ்வளவுதானே?"

அவருடைய கோபமான கேள்விக்கு மிக மெலிந்த புன்னகையுடன் பேச எதுவும் இல்லை எனத் தலையாட்டினார் பட்டத்துரை.

"என்ன பெரிய ஆளுய்யா நீங்க? ஒரு ஹோட்டல் முதலாளி... சமூக அந்தஸ்து உள்ள மனுஷன்... இவ்வளவு சீப்பாவா உங்க நடவடிக்கை இருக்கணும்? உங்களுக்கு இது தேவையா? வேலை கேட்ட பயலுக்கு இஷ்டம் இருந்தா வேலை கொடுங்க... இல்லேன்னா விரட்டி விடுங்க... ஏன் அடிக்கணும்?"

இன்ஸ்பெக்டரின் கேள்வியில் கோபம் இருந்தது. வேகம் இருந்தது. வெப்பம் இருந்தது. பட்டத்துரை தலைகவிழ்ந்து யோசனையில் இருந்தார்.

"பதில் சொல்லுங்கய்யா... இது விசாரணை... ஒத்துழைப்புக் கொடுங்க..."

இன்ஸ்பெக்டரின் அதட்டலில் அதிர்ச்சியுடன் நிமிர்ந்த பட்டத்துரை, அவரைச் சமாதானப்படுத்துவதுபோல் புன்னகைத்தார்.

"நாம படிக்கிற வயசுல ஒரு வேலை கொடுன்னு எங்கே போய்க் கேட்டாலும்

---

தவர் டாக்டராகி அமெரிக்கா சென்றுவிட, இந்து இன்ஜினீயராகவும் இஸ்லாமியர் விஞ்ஞானியாகவும் ஆனார்கள். 1999-ஆம் வருடம் விஞ்ஞானி 'அக்னிச் சிறகுகள்' என்ற நூலை வெளியிட்டார். அதில் தமது நண்பர்களான அலெக்ஸாண்டர், சம்பத்குமார் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். அதைப் படித்த நண்பர்கள் இருவரும் ஒன்றாக விஞ்ஞானியைச் சந்தித்துப் பழைய நினைவுகளைப் பகிர்ந்து கொண்டார்கள்.

'அவரது எளிமையைப் பார்த்தபின் எனக்கு இன்னும் அடக்கம் வந்துவிட்டது" என்கிறார் சம்பத் குமார். அந்த விஞ்ஞானியின் பெயரைச் சொல்லவும் வேண்டுமோ?

- அனிதா ராமச்சந்திரன்



அடி விழும், உதை விழும்ங்கிற பயம் இந்தியாவுல ஒவ்வொரு பயலுக்கும் இருக்கணும்...

பதினாலு வயசு வரைக்கும் வேலை தேடுற அவன் முயற்சியையே முறியடிக்கணும். வேலைங்கிற நினைப்பையே அவன் மனசில் இருந்து விரட்டணும்.

இந்தப் பேராசையிலதான் ஐயா நான் அடிச்சேன். என்னைப்போல எல்லாருமே அடிச்சு விரட்டினா, அவன் எங்க போவான்? பள்ளிக்கூடம்தானே போவான்! அங்க அவன் போகணும்... அதுக்காகத்தான் அடிச்சேன்... இப்பவும் சொல்றேன்... அவன் பள்ளிக்கூடம் போறதா இருந்தா போதும்... அடிச்சதுக்காக என் கையை ஒடிச்சிருங்க... நான் கையில்லாமலாவது இருக்கேன். ஆனா அவன் படிப்பில்லாம இருக்க வேண்டாம்... அடிங்க..."

உணர்ச்சிவசப்பட்டுப் பேசிய பட்டத்துரை தன் கைகளை நீட்டியபோது, அவரைப் பெருமிதமாய்ப் பார்த்த இன்ஸ்பெக்டர், தன் கையிலிருந்த லத்தியால் பட்டத்துரையின் கைகளில் செல்லமாய்த் தட்டிச் சிரித்தார். தன்னைப் புரிந்து கொண்ட இன்ஸ்பெக்டரிடம் இனியும் சொல்வதற்கு எதுவுமில்லை என்ற நிலையில் மௌனமானார் பட்டத்துரை.

"உன் பிள்ளை நல்லாப் படிக்கணும். அவனைப் பெத்ததுக்காக ஊரே உன்னைப் பெருமையோட பார்க்கணும். அப்ப உன் மனசு எப்படி இருக்கும்? கொஞ்சம் கனவு கண்டு பாரு. அந்தக் கனவுல மண்ணை அள்ளிப் போட்ட மாதிரி டேபிள் துடைக்க வரட்டுமான்னு உன் பிள்ளை கேட்டுட்டான்... அடிச்சுட்டாரு... அவ்வளவுதான் நடந்தது...

இருந்தாலும் இவர் யாரு... உன் பிள்ளைய அடிக்கிறதுக்கு? பட்டத்துரை... கையை நீட்டுமய்யா. அடிச்சே ஒடிச்சிரலாம். உமக்குக் கை எதுக்கு?"

பட்டத்துரையை கை நீட்டச் சொல்லி இன்ஸ்பெக்டர் லத்தியை ஓங்கியபோது, பாய்ந்து வந்து லத்தியைப் பிடித்துத் தடுத்ததோடு ஹோட்டல் முதலாளியின் காலில் விழுந்தாள் செல்லம்மாள். கண்ணீரால் அவர் கால்களை நனைத்தவள், நன்றி சொல்வது போல் நிமிர்ந்து பார்த்து, பட்டத்துரைக்கும் இன்ஸ்பெக்டருக்கும் ஓர் இறை வணக்கமே செலுத்தி விட்டுத் தமது கூட்டத்துடன் திரும்பி நடந்தாள். ○

## படபடப்பில் பரத்!

● தனக்கும் ஜெனிலியாவுக்கும் காதல் என்கிற கிசுகிசு வேகமாகப் பரவி வருவதில் மிகுந்த படபடப்பில் இருக்கிறார் பரத். 'நாங்கள் நண்பர்கள்தான்' என்று சத்தியம் செய்யாத குறையாய் பார்ப்போரிடமெல்லாம் புலம்பி வருகிறார். 'என்னாச்சு பரத்' என்றால், 'புலம்ப விட்டுட்டாங்க தலைவா' என்று தலை கவிழ்கிறார். ஜெனிலியாவிடம் இந்த சர்ச்சை குறித்து எந்த ரியாக்ஷனும் இல்லை. அவர்பாட்டுக்கு கூலாக பரத்துடன் சினிமா தியேட்டர்களில் வலம் வருகிறார்!

# விராலிமலை விபரீதம்!

# வேட்டையாடப்படும் மயில்கள்!




பொதுவாக, கிராமப்புறங்களில் வீடுகளின் வாசல் முன்பாகவும், கொல்லைப்புறங்களிலும் கோழிகள் மேய்ந்து கொண்டிருக்கும். ஆனால் விராலிமலையில் வாசல்களிலும் பின்புறங்களிலும் வண்ணமிகு மயில்கள் மேய்ந்து கொண்டிருக்கின்றன. ஆயிரக்கணக்கான மயில்கள் பறந்து திரிந்த காலம் மாறி, தற்போது அங்கு வாழ்ந்து கொண்டிருப்பவை நூற்றுக்கணக்கிலாகிவிட்டன. ஏன்? அவற்றுக்குச் சரியான அளவில் இரை கிடைக்காதது ஒரு காரணம்; மற்றொன்று மயில் வேட்டை.

விராலிமலையின் அடிவாரத்தில், தமிழ்நாடு வனத்துறை, 'மயில்களுக்குத் துன்பம் செய்வோர் மீது வனத்துறைச் சட்டத்தின் கீழ் தண்டனை அளிக்கப்படும்' என்று எச்சரிக்கைப் பலகை வைத்துள்ளது. ஆனாலும் 'வேட்டை தொடர்ந்து நடந்துகொண்டுதான் இருக்கிறது.

மயிலின் இறைச்சி உணவாகப் பயன்படுத்தப்படுகிறது. அதன் கால்களை நசுக்கி, அதனுடன் சில பொருட்களைப் போட்டுக் காய்ச்சி மயில் எண்ணெய் (தைலம்) தயாரிக்கப்படுகிறது. பெரும்பாலும் நரிக்குறவர்களே மயில் எண்ணெய் தயாரித்து, விற்று வருகின்றனர். கிராமத்துச் சிறுவர்கள் மயில் முட்டைகளைக் கவர்ந்து வந்து (கொஞ்சம் சிரமம்தான்!) விற்று விடுவதும் நடக்கிறது. வாங்கிச் செல்பவர்கள் அவற்றை அடை காப்பதற்காக வான்கோழி மற்றும் கின்னிக் கோழிகளைப் பயன்படுத்தி, மயில் குஞ்சுகளைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

இது குறித்து மேலும் விஷயமறிய திருச்சி மாவட்டத்தில் இருக்கும் நரிக்குறவர் காலனி ஒன்றுக்குச்



• வைத்தியநாதன்

சென்றோம். கல்லூரி யொன்றின் விலங்கியல் துறையிலிருந்து வந்திருப்பதாக நரிக்குறவரிடம் நம்மை அறிமுகப்படுத் திக் கொண்டோம். மர நாய், நரி, காட்டுப்பூனை போன்றவற்றைப் பற்றிப் பேசிவிட்டு, மயில் குறித்து பேசத் துவங்கினோம். மயில் எண்ணெய் எவ்விதம் தயாரிக்கிறீர்கள் எனக் கேட்டவுடன், மிகவும் குஷியாகிப் போனார் ஒரு நரிக்குறவர். வீட்டுக்குள் நுழைந்து கை நிறைய மயில்கால்களை அள்ளிவந்து காண்பித்தார். "ஏது இவ்வளவு கால்கள்?" என்றோம். "அதெல்லாம் எங்களுக்கு எப்படியோ கெடைக்கும் சாரே... ஓங்களுக்கு மயில் எண்ணெய் காய்ச்சிக் காமிக்கட்டுமா... வேணாமா?" என்று நம்மிடமே கொக்கி போட்டார். "எண்ணெயக் காய்ச்சுங்க தலைவரே!" என பவ்யமாகக் கூறிவிட்டு, ஒதுங்கி நின்று கொண்டோம்.

மயிலின் கால்களைக் கருங்கல் ஒன்றின் மீது வைத்து நசுக்கி, நையப் புடைத்துப் பாத்திரம் ஒன்றில் போட்டார். அதனுடன் நல்லெண்ணெய், மஞ்சள் பொடி, உக்காளிக்காய், மெழுகுவர்த்தி, கொஞ்சம் யூகலிப்டஸ் போன்ற வற்றைப் போட்டு நன்றாகக் கொதிக்க வைக்க, அரை மணி நேரத்தில் மயில் எண்ணெய் தயார். உடல் வாதம், பித்தம், கை கால் குடைச்சல்களுக்கு நிவாரணியாக மயில் எண்ணெய் தடவப்படுகிறது. பத்து மில்லி மயில் எண்ணெய் இருபது ரூபாய். மயில் கால் ஒரு ஜோடி நாற்பது ரூபாய். மயில் குஞ்சு ஒரு ஜோடி இரண்டாயிரம் ரூபாய்.

"மயில் எண்ணெய் மசாஜ் பண்ணிக்கிறீங்களா? உடம்புக்கு நல்லதுங்க. ஒரு ஆளுக்கு இருநூத்தைம்பது ரூபாய்தான். உங்களோட அட்ரஸ்ஸா குடுத்துட்டுப் போங்க. வீட்டுக்கே வந்து மசாஜ் பண்ணிவுடுவோம்!" எனக் கூறினார் அந்த நரிக்குறவர்.

இப்பகுதிகளில் வசித்து வரும் மயில்கள் நிரந்தரமாக ஆங்காங்கே ஓரிடத்தில் தங்கி வாழும் பண்புடையனவாக இருக்கின்றன. சுற்றித் திரிந்து தங்களுக்கென ஒரு சுற்றுப் பாதையைத் தெரிவு செய்துகொண்டு வாழ்ந்து வருகின்றன. அவற்றின் சுற்றுப் பாதைகள் பல கிலோமீட்டர் தொலைவுகொண்டதாக அமைந்துள்ளன. சில சமயங்களில் வேளாண் நிலங்களின் தானியங்களைப் பெருமளவு உட்கொண்டு விடுகின்றன. அதுபோன்ற சமயங்களில் விவசாயிகள் மயில்களுக்கு மயக்க உணவு வைத்தோ அல்லது விஷம் வைத்தோ தங்கள் பயிர்களைக் காப்பாற்றிக் கொள்கின்றனர். விராலிமலையின் குப்பைத் தொட்டிகளில் மேய்ந்து தங்களுக்கான இரையினைத் தேடுகின்றன சில மயில்கள்.

விராலிமலையைச் சுற்றியுள்ள ராஜகிரி, குளவாய்ப்பட்டி, தென்னம் பாடி உள்ளிட்ட கிராமப் பகுதிகளில் மயில்கள் அதிகமாக வசித்து வருகின்றன. "இரவு நேரங்களில் மோட்டார் பைக்குகளில் வெளியூர் ஆட்கள் வேட்டைக்கு வருவார்கள். வேட்டையாடப்பட்ட மயிலின் தோகை, கழுத்து மற்றும் கால்களை வெட்டி இங்கேயே வீசி யெறிந்துவிட்டு, அதன் உடலை மட்டும் சாக்குப் பைகளில் போட்டுக் கொண்டுபோய் விடுகின்றனர். நரம்பினால் கட்டப்பட்ட கண்ணி வலையினைத் தரையில் கட்டி வைத்து மயில்களைப் பிடிக்கிறார்கள். இவர்களைவிட...

• பொன்னன்




நரிக்குறவர்கள் மிக மோசம். இரவு நேரங்களில் காடுகளில், வேட்டை நாயினை விட்டு மயிலினைக் கொன்று பிடித்துக்கொண்டு போய் விடுகின்றனர்!" எனக் கூறுகிறார் ராஜகிரியைச் சேர்ந்த விவசாய கூலித் தொழிலாளி பொன்னன்.


"மயிலினைப் பகலில் இரை தூவிப் பிடிக்கிறார்கள். இரவு நேரங்களில் காடுகளில் வலை கட்டிப் பிடிக்கிறார்கள். மயில் வேட்டை சில சமயங்களில் அதிகரிப்பது போலத் தோன்றும். கடந்த ஓராண்டாக ஃப்ரண்ட்ஸ் ஆஃப் போலீஸ் குழுவில் அங்கம் வகித்துப் பணியாற்றி வருகிறேன். என் பார்வைக்குத் தெரிந்த வரைக்கும் மயில் வேட்டைக்கென வருபவர்களைக் கண்டித்துப் பேசித் திருப்பி அனுப்பி விடுகிறேன். இருந்தபோதும், இந்தப் பகுதியில் மயில்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துகொண்டே வருகிறது என்பது மறுக்க முடியாத உண்மை!" என்கிறார் விராலிமலை காவல்துறை நண்பர்கள் குழுவில் இடம் பெற்றிருக்கும் ஜி.வைத்தியநாதன்.

மயில் வேட்டை குறித்துப் புகார்கள் ஏதேனும் பதிவாகியுள்ளதாவென்று விராலிமலை காவல் நிலையத்தில் விசாரித்தோம். "இது வரைக்கும் புகார்கள் ஏதும் பதிவாகவில்லை!" என்றார் காவல் ஆய்வாளர்.

"விராலிமலை அடிவாரத்தில் இயங்கி வந்த வனச்சரகக் கிளை அலுவலகம், கடந்த நான்கைந்து ஆண்டுகளாக துவரங்குறிச்சியில் இயங்கி வருவதாகச் சொல்லப்படுகிறது. இங்கிருந்து நாற்பது கி.மீ. தூரம். பிறகெப்படி அவர்கள், இங்கிருக்கும் நூற்றுக் கணக்கான மயில்களைப் பாதுகாக்க முடியும்? மருத்துவ தேவைகளுக் காகவும், இறைச்சிக்காகவும் நம்முடைய தேசியப் பறவையான மயிலை மறைமுகமாகக் கொன்று வருவது மிகவும் கொடுமையானது. இது உடனடியாகத் தடுக்கப்பட வேண்டும்.



• விஜயகுமார்



• மயில் தைலம் ரெடி!

அவற்றுக்குப் போதிய இரை கிடைத்திட வழிவகை செய்தலும் தேவை. அதேபோல் மயில்கள் சரணாலயம் ஒன்றை, விராலிமலைப் பகுதியில் அமைக்க வேண்டும்!" என்று வலியுறுத்துகிறார் யோகா ஆசிரியரும், திருச்சி அமிர்தம் சேவா தொண்டு நிறுவனத்தின் நிர்வாக அறங்காவலருமான பெ.விஜயகுமார்.

- திருநாவு

படங்கள் : திருச்சி விஜய்



எறவானத்து
மூலையிலிருந்து
ஒரு கையுடைந்த மரப்பாச்சி
கிடைத்தது அவளுக்கு

கழுவித் துடைத்த தருணத்தில்
கருமையின் அடர்த்தி கரைந்து
ஒட்டியிருந்த பிள்ளைக் கனவுகள்
உதிர்ந்தன

ஆனந்தச் சிரிப்புகளும்
அளவற்ற ஆசைகளும்
பாட்டுத் துணுக்குகளும்
பரிகாசப் பேச்சுகளுமாக
ஓர் ஊஞ்சல் அசைந்தது

ஆதிநாள் தொடங்கி
சூரியனைப் பற்றும் விருப்போடும்
விண்ணைத் தொட்டு
காற்றில் பறக்கும் கனவோடும்
குழலாட குழையாட
குட்டைப் பாவாடை சரசரக்க
ஆடிக்கொண்டிருந்தாள் ஒரு சிறுமி

அவள் உருவம் பிளந்து
ஆட வந்தாள் இன்னொரு சிறுமி
அவள் சிரிப்பில் தோன்றி
அசையத் தொடங்கினாள் மற்றொரு சிறுமி
அடுத்தடுத்து பெருகினார்கள்
ஆயிரக்கணக்கான சிறுமிகள்

ஆச்சரியத்தில் உறைந்து நின்றவளிடம்
ஒரு புன்னகையைப் பரிசளித்தார்கள்

பழசும் புதுசுமாக ஏராளமான பொருட்கள் குவிந்து
அடைந்து கிடக்கும் இருண்ட சமையலறையின் மூலையில்
தன் வெளிச்சத்தைப் படரவிட்டது அந்தப் புன்னகை.

# புன்னகை வெளிச்சம்!

பாவண்ணன்

# கோர்ப்பசேவின் அடையாளக்குறி!

– ஜி.எஸ்.எஸ்.



“என் பொருளாதாரம் கொஞ்சம் இடிக்கிறது. நினைத்த படியெல்லாம் செலவு செய்ய முடியவில்லை” என்கிறார் கோர்ப்பசேவ். இவரை மறந்திருக்க முடியாது. 1985-லிருந்து 1991 வரை சோவியத் யூனியனின் தலைவராக இருந்தவர். அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையே நிலவிய பனிப்போர் முடிவுக்கு வந்தது இவரது ஆட்சியில்தான். 1990-ல் அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர்.

அதே சமயம் சோவியத் யூனியனின் ‘இரும்புத் திரை’ கிழியக் காரணமும் இவர்தான். இவர் காலத்தில்தான் சோவியத் யூனியன் உடைந்து பல நாடுகளாயின. காரணம், இவர் அறிமுகப் படுத்திய ‘க்ளாஸ்நோஸ்ட்’டும் ‘பெரெஸ்ட்ரோய்கா’வும்தான். க்ளாஸ் நோஸ்ட் என்றால், வெளிப்படைத் தன்மை என்று பொருள். பத்திரிகைச் சுதந்திரம் அறிமுகமாக, ப்ரஸ்னேவ் ஆட்சியில் ஊழல்களும் திறமையின்மையும் வெளியாயின. பெருந் தலைவராக மதிக்கப்பட்ட ஸ்டாலின் ஒரு கொடுங்கோலர் என்பது போன்ற விவரங்கள் வெளிவந்தன. பெரெஸ்ட்ரோய்கா என்பது பொருளாதார மற்றும் சமூகச் சீரமைப்புத் திட்டம்.

75 வயதாகும் கோர்ப்பசேவ் இப்போதும் சும்மா இருக்கவில்லை. புத்தகம் ஒன்றை அக்கறையோடு எழுதி வருகிறார். அது அவர் செல்லக்குழந்தையான பெரெஸ்ட்ரோய்கா தொடர்பானது.

“ரஷ்யா ஜனநாயகப் பாதைக்குத் திரும்ப வேண்டுமென்பதுதான் பலருடைய எண்ணமாக உள்ளது” என்கிறார் புத்தகத்தில்.

முன்னாள் ஜனாதிபதி போரிஸ் எல்ஸ்டினைப் பற்றிக் காரசாரமாக விமர்சிக்கிறார். “நாட்டின் செல்வச் செழிப்பை சிலர் மட்டுமே அனுபவிக்க அனுமதித்தவர் அவர். அவர் செய்த குழப்பங்களை விளாடிமிர் புடின் மெல்ல மெல்ல சரி செய்து வருகிறார்.”

1996-ல் நடைபெற்ற ரஷ்யத் தேர்தலில் கோர்ப்பசேவ் மீண்டும் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட்டார். ஆனால் அவருக்குக் கிடைத்தது வெறும் ஒரு சதவீத வாக்குகள்தான். இதற்கு முக்கியக் காரணம் சோவியத் யூனியன் சிதறியதற்கு அவர்தான் காரணம் என்ற எண்ணம் மக்களிடையே அழுத்தமாகப் பதிந்துவிட்டதுதான்.

கோர்ப்பசேவ் என்றவுடனேயே அவர் நெற்றியில் உள்ள அடையாளக் குறி சட்டென நினைவுக்கு வரும். இந்த அடையாளக்குறியை ஒரு வோட்கா நிறுவனம் தனது விளம்பர நிறுவனத்தில் பயன்படுத்துவதை அறிந்து அந்த அடையாளக்குறிக்கு காப்புரிமை பெற்றார்.

அவரது மனைவி ரோஸா இறந்தார். பொது வாழ்வில்கூட கோர்ப்பசேவுக்குத் தோள் கொடுத்தவர் ரோஸா. அந்த அதிர்ச்சியிலிருந்து இன்னமும் அவர் மீளவில்லை.

கோர்ப்பசேவின் மாத பென்ஷன் நாற்பதாயிரம் ரூபிள்கள். அதாவது 1,400 டாலர்கள்.

# மரபுக் கவிதை

வேகமும் பரபரப்பும் நிறைந்த வாழ்க்கைச் சூழ்நிலையும் தொலைக்காட்சி, சினிமா போன்ற ஊடகங்களின் வளர்ச்சியும் இன்றைக்கு இலக்கிய ஆர்வத்தை, நல்ல இலக்கியங்களைத் தேடிப் பிடிக்கும் ஆர்வத்தைக் குறைத்து வருகின்றன. இம்மாதிரியான காரணங்களால் மரபுக் கவிதைகளுக்கான முக்கியத்துவம் குறைந்து வருகிறது என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

இன்றைக்குத் தன்னைப் படைப்பாளிகளாகக் காட்டிக்கொள்ள வேண்டும் என்று நினைப்பவர்களுக்கு புதுக்கவிதை எழுதுவது மிகச் சுலபமான செயலாகிவிட்டது. காரணம் மரபுக் கவிதை படைப்பதற்கு இலக்கணமும் யாப்பும் தெரிந்திருக்க வேண்டும். அதையும் பிழையில்லாமல் எழுதத் தெரிந்திருக்க வேண்டும். ஆனால் புதுக்கவிதைக்கு நிர்ணயிக்கப்பட்ட வடிவம் இல்லை என்பதால் புதுக் கவிதை எழுதுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.



மரபுக் கவிதைகள் மறைந்து வருவதற்கு இன்றுள்ள பத்திரிகைகளும் ஒரு காரணம். அவர்கள் துணுக்குச் செய்திக்குத் தருகின்ற இடத்தைத்தான் ஒரு கவிதைக்கு தருகின்றார்கள். அக்கவிதையும் ஜனரஞ்சகமாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். கவிதை என்பது மனதுக்குள்ளே போய் மயிலிறகால் வருடும்; துப்பாக்கியால் சுடும்.

ஆனால் இன்றைக்குள்ள புதுக் கவிதைகள் அப்படி இல்லை. இன்றைய சூழலில் கவிதை, உலகமயமாக்கல் மூலம் இழைக்கப்படுகின்ற சமூக அநீதிகளை எதிர்த்துப் பாட வேண்டும், கொதித்துப் பாட வேண்டும். அப்படியா இருக்கின்றன இன்றைய புதுக்கவிதைகள்?

அதிலும் இந்தச் சிற்றிதழ்க்காரர்களின் நவீன கவிதைகளில் கவிதையையும் காணோம்; மனிதனையும் காணோம். சமூகத்தைக் குழப்புகிறார்கள். 'கலை வாழ்க்கைக்காக' என்பவர்களால்தான் சமூகம் நிமிர்கிறது. கலை, கலைக்காக, 'பிரசாரம் கூடாது' என்பவர்கள்தான் இந்த நவீன புதுக் கவிதையாளர்கள்.

மரபுக்கவிதையின் பலவீனம் அதன் வடிவத்தினாலேயே பெரும் பிரமையைத் தோற்றுவிக்கிறது. சில சமயங்களில் நாயுடு ஹால் பொம்மைகளையே தேவதைகள் என்று பேசுகிறார்கள்.

இதற்கு நேரெதிராக யாப்பும், இலக்கணமும் தெரிந்த ஒரே காரணத்தினால் கவிதை என்று கண்டவர்கள் எல்லாம் காட்சியளிப்பதும் இம்மரபினால்தான். வெண்பா மரபில் கட்டுக்கோப்புள்ள வடிவம். இந்த வடிவத்தில் இடைக் கால புலவர்களில் ஒருவர், ஒன்று முதல் பதினெட்டு வரை எண்களை அப்படியே வெண்பாவாக எழுதியுள்ளார். புதுமைப்பித்தன் கூட இந்தப் போக்கினைக் கிண்டல் செய்து எழுதியுள்ளார்.

எதற்கு வேண்டுமானாலும் ஒரு கவிதை போன்ற தோற்றத்தைத் தந்துவிடக் கூடிய யாப்பின் வளம் கவிதைக்குப் பலவீனமாகிவிட்டது. அதனால்தான் மரபுக் கவிதையில் ஒரு தேக்கநிலை ஏற் பட்டுவிட்டது.

மரபுக் கவிதை என்பது இன்றைக்கு முழு மையாகத் திரைப்படப் பாடல்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்று சொல் லலாம். 'மெட்டு' (Tune) என்ற வரம்புக்குள் தான் பாடல்கள் எழுதியாக வேண்டும். சில சமயங்களில் புதுக்கவிதைச் சிந்தனைகளும் இப்பாடல்களில் பரிமாறப்படுகின்றன. ஏராளமான குப்பை திரைப்பாடல்களுக்கு நடுவே நல்ல கோமேதகங்களும் அகப்படு வதுண்டு. அத்தகைய ஒரு நல்ல திரைப் பாடலுக்கு நவீன புதுக்கவிதைகள் என்ற

## மு.மேத்தா

பெயரில் சிலர் எழுதி வரும் நானூறு கவிதை கள் கூட ஈடாகாது.

மரபுக்கவிதை நிச்சயமாக மறுமலர்ச்சி பெறும். காலம் என்பது ஒரு சுழற்சி. ஒன்றி லிருந்து தொடங்கும்போது அது புதுமையாக இருக்கும். வேறொன்றை நோக்கிப் போகும் போது அது பழமையாகி விடுகிறது.

# மறைந்து விட்டதா?

தொடங்கிய இடத்துக்கு மீண்டும் வந்து சேரும்போது அந்தப் பழமையே புதுமையா கத் தோற்றமளிக்கும். மரபிலிருந்து புதுக் கவிதைக்குப் போய், நவீன கவிதைக்குப் போய், நாலா திசைகளிலும் அலைந்து திரிந்து மீண்டும் தாயின் மடியைத் தேடி தாலாட்டு கேட்க வரும். மரபு மீண்டும் மலர்ந்து குலுங்கும். புதிய வடிவங்களில், புதிய வெளிப்பாடுகளில் புதிய மரபு பூக்கும். மரபைத் தடுத்து நிறுத்தலாம், தகர்த்துவிட முடியாது.

சந்திப்பு : சுகந்தி ஜி.பாரதி
படம் : ஸ்ரீஹரி



பல படங்களில் நன்றாக நடித்தி ருந்தாலும் பிரசன்னாவுக்கு பெரிய பிரேக் இதுவரை இல்லை. ஆனால் அவர் நடித்து அடுத்து வரவிருக் கும் 'கண்ணும் கண்ணும்' படம் அவருக்கு திருப்புமுனையை ஏற் படுத்தும் என்கிறார்கள். அந் தளவுக்கு வலிமையான காதல் கதையாம். துளிகூட விரசமில் லாமல் எடுத்திருக்கிறார் களாம். உதயதாரா என்னும் புதுமுகத்தை ஹீரோயி னாக்கி இருக்கிறார்கள். பெண்போல பார்க்க நமது பக்கத்து வீட்டுப் பெண்போல இருக்கிறார்.

ஒரு சீனில் உதயதாரா, பிரசன்னாவை அடிக்க வேண்டும். உணர்ச்சிவசப்பட்டு உண்மையாகவே அடி பின்னிவிட, மூக்கு உடைந்து ரத்தம் கொட்டியிருக்கிறது பிர சன்னாவுக்கு. ஐந்து நாட்கள் ஓய்வுக்குப் பிறகே படப்பிடிப்புக்கு வந்திருக்கிறார்.

இயக்குநர் ஜி. மாரிமுத்துவுக்கு இது முதல் படம். பதினைந்து வருடங்கள் உதவி இயக்குநராய் இருந்திருக் கிறார். தயாரிப்பு எம்.ஆர். மோகன் ராதா, பி.எஸ்.ராதாகிருஷ்ணன். செலவைப் பற்றி கவலைப்படாமல் வாரி இறைத்திருக்கிறார்கள். ஒளிப்பதிவு பாலசுப்ரமணியெம், பாடல்கள் வைரமுத்து, இசை தினா.

'கண்ணும் கண்ணும் ஆண்-பெண் உறவுகளுக் கான நாகரிக எல்லைக் கோட்டை புதுப்பிக்கும் முயற்சி' என்கிறார் இயக் குநர். பார்ப்போம்.

- நிரஞ்சனா

மனிதர்கள் தனித்தனியான தீவுகள் இல்லை. ஒரு சங்கிலியில், அடுத்தடுத்து வளையங்கள் இணைக்கப்பட்டிருப்பதைப் போல நமக்குள்ளும் தொடர்பு உண்டு. நமது செயல்கள் எல்லாம் தெரிந்தோ, தெரியாமலோ மற்றவர்களைப் பாதிக்கின்றன. ஒருவனிடம் ஏற்படும் சிறு மாற்றம்கூட அருகிலிருக்கும் இன்னொருவர் மீது லேசான பாதிப்பை ஏற்படுத்துகிறது.

மற்றவர்கள் எல்லாம் நல்லவராக இல்லாதபோது, நான் மட்டும் ஏன் நல்லவனாக இருக்க வேண்டும்? அவர்கள் நல்லவர்களாக மாறட்டும்; பிறகு நான் மாறுகிறேன் என்ற எண்ணம் சரியல்ல. பிறர் மாறவில்லை என்றாலும், நாம் மாற முன் வந்தால், அதன் பலனை சமூகத்தில் காணலாம். அந்த மாற்றம் என்பது உள்ளத்தின் உள்ளே நிகழ்வது.

ஒரு மனிதன் மிகுந்த துக்கத்துடனும், மனச் சோர்வுடனும் என்ன செய்வதென்று புரியாமல் பாதை ஓரமாக நின்று கொண்டிருந்தான். அப்போது, அவ்வழியே சென்று கொண்டிருந்த ஒருவன், அவனைப் பார்த்து, முன்பின் அறிமுகமில்லாத போதும் அன்புடன் புன்னகை புரிந்தான். அனைவராலும் தான் வெறுத்து ஒதுக்கப்பட்டிருக்கிறோம் என்று நினைத்து

# 20 ஆத்மாவின்



வாழ்க்கையை வெறுத்து, தற்கொலை செய்து கொள்ள நினைத்த அவனுக்கு, யாரோ ஒருவர் தன்னைப் பார்த்து அன்புடன் சிரித்தது பெரும் ஆறுதலை அளித்தது. அவன் மனதுக்குள் உற்சாகம் பிறந்தது.

அந்தச் சமயத்தில் அவனுக்குப் பல வருடங்களுக்கு முன்னால் தான் கஷ்டப்பட்ட போது தமக்கு உதவி செய்த ஒரு நண்பனின் நினைவு வந்தது. உடனே தன் பழைய நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதினான். பல நாட்கள் கழித்து, நண்பனிடமிருந்து கடிதம் வந்ததில் அந்த நண்பனுக்கு ரொம்ப மகிழ்ச்சி. சுற்றும் முற்றும் பார்த்தபோது அருகில் ஓர் ஏழை மனிதன் நிற்பதைக் கண்டான். தன் மகிழ்ச்சியினைப் பகிர்ந்து கொள்ளும் விதமாக அந்த ஏழைக்குப் பத்து

# மாதா அமிர்தானந்தமயி

ரூபாய் கொடுத்தான்.

அந்த ஏழை, அந்தப் பணத்தில் டீயும், பன்னும் வாங்கிச் சாப்பிட்டுப் பசியாறிவிட்டு, மீதமிருந்த சில்லறையில் ஒரு பரிசுச் சீட்டு வாங்கினான். குலுக்கலில் பெரும் பணம் பரிசாகக் கிடைத்தது. அதை வாங்கிக் கொண்டு வரும் வழியில் பாதை ஓரத்தில் ஒரு பிச்சைக்காரன் உடல்நலம் குன்றி படுத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தான்.

'ஆண்டவன் நமக்குக் கொடுத்ததுதானே இவ்வளவு பணமும்! இதில் சிறிதளவு இவனுக்குக் கொடுத்தால் என்ன?" என்று அவன் மனம் நினைத்தது. அதன்படி சிறிது பணத்தை எடுத்து அந்தப் பிச்சைக்காரனுக்குக் கொடுத்தான். பணத்தை வாங்கிக் கொண்ட பிச்சைக்காரன், அருகில் இருந்த மருத்துவமனைக்குச் சென்றான். சில நாட்களில் நோய் குணமானது.

ஆரோக்கியமாக மருத்துவமனையை விட்டு வெளியில் வந்த பிச்சைக்காரன், சாலை ஓரத்தில் குளிரும், பசியும் வாட்ட ஒரு சின்ன நாய்க்குட்டி படுத்திருப்பதைப்


# ஆனந்தம்!

## அம்மா

அம்மா அவதரித்த வீடுதான் இன்று அமிர்தானந்தமயி மடம் என்கிற பெயரில் மாபெரும் ஆசிரமமாக வளர்ந்துள்ளது. இங்கே இறைவனை அடைவதையும், உலகுக்குத் தன்னலமற்ற சேவை செய்வதையும் வாழ்க்கையின் லட்சியமாகக் கொண்ட நூற்றுக் கணக்கான ஆண்களுக்கும், பெண்களுக்கும் அம்மா ஆன்மிகப் பயிற்சி அளித்து வருகிறார். நம் நாட்டினர் மட்டுமல்லாது, உலகின் பல நாடுகளைச் சேர்ந்தவர்களும் ஆசிரமத்தை, தங்களுடைய ஆன்மிக இல்லமாகக் கருதுகிறார்கள்.

ஆசிரமத்தில் தங்கியுள்ள சமயங்களில், ஆசிரமத்தின் எல்லா வேலைகளிலும் அம்மா பங்கேற்கிறார். சமையல் அறையில் மற்றவர்களுடன் அமர்ந்து காய்கறிகள் நறுக்குவார்; கட்டட வேலை நடந்தால், தானும் மற்ற ஆசிரம வாசிகளுடன் சேர்ந்து மணலையும், செங்கற்களையும் சுமப்பார். கழிவுநீர்த் தொட்டியினைச் சுத்தம் செய்யும் பணியில்கூட அம்மா தன்னை ஈடுபடுத்திக் கொண்டதுண்டு. எந்த வேலையானாலும் சரி, ஆசிரமவாசிகளிடம் சொல்லிவிட்டு, தாம் சும்மா இருந்தோம் என்பதை அம்மாவின் அகராதியில் கிடையாது. இரவு பூராவும் பக்தர்களுக்குத் தரிசனம் அளித்தாலும்கூட, களைப்பு ஏதுமின்றி பிறருடன் சேர்ந்து வேலைகள் செய்வார். அம்மாவே கூட நின்று வேலை செய்கிறபோது, ஆசிரமவாசிகள் இன்னும் சுறுசுறுப்பாக வேலை செய்வார்கள். அதனால், வேலை சீக்கிரமே முடிந்துவிடும்.

- மௌலி



## உடம்பெல்லாம் மண்!

**அ**மெரிக்காவின் நெவேடா மாநிலத்தருகில் ஓர் ஏரி உள்ளது. கோடை காலத்தில் இங்குள்ள மணலை எடுத்து உடம்பில் பூசி, பின்பு இந்த ஏரியில் குளித்தால் உடல் புத்துணர்ச்சி பெறும் என உல்லாசப் பயணிகள் கருதுகின்றனர். இதற்காக இப்படிக் கூட்டம் கூட்டமாக வந்து இந்த மணல் குளியலை நடத்திவிட்டுப் போகின்றனர். இந்த மணல் குளியல் உடலுக்கு நன்மை செய்கிறது என்கின்றனர் அவ்வூர் மருத்துவர்கள். இதனால் நாளுக்கு நாள் மணல் பூசி களிப்போரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

**- பாரீஸ் பார்த்தசாரதி**

பார்த்தான். அதன்மீது பரிதாபப்பட்டு, அதை எடுத்துக்கொண்டு தன் இருப்பிடத்துக்கு வந்தான். நாய்க்கு உணவு கொடுத்தான். கொஞ்சம் கட்டைகளைப் போட்டு எரித்து இதமான சூட்டில் அதன் குளிரைப் போக்கினான். நாய் குளிரும், பசியும் போன சந்தோஷத்தில் நன்றியுடன் வாலை ஆட்டியது.

பிச்சைக்காரன் நடக்க, அதுவும் அவன் கூடவே நடக்க ஆரம்பித்தது. இருவரும் அடுத்த ஊரை அடைந்தபோது இரவாகிவிட்டது. ஒரு வீட்டின் கதவைத் தட்டி, அங்கே தங்க அனுமதி கேட்டான். அனுமதி அளிக்கப்பட்டது.

நள்ளிரவில், நாய் விடாமல் குரைத்தது. அந்தச் சப்தத்தைக் கேட்டுப் பிச்சைக்காரனும், வீட்டுக்காரரும் கண் விழித்தார்கள். வீட்டில் ஒரு பக்கம் தீப்பற்றி எரிவதைக் கண்டார்கள். எரிந்து கொண்டிருந்த பகுதியில் இருந்த அறைக்குள் அவருடைய குழந்தை தூங்கிக் கொண்டிருந்தது. உடனே வீட்டுக்காரர் உதவி கோரி குரல் எழுப்பினார். அக்கம்பக்கத்தினர் வந்தார்கள். தீ அணைக்கப்பட்டு குழந்தை காப்பாற்றப்பட்டது. தீயிலிருந்து மீட்கப்பட்ட குழந்தை வளர்ந்து, பிற்காலத்தில் பெரிய மகான் ஆனது. அந்த மகானது வழிகாட்டுதலின் காரணமாக ஏராளமான மக்கள் வாழ்க்கையில் ஒளி வீசியது. மன அமைதி பெற்றார்கள்.

இதற்கெல்லாம் மூல காரணம் என்னவென்று யோசித்தால், முதல் மனிதனின் அன்பான புன்னகைதான். அவன் நடந்து போனபோது, பாதை ஓரத்தில் சோர்ந்து நின்று கொண்டிருந்த மனிதனைப் பார்த்துப் புன்னகைத்தான், அவ்வளவுதான். அது எத்தனை பேர் வாழ்க்கையில், எத்தனை நல்ல மாற்றங்களை ஏற்படுத்தியது!


**நா**ம் பிறருக்காகச் செய்யும் மிக அற்பமான செயல்கள்கூட மிகப் பெரிய மாற்றங்களைச் சமூகத்தில் ஏற்படுத்தும் சக்தி வாய்ந்தவை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அதனால்தான் அம்மா சொல்கிறேன், நமது செயல்கள் எதுவுமே பிறருக்கு நல்லவிதமான மாற்றங்களை விளைவிக்கக் கூடியவையாக இருக்க வேண்டுமேயொழிய, எதிர்மறையான பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடியவையாக ஒருபோதும் இருக்கக்கூடாது. துரதிருஷ்டவசமாக இன்று பலரது புன்னகைகூட அன்பு கொண்டதாக இல்லாமல், மற்றவர்களை கேலிக்குள்ளாக்குவதாகவே உள்ளது.

பல குழந்தைகள் அம்மாவிடம் "எப்படி அம்மா எப்போது பார்த்தாலும் சிரித்த முகத்துடனேயே உங்களால் இருக்க முடிகிறது?" என்று கேட்பார்கள். அம்மா ஒருநாளும் சிரிக்க வேண்டும் என்று நினைத்துச் சிரிப்பதில்லை; அது இயல்பாகவே வருகிறது. ஆத்மாவை அறிந்து விட்டால் அதன்பின் எப்போதுமே ஆனந்தம்தானே? அதன் இயல்பான வெளிப்பாடுதானே புன்னகை?

(அன்பு பெருகும்)

# கவர்னர் விஜயம்

## பாகம் – 1





அமரர் கல்கி

ஸ்ரீமான் சிவகுருநாதஞ் செட்டியார் மத்தியான போஜனம் ஆன பின்னர், வழக்கம்போல் சாய்வு நாற்காலியில் படுத்துக்கொண்டு பத்திரிகையைப் பிரித்துப் புரட்டினார். தலைப்புகளை மட்டும் பார்த்துக்கொண்டே போன அவர், "பொய்கையாற்றுத் தேக்கம்" "கவர்னர் அஸ்திவாரக்கல் நாட்டுவார்" என்னும் தலைப்புகளைப் பார்த்ததும் திடுக்கிட்டுப் போனார். செட்டியாருக்கு மயிர் கூச்சல் உண்டாயிற்று. மார்பு சிறிது நேரம் 'பட்' 'பட்' என்று அடித்துக் கொண்டது. சற்று சமாளித்துக்கொண்டு அத்தலைப்புகளின் கீழ் இருந்த செய்தியை முற்றும் படித்தார். அம்மாதம் 20-ம் நாள் காலை 7 மணிக்கு கவர்னர் துரை.... ரயில்வே ஸ்டேஷனில் இறங்கிப் பொய்கையாற்றுத் தேக்கத்துக்கு மோட்டாரில் செல்வாரென்பதும், மற்றும் பல விவரங்களும் இருந்தன. செட்டியார் உடனே தமது பிரதம காரியஸ்தர் ஜெயராமையரைக் கூப்பிட்டனுப்பினார். காரியஸ்தர் வந்து சேர்ந்ததும், "ஐயரே, சங்கதி தெரியுமா?" என்றார்.

"தெரியாதே! என்ன விசேஷம்?"

"உமக்கேனையா தெரியும்? இதற்குத்தான் பத்திரிகை படியுமென்று உமக்குப் படித்துப் படித்துச் சொல்கிறேன். வருஷத்தில் ரூ.250 செலவழித்து இவ்வளவு பத்திரிகைகள் தருவிக்கிறோமே, பின் எதற்காக? நான் மட்டும் ஜாக்கிரதையாகப் படித்துக் கொண்டு வராவிட்டால் இப்போது என்ன ஆகியிருக்கும்?"

"விஷயம் என்னவென்று எஜமான் சொல்லவில்லையே?"

"நம்மூருக்கு 20-ம் தேதி கவர்னர் வருகிறார்!"

காரியஸ்தர் இடி விழுந்ததுபோல் வாயைப் பெரிதாகத் திறந்தார். "ஓ... ஓ..." என்ற சத்தத்தைத் தவிர வேறு வார்த்தை அவர் வாயினின்றும் வரவில்லை.

"சரி, மேலே என்ன செய்கிறது?" என்று செட்டியார் கேட்டார்.

"எல்லா ஏற்பாடுகளும் செய்துவிட வேண்டியதுதான்."

"20-ம் தேதி காலை ரயில்வே ஸ்டேஷனுக்குப் போக வேண்டும். நமது மோட்டார் வண்டியில் ஒரு தூசு இல்லாமல் பளபளவென்று தேய்த்து வைக்கச் சொல்லும்."

"பார்த்தீர்களா? நான் பிடிவாதமாக மோட்டார் வண்டி வாங்கத்தான் வேண்டுமென்றது இப்போது எவ்வளவு பயன்படுகிறது?"

"இந்த முன்யோசனைக்காகத்தானே ஐயரே, உம்மிடத்தில் எனக்கு இவ்வளவு பிரியம்? இருக்கட்டும், நமது வீட்டு வாசலை அலங்கரிக்க வேண்டாமா?"

"நமது வீதி வழியாக கவர்னர் போகிறாரா?"

"நிச்சயமில்லை. ஒரு வேளை ஸ்டேஷனில் இறங்கி நேரே போய் விடலாம். கலெக்டர் துரையிடம் சொல்லி நமது வீதி வழியாய்ப் போக ஏற்பாடு செய்ய வேண்டும்."

"முடியாவிட்டாலும் பாதகமில்லை. எப்படியும் நமது வீடு அலங்கரிக்கப்பட்டிருந்த செய்தி பத்திரிகைகளில்



வெளியாகிவிடு மல்லவா?''

''அதுவும் உண்மைதான். இருக்கட்டும். கூர்மாவதாரம் ஐயங்காருக்கு இச்செய்தி தெரியாமலிருக்க வேண்டுமே? அவர் என்னைப்போல் தினம் பத்திரிகை கவனமாகப் படிக்கிறாரா?''

''அவருக்குத் தெரிந்தாலும் பாதகமில்லை. தாங்கள் யோசனை செய்ய வேண்டாம். முதலில் அவரிடம் மோட்டார் கிடையாது. பழைய கர்நாடக போச்சு வண்டியில்தான் அவர் வர வேண்டும். மேலும் தங்களுக்கு நினைவில்லையா? கலெக்டர் தர்பாரிலே அவருக்கு ராவ் பகதூர் பட்டம் அளிக்கப்பட்டபோது, அவருடைய வேஷத்தையும், அவர் திரும்பத் திரும்பச் சலாம் போட்டதையும் பார்த்து எல்லாரும் 'கொல்' என்று சிரிக்கவில்லையா? அந்த மாதிரிதான் இப்போதும் ஆகும்'' என்றார் காரியஸ்தர்.

அச்சம்பவத்தை நினைத்துச் செட்டியார் இப்போதும் சற்று நகைத்தார். ''இருந்தாலும், நாம் வீடு அலங்காரம் செய்யும் விஷயம் அவருக்குத் தெரியக் கூடாது. எல்லா ஏற்பாடும் செய்து தயாராய் வைத்துக்கொண்டு, 19-ம் தேதி இரவு பத்து மணிக்கு அலங்காரஞ் செய்துவிடுவோம். ஐயங்காரைக் காலையில் எழுந்து விழிக்கும்படிச் செய்யலாம்'' என்றார்.

இன்னும் என்னென்ன ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்பதைப் பற்றிச் செட்டியாரும் காரியஸ்தரும் நீண்ட நேரம் யோசித்தார்கள். கடைசியில் பளிச்சென்று ஓர் எண்ணம் உதயமாயிற்று. மறுநாள் நடக்கும் நகர சபைக் கூட்டத்தில் கவர்னருக்கு உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுக்க வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தைத் தாம் கொண்டு வரப்போவதாகச் செட்டியார் எழுதி நகர சபையின் தலைவருக்கு அனுப்பினார். பின்னர், காரியஸ்தர் தமது காரியத்தைப் பார்க்கச் சென்றார்.


ஸ்ரீமான் சிவகுருநாதஞ் செட்டியார் பெரிய வியாபாரி. அவர் வசித்த சிறு பட்டணத்தில் மூன்று மாடி வைத்த மாளிகை அவர் ஒருவருக்கே உண்டு. இளமையில் அவர் ஓர் ஏழையாகவே இருந்தார். முதலில் ஓர் இரும்புக் கடையில் குமாஸ்தாவாக வேலை பார்த்தார். லக்ஷ்மிதேவியின் கடைக் கண் பார்வை அவர் மீது விழுந்தது. தனிக்கடை வைத்து வியாபாரம் நடத்தவே, செல்வம் நாளுக்கு நாள் பெருகிற்று. மகாயுத்தத்திற்குச் சற்று முன்பு ஏராளமான இரும்புச் சரக்குகள் அவருடைய கடையில் தங்கியிருந்தன. யுத்தம் ஆரம்பித்த பின்னர், இரும்புச் சாமான்களின் விலை இருமடங்கு, மும்மடங்காயிற்று. செட்டியார் ஒரேயடியாக லட்சாதிபதியாகிவிட்டார். பின்னர், கௌரவங்களில் ஆசை விழுந்தது. அடுத்த வீட்டு வக்கீல் ராவ்பகதூர் கூர்மாவதாரம் ஐயங்காரைத் தமது வாழ்க்கை உதாரணமாகக் கொண்டார். நடை, உடை பாவனைகளில் அவரைப் பின்பற்றினார். ஆங்கில ஆசான் ஒருவரை அமர்த்தி ஆங்கிலம் கற்றுக் கொண்டார். நாகரிக வாழ்க்கைக்குரிய ஆடம்பரங்களனைத்தையும் ஒவ்வொன்றாகக் கைக்கொண்டார். உத்தியோகஸ்தர்களுக்கு அடிக்கடி விருந்து நடத்தினார். பெருந்தொகை செலவு

செய்து நகரசபை அங்கத்தினராகவும் ஆனார். இப்போது அவருடைய மனம் முழுவதும் 'ராவ்பகதூர்' பட்டத்தைப் பற்றி நின்றது. இதனோடு, தாம் ராவ்பகதூர் பட்டம் பெறுவதற்குள், ஐயங்கார், மேல்வகுப்புக்கு, அதாவது திவான்பகதூர் பட்டத்துக்குப் போய்விடாமலிருக்க வேண்டுமே என்ற கவலையும் அவருக்குண்டு. எனவே, கவர்னர் தமது ஊருக்கு விஜயம் செய்யும்போது ஐயங்காரை எந்த விஷயத்திலாவது முந்திக்கொண்டு கவர்னரின் கவனத்தைக் கவர்ந்து பட்டம் பெற்றுவிடவேண்டுமென்பது அவருடைய நோக்கம். மேலே குறிப்பிட்ட சம்பாஷணையில் கூர்மாவதாரம் ஐயங்காரின் பெயர் அடிக்கடி அடிபட்டதற்கு இதுதான் காரணமாகும்.



**ம**றுநாள், ஸ்ரீமான் செட்டியார், மகிழ்ச்சி ததும்பிய முகத்துடனே நகரசபைக் கூட்டத்திற்குச் சென்றார். கவர்னருக்கு உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுக்க வேண்டுமென்று தீர்மானத்தைப் பிரேரணை செய்து பேசுவதற்கு ஒரு பிரசங்கத்தைத் தயாரித்து தமது சட்டைப் பையில் போட்டுக் கொண்டிருந்தார். அப்பிரசங்கத்தை மூன்று பாகமாகப் பிரிக்கலாம். முதல் பகுதியிலே, இந்தியாவுக்கு ஆங்கில ஆட்சியின் பயனாக ஏற்பட்ட நன்மைகளைப் பற்றி வருணித்திருந்தார். இரண்டாவது பகுதியில் கவர்னர் துரையின் பூர்வோத்தரங்கள், குலப் பெருமை, குணச்சிறப்பு மற்றும் கல்யாண குணங்கள் எல்லாவற்றையும் பற்றி விரித்துக் கூறியிருந்தார். மூன்றாம் பகுதியில் கவர்னர் துரை இம்மாகாணத்தில் வந்து பதவியில் அமர்ந்த பின்னர் செய்த, செய்யாத எல்லா நன்மைகளையும் பற்றிக் குறிப்பிட்டு விட்டு ஒரே ஒரு விஷயத்தை மட்டும் மேன்மை தாங்கிய கவர்னர் பிரபுவின் மேலான கவனத்துக்குத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்வது தமது வருந்தத்தக்க கடமையாயிருக்கிறதென்றும், அவருடைய ஆதிக்கத்தில் இராஜ விசுவாசிகளுக்கு ஆதரவு போதாதென்றும், பட்டங்கள் வழங்கும் விஷயத்தில் ஆசாமிகளின் யோக்கியதாம்சங்களைச் சற்றுக் கவனித்து கருணை புரிய வேண்டும் என்றும் சொல்லியிருந்தார். இந்தப் பிரசங்கத்துக்கு நகல்கள் எடுத்துத் தமது காரியஸ்தர் மூலம் எல்லாப் பத்திரிகை நிருபர்களுக்கும் அனுப்பி, பிரசங்கம் முழுவதையும் பத்திரிகைகளுக்கு தந்தியில் அனுப்பும் செலவைத் தாம் ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்ததுடன், கவர்னர் விஜயத்துக்கு மறுநாள் தமது வீட்டுக்கு வந்து தம்மைக் கண்டு போகும்படியும் சொல்லியனுப்பினார்.

ஆனால், அந்தோ! அவர் நகரசபைக் கட்டடத்தை



## தவழும் பிள்ளையார்

அகமதாபாத்திலிருந்து சுமார் 45 கி.மீ தூரத்தில் 'கணேஷ்புரா' என்ற சிறிய கிராமம் உள்ளது. அங்கு உள்ள கோயிலில் விநாயகர், கையில் லட்டு உருண்டையுடன் தவழ்வது போல் இருப்பார். இவர் சக்தி வாய்ந்த பிள்ளையார் ஆதலால் சுற்றுலா செல்பவர்கள், இந்தப் பிள்ளையாரை தரிசிக்காமல் செல்வதில்லை.

- அகமதாபாத் பாண்டு

அடைந்து ஆசனத்திலமர்ந்ததும், அவர் மகிழ்ச்சி அவ்வளவும் துயரமாகவும், கோபமாகவும் மாறிற்று. ஏனெனில், ராவ் பகதூர் ஐயங்கார் தம்மை முந்திக் கொண்டு கவர்னர் வரவேற்புத் தீர்மானம் கொண்டு வருவதாக முன்னாடியே அறிவித்து விட்டாரென்றும், ஆதலால் அவருடைய தீர்மானந்தான் முதலில் வருமென்றும் தெரிய வந்தன. ஆனாலும் செட்டியார் தோல்வியைக் கண்டு அஞ்சி விடுபவரல்லர். முயற்சி திருவினையாக்குவதை அவர் தமது வாழ்க்கையில் கண்டறிந்தவர். எனவே ஐயங்காருக்கு அடுத்தாற்போல் தாமே தீர்மானம் அனுப்பியிருப்பதால் ஐயங்காரின் தீர்மானத்தை ஆமோதிக்கும் உரிமையாவது தமக்கு அளிக்க வேண்டுமெனப் போராடி அவர் வெற்றியடைந்தார். அதன்பின் தீர்மானத்தை ஆமோதிக்கும் வாயிலாக, தாம் எழுதி வைத்திருந்த பிரசங்கம் முழுவதையும் படித்துவிட்டார்.

செட்டியார் மறுநாள் தபாலை ஆவலுடன் எதிர்பார்த்திருந்து, வந்ததும் பத்திரிகைகளை உடைத்துப் பிரித்தும் பார்த்தார். அந்தோ! அவர் ஏமாற்றத்தை என்னவென்று சொல்வது? ஒரு பத்திரிகையிலாவது இவருடைய பிரசங்கம் வெளியாகவில்லை. "ஸ்ரீமான் சிவகுருநாதஞ் செட்டியார் தீர்மானத்தை ஆமோதித்தார்" என்ற பாடமே எல்லாப் பத்திரிகைகளிலும் காணப்பட்டது. செட்டியாரின் பிரசங்கத்தைப் பத்திரிகைகளுக்கு அனுப்பாமலிருப்பதற்கு வேண்டிய வேலைகளை முன்னமேயே ஐயங்கார் செய்துவிட்டது. பாவம்! அவருக்குத் தெரியாது.

அவர் உலகிலுள்ள எல்லாரையும், கடவுளையுங் கூடச் சேர்த்துத் திட்டிக் கொண்டிருக்கையில், காரியஸ்தர் வந்து சேர்ந்தார். அவர் கொண்டு வந்த செய்தி செட்டியாருக்கு ஓரளவு ஆறுதல் அளித்தது.

"சங்கதி கேட்டீர்களா? கவர்னர் துரை காலை ஏழு மணிக்குத்தான் ஸ்டேஷனுக்கு வரப் போகிறாராம். ஒன்பது மணிக்குப் பொய்கையாற்றுத் தேக்கத்துக்கு அஸ்திவாரக்கல் நாட்டுவதற்குத் திட்டம் செய்யப்பட்டிருக்கிறதாம். சுமார் ஐம்பது மைல் இதற்கிடையில் பிரயாணஞ் செய்தாக வேண்டும். ஆதலால் நகர சபை உபசாரப் பத்திரத்தை, நகரமண்டபத்துக்கு வந்தோ அல்லது ரயில்வே ஸ்டேஷனிலேயோ பெற்றுக் கொள்ளுவதற்கு நேரமில்லையாம். இச்செய்தி இப்போதுதான் கவர்னரின் அந்தரங்க காரியதரிசியிடமிருந்து வந்ததாம். தாங்கள் அத் தீர்மானத்தைப் பிரேரணை செய்யாததே நல்லதாகப் போயிற்று. இல்லாவிடில் இப்போது எவ்வளவு அவமானம் பாருங்கள்" என்றார் காரியஸ்தர்.

"ஆ! கூர்மாவதாரம் ஐயங்காருக்கு நன்றாய் வேண்டும். என்னைப் முந்திக் கொள்ளப் பார்த்தாரல்லவா?" என்று கூறி செட்டியார் உவகையடைந்தார்.


"ஆனாலும், 20-ந் தேதி காலையில் ஸ்டேஷனுக்குப் போக வேண்டுமல்லவா?" என்று காரியஸ்தர் கேட்டார்.

"சந்தேகமில்லாமல், மற்ற எல்லா ஏற்பாடுகளும் முன்னரே திட்டம் செய்துள்ளபடி நடத்த வேண்டியதே..."

(தொடரும்)

# பரோபகாரம்!

நம்முடைய லோக ஸேவையால்தான் லோகம் நடக்கிறது என்ற பிரமை ஒருக்காலும் இருக்கக் கூடாது. மரம் வைத்தவன் தண்ணீர் விடுகிறான். லோகத்தைப் பண்ணின ஒருத்தன் இருக்கிறானே அவனே அதை ரக்ஷித்து விட்டுப் போவான். அதற்கு நாம் ஒரு கருவிதான். நம்முடைய பாபகர்மா கழியவே பரோபகாரமே தவிர நாமில்லா விட்டால் அந்த உபகாரம் லோகத்துக்குக் கிடைக்காமல் போய்விடாது என்ற ஞானம் இருந்தால் அளவோடு நிற்போம். ஜீவனத்துக்கு அவச்யமான சொந்தக் கார்யங்கள், குடும்பக் கடமைகள் இவற்றைப் பண்ணிக் கொள்வதிலும் கர்மநாசம், சித்த சுத்தி ஏற்படத்தான் செய்யும். ஈச்வரானுக்ரஹத்தில் இப்படிப்பட்ட பொறுப்புக்கள் அதிகமில்லாதவர்கள் நிரம்பப் பரோபகாரப் பணிகளில் ஈடுபட்டே ஆத்மாவைப் பரிசுத்தி பண்ணிக் கொள்ள வேண்டும்; அப்படிப் பட்டவர்களுக்கு இதுவே ட்யூட்டி ஆகிறது. டொமெஸ்டிக் ட்யூட்டிபோல ஸோஷல் ட்யூட்டியும் உண்டுதான்.



எத்தனை டொமெஸ்டிக் ட்யூட்டி இருந்தாலும், அதைப் பண்ணிவிட்டு, அதைப் பண்ணின அப்புறந்தான் ஸோஷல் ட்யூட்டியும் செய்ய வேண்டும். ரொம்ப அதிகம் குடும்பப் பொறுப்பு இருக்கிற ஒரு சிலரைத் தவிர மற்ற எல்லோருக்குமே நியாயமான சொந்தக் கடமைகளைப் பண்ணிவிட்டும், ஸமூஹக் கடமை பண்ண அவகாசம் இருக்கவே செய்யும். எப்படியானாலும் தன் காரியத்தைப் பிறர் கையில் விட்டு விட்டும், அகத்து வேலையைக் கவனிக்காமலும் ஊர்க்காரியம் என்று போவதில் பிரயோஜனமில்லை. இப்படிக் கோபமும் தாபமும்தான் பரோபகாரம் பண்ணினதில் ஒருத்தனுக்கு மிஞ்சினது என்று ஏற்பட்டால் அது சித்த சுத்திக்குப் பதில் சித்த அசுத்திக்குத்தான் வழி பண்ணியிருக்கிறது என்றே ஆகிறது. அதாவது பரோபகாரம் நல்ல பலன் தராதது மட்டுமில்லாமல், விபரீத பலனே உண்டாக்கியிருக்கிறது! சாஸ்த்ர ரீதியான கடமையை விட்டதற்காக இப்படி நல்லதே தண்டனையாக ஆகிறது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

ராதா, சீதா, கல்பனா, கவிதா ஆகிய நான்கு பெண்களும் ஐஸ்வர்யா காலனியில் வசித்து வருகிறார்கள். குடும்ப விஷயங்களை மனம் விட்டுப் பேசிக் கொள்கின்ற அளவுக்கு நெருங்கிய தோழிகள்.

### இதுவரை

பாமா ராதாவின் ஆருயிர்த் தோழி. பாமாவின் நிறுவனத்தில்தான் ராதாவின் கணவன் ஷ்யாம் வேலை செய்கிறான். ஷ்யாமின் மீது பாமா ஈர்க்கப்படுகிறாள். பாமாவின் பணம், பகட்டு, அந்தஸ்து ஆகியவற்றைப் பார்த்து ஷ்யாமும் மயங்குகிறான்.

கார், கிரெடிட்கார்டு போன்ற வசதிகளையெல்லாம் செய்து கொடுத்து ஷ்யாமைத் தனது கட்டுப்பாட்டுக்குள் ஒரு நாய்க்குட்டி போல மாற்றி வைத்திருக்கிறாள் பாமா.

ராதாவிடம் இருந்து அவனை முழுமையாகப் பிரித்து தன்னுடையவனாக்கிக் கொள்ளத் திட்டமிடுகிறாள். அது குறித்துப் பேசுவதற்காக ஷ்யாமை மாமல்லபுரத்திலுள்ள பீச் ரிசார்ட்டுக்கு அழைத்துச் செல்கிறாள்.

ஆனால் ராதாவிடம் பிசினஸ் விஷயமாக ஷ்யாமை மைசூர் அழைத்துச் செல்வதாகப் பொய் சொல்கிறாள். ராதாவும் அதை உண்மை என்று நம்பி, தனது கணவனை அனுப்பி வைக்கிறாள்.

இதற்கிடையே அருண் பணிபுரியும் நிறுவனத்தின் ஜி.எம். அவனது வீட்டுக்கு வருகிறார். நிறுவனத்தின் உற்பத்தியைப் பெருக்க, கவிதா கொடுத்த ஐடியா பிரமாதமாக ஒர்க் அவுட் ஆகிவிட்டதாகவும், ஒரே மாதத்தில் நிறுவனத்தின் உற்பத்தி எட்டு சதவிகிதம் அதிகரித்து விட்டதாகவும் சொல்லி, அவளைப் பாராட்டுகிறார். கவிதாவுக்கும் அவளது குடும்பத்துக்கும் ட்ரீட் கொடுப்பதாக, பாமா - ஷ்யாம் வந்திருக்கும் அதே பீச் ரிசார்ட்டுக்கு அழைத்து வருகிறார்.

பாமா - ஷ்யாம் ஜோடியாகப் போவதைப் பார்த்து கவிதா அதிர்ச்சியடைகிறாள்.

ராதாவிடம் விஷயத்தை போனில் சொல்லி அவளையும் ரிசார்ட்டுக்கு வரவழைக்கிறாள். கவிதா தங்களைக் காட்டிக் கொடுத்து விடுவாள் என்பதை

# எதிரிக்கு

உணரும் பாமாவும், ஷ்யாமும் ரிசார்ட்டில் உள்ளவர்களின் துணையோடு தப்பித்துக் கொள்கிறார்கள்.

கவிதாவைத் தவறாகப் புரிந்து கொள்ளும் ராதா அவளைத் திட்டி விடுகிறாள். கவிதாவுக்கு ஷ்யாம் கொடுக்கும் முக்கியத்துவத்தைப் பார்த்து பொருமிக் கொண்டிருந்த அருண், ராதா விவகாரத்தை மையமாக வைத்து கவிதாவைக் கண்டபடி திட்டுகிறான். கவிதாவுக்கு ஆதரவாகப் பேச வரும் ஷ்யாமையும் எடுத்தெறிந்து பேசி விடுகிறான்.

இது ஒருபுறமிருக்க, கல்பனாவின் தங்கை ஊரிலிருந்து வந்து இறங்குகிறாள். தயாளனின் இரண்டாவது மகன் ஆனந்துக்கும் அவளுக்கும் முதல் பார்வையிலேயே மோதல் ஏற்படுகிறது.



### இனி

தானும், ஷ்யாமும் பதிவுத் திருமணம் செய்து கொள்ள வழியிருக்கிறதா என்று விசாரிக்கிறாள் பாமா. அதன் தொடர்ச்சியாக ராதாவை விவாகரத்து செய்யும்படி ஷ்யாமை வற்புறுத்துகிறாள். இந்நிலையில் ஊரிலிருந்து ராதாவின் மாமியார் ஆனந்தாயி வருகிறார். குழந்தை இல்லாததைக் காரணம் காட்டி ராதாவை வார்த்தைகளால் குத்திக் கிழிக்கிறாள். பாமா, ஷ்யாம் நெருக்கம் பற்றி ஜானவி பாட்டியின் மூலமாகவும் ராதாவுக்குத் தெரிய வருகிறது. ராதா அதற்கு எப்படி ரியாக்ட்

செய்கிறாள்?

எதிரிக்கு எதிரி நண்பன் என்ற வகையில் பாமாவும், ஆனந்தாயியும் சந்திக்கின்றனர். அந்தச் சந்திப்பின் விளைவுகள் என்ன? ஆனந்தாயியின் வற்புறுத்தலால் டாக்டரிடம் குழந்தைப் பேறுக்கான செக்கப்புக்குச் செல்கிறாள் ராதா. செக்கப்பில் முடிவு என்னவானது?

ட்ரீட் முடிந்து வந்ததிலிருந்த கவிதாவின் மீதும் ஷ்யாமின் மீதும் கடும் கோபத்தில் இருக்கிறான் அருண்.



# எதிரி!

அதைத் தனது செயலிலும், பேச்சிலும் வெளிப்படுத்துகிறான். அதே நிறுவனத்தில் வேலை செய்யப் பிடிக்காமல் வேறு நிறுவனத்தில் வேலை தேடுகிறான். அதிர்ஷ்டவசமாக அவனுக்கு வேலை கிடைத்து விடுகிறது. புதிய வேலை கிடைத்த கர்வத்தில் பழைய நிறுவனத்தின் மேலாண் இயக்குநரிடமும் கவிதாவிடமும் அலட்சியமாக நடந்து கொள்கிறான் அருண். அந்த அலட்சியத்தால் அவனுக்குக் கிடைத்த பரிசு என்ன?

புதிய நிறுவனத்தில் அவன் எத்தகைய அதிர்ச்சியையும் அனுபவத்தையும் சந்திக்க நேர்ந்தது? கல்பனாவின் தங்கை தேஜா, யோகா மாஸ்டராக இருக்கிறாள். அக்கம் பக்கத்திலுள்ள குழந்தைகளுக்கு யோகா சொல்லிக் கொடுக்க ஆரம்பிக்கிறாள்.

கல்பனாவின் கணவன் மாதவன். மாதவனின் நண்பனான மகேஷ் தேஜாவிடம் வழிகிறான். மாதவன் மனதிலும் மச்சினி பற்றி ஆசைத் தீயை மூட்டுகிறான். மாதவன் மனத்தில் மோகத்தீ பற்றிக் கொள்கிறதா?

தேஜாவிடம் அடிக்கடி மோதும் ஆனந்தை யாமினி ஒருபுறம் நெருங்க ஆரம்பிக்கிறாள். அஸ்வினியும், கார்த்திக்கும் சந்திக்கக் கூடாது என்று கீதா போராடியதற்கு வெற்றி கிடைத்ததா?

பதில்கள் இந்த வார எபிசோடுகளில்!

**'கண்ணாடி கதவுகள்' தொடரை விஜய் டீ.வியில் பார்த்துவிட்டுத் தகுந்த விமர்சனங்களை எழுதி அனுப்பவும். தேர்ந்தெடுக்கப்படும் ஓர் அதிர்ஷ்டசாலி நேயருக்குத் தங்க நாணயம் பரிசாகக் காத்திருக்கிறது! கல்கியில் வெளியாகும் கூப்பனை விமர்சனக் கடிதத்துடன் இணைத்து அனுப்புங்கள்.**

கண்ணாடி கதவுகள்,
விஜய் டீ.வி,
அஞ்சல் பெட்டி எண்: 8484,
சென்னை - 600 034



# காற்றால் வந்த பாதிப்பு!

அண்மையில் என் நண்பர் உடல் நலம் குன்றி மருத்துவமனையில் இருந்தார். காரணம் என்னவென்று கேட்ட போது, வலக்காதுக்குள் ஏதோ ஒரு சப்தம் கேட்டதாகவும் தொடர்ந்து வலக் கண் விழியும் சற்றே முன்னால் பிதுங்கி வந்ததாகவும் சொன்னார். டாக்டரைக் கலந்தாலோசித்தபோது, மூன்று நாட்கள் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற அறிவுறுத்தியிருக்கிறார்.

நண்பர் தம் உறவினர்களைப் பார்க்க மாதம் ஒருமுறை சென்னைக்கும், கோவைக்கும் சென்று வந்து கொண்டிருந்தார். ஜன்னலோரம் அமர்ந்து முழுக் காற்றும் தம்மீது படும்படி கதவைத் திறந்து வைத்துக் கொண்டு பயணிப்பாராம். இப்படி வாகனங்களில் ஜன்னலோரம் அமர்பவர்கள் காதுகளை, குறிப்பாக ஜன்னல் பக்கம் உள்ள காதை மூடிக்கொள்ள வேண்டும் என்று டாக்டர் கூறியுள்ளார். எதிர்க்காற்று செவிப்பறையைத் தாக்கினால் இப்படிக் காதும் கண்ணும் பாதிக்கப்படும் வாய்ப்புண்டு என்றும் டாக்டர் கூறியுள்ளார். இனி கவனமாக இருப்போம்!

**- கே.என்.பாலகிருஷ்ணன்,**
**கும்பகோணம்**

## நடவடிக்கை தேவை!

மக்கும் குப்பை, மக்காத குப்பை எனப் பிரித்துப் போடும் 'இரட்டைக் குப்பைக் கூடை' முறை சென்னைக்கு மிக அருகில் உள்ள மடிப்பாக்கத்தில், இன்னும் எட்டிப் பார்க்கக்கூட இல்லை. குப்பை வண்டியும் ஒழுங்காக வருவதில்லையாதலால், இன்னும் இங்குள்ள மக்கள், குப்பைகளைத் தெருவில் போட்டு எரிக்கும் வழக்கத்தைத்தான் மேற்கொள்கின்றனர். இதனால் இவ்வூரிலுள்ள மக்களுள் பெரும்பாலோருக்கு 'மூச்சிரைப்பு' (விசிங்) நோய் உள்ளது. புறநகர் வளர்ச்சிக்கும், சமூக நலத்துக்கும் வரலாறு காணாத தொகையை ஒதுக்கியுள்ள தமிழக அரசு, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**- இ.பு.ஞானப்பிரகாசம்,**
**மடிப்பாக்கம்**

## காதலர்கள் கவனிப்பார்களா?

அண்மையில் சென்னை வள்ளுவர் கோட்டம் சென்றிருந்தேன். இங்கு காதலர்களின் தொல்லை அதிக அளவு உள்ளது. உரசிக்கொண்டும், ஒட்டிக்கொண்டும் மிக அநாகரிகமாக நடந்துகொள்கிறார்கள். பொது இடத்தில் இப்படி நடந்து கொள்ளலாமா? யாரோ சிலரால் ஒட்டுமொத்த காதலர்களுக்கும்தானே கெட்ட பெயர்! திருந்துவார்களா?

**- மதுமிதா,**
**சென்னை**

# ரோஸி

டி. சீனிவாசன்

ஜெயந்தி தன் மகள் கவிதாவின் வகுப்பாசிரியை தேவியைக் காண்பதற்காக வராண்டாவில் காத்திருந்தாள்.

விஷயம் என்னவென்று தெரியாததால்... கொஞ்சம் ஆர்வமும், படபடப்புமாய்க் காணப்பட்டாள்.

சிறிது நேரத்தில் தேவி தன் ஓய்வு அறைக்கு ஜெயந்தியை அழைக்க, இவளும் 'வணக்கம்' சொல்லி அமர்ந்தாள்.

"உங்களுக்கு ஒரே பொண்ணா..?"

"ஆமாம் மிஸ்!"

"நீங்களும் ஓர்க் பண்றீங்க இல்ல?"

"எஸ்!"


"வீட்ல வேற பெரியவங்க இல்ல போலருக்கு?"

சிறிது யோசித்துவிட்டு... பிறகு ஜெயந்தி 'ஆம்' என்பதுபோல தலையாட்டினாள்.

"சரி... விஷயத்துக்கு வர்றேன். லாஸ்ட் வீக் கிளாஸ்ல ஒரு டெஸ்ட் வச்சேன். ஒவ்வொரு ஸ்டூடண்டையும் தனக்குப் பிடிச்ச ஒருத்தரப் பத்தி ஒரு எஸ்ஸே எழுதச் சொன்னேன். எல்லோரும் தங்களோட அம்மா... இல்ல அப்பாவப் பத்திதான் எழுதினாங்க. பட்.. உங்க டாட்டர்... யாரோ ரோஸின்னு ஒருத்தங்களப் பத்தி எழுதினா. ஐ வாஸ் சர்ப்ரைஸ்டு. சரி, அவகிட்ட கேக்கறத விட, உங்கள கேட்டா நல்லதுன்னுதான் உங்கள வரச் சொன்னேன். ஐ வாண்ட் டு நோ ஹூ இஸ் த ரோஸி?"

தேவி கேட்டுவிட்டு, ஒரு எதிர்பார்ப்புடன் ஜெயந்தியைப் பார்க்க, ஜெயந்தி புரியாதவளாய் யோசித்தாள். ரோஸி என்ற பெயரில் யாரை கவிதா கட்டுரையாக எழுதியிருக்க முடியும்?

சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு, பின் ஜெயந்தி, "சாரி மிஸ், எனக்கு எதுவும் தெரியல. பட் அவ எங்களப் பத்தி எழுதாதது ஒரு கில்ட்டியாத்தான் இருக்கு. இனிமே அவமேல நான் ரொம்ப கேர் எடுத்துக்கறேன்!"



தேவியிடம் விடை பெற்றுக்கொண்டு வந்த ஜெயந்தி, வீட்டுக்கு வந்து கவிதாவின் டேபிளின் மீதிருந்த அழகாக, புசுபுசுவென்றிருந்த அந்த பொம்மையை ஆசையாகப் பார்த்தாள்.

தேவி, மிஸ்ஸிடம் ரோஸி என்பது ஒரு பொம்மை என்று சொல்ல ஜெயந்திக்கு தைரியமும் இல்லை; மனசும் இல்லை.

●

# நடக்குமென்பார்

**மேஷம்** : மகிழ்ச்சிகரமான வாரம். வாக்கு, தனம், கல்வி மேலோங்கும். பொருளாதாரக் கஷ்டம் இருக்காது. நண்பர் / உறவினர்களால் ஆதாயம் ஏற்படும். வீடு/மனை, வாகனம் வாங்க உத்தமம். கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும். மகப்பேறு பாக்கியம் கிட்டும். தடைப்பட்ட திருமணம் கைகூடும். உத்தியோகத்தில் நற்பெயர் ஏற்படும். ஊதிய உயர்வு, இடமாற்றம் ஏற்படும். அரசாங்க வழியில் நற்பலன் கிட்டும். புதிய தொழில் செய்ய நல்ல வாய்ப்புகள் தேடி வரும். மனச்சலனம் போகும். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்து இடநேரும். ஆஞ்சநேயருக்குத் துளசிமாலை சாத்தி வர, நற்பலன்கள் நிறையும்.

**ரிஷபம்** : எதிர்ப்புகள் விலகும் வாரம். பூர்வீகச் சொத்து பாகப்பிரிவினை ஆகும். பண நெருக்கடி விலகும். வழக்கு வியாஜ்யம் வெற்றி பெறும். உடல்நிலையில் முன்னேற்றம் கிட்டும். கல்வி மேன்மை பெறும். நெருங்கிய உறவினர்/நண்பர் விலகும் சூழ்நிலை வரும். கூட்டுத் தொழில் செய்பவர்கள் எச்சரிக்கையாக இருக்கவும். புதிய தொழில் முயற்சி கைகொடுக்கும். கணவன் - மனைவிக்குள் அனுசரணை தேவை. உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். கொடுக்கல்/வாங்கலில் எச்சரிக்கையாக இருக்கவும். ராகு/கேது/குரு வழிபாடு செய்து வந்தால், நற்பலன் கிட்டும்.

**மிதுனம்** : மனக்கஷ்டம், பணக்கஷ்டம் விலகும் வாரம். உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். குடும்ப வாழ்வு நிம்மதியாக இருக்கும். திருமணக் காரியம் கைகூடும். செலவுகள் சுமாராக இருக்கும். நண்பர்/உறவினர்களால் ஆதாயம் கிட்டும். தைரியம், தன்னம்பிக்கை ஏற்படும். குழந்தைப் பேறு உண்டாகும். உடன்பிறந்தவர் வழியில் சகாயம் ஏற்படும். உத்தியோகத்தில் வேலைப்பளு இருந்தாலும், நற்பெயரைப் பெறுவீர்கள். கொடுக்கல், வாங்கல் நன்றாக இருக்கும். தொழில்துறையில் மேம்பாடு ஏற்படும். ராகு/கேது வழிபாடு செய்துவர, நற்பலன் பெருகும்.

**கடகம்** : வேலையில் இடமாற்றம் ஏற்படும். தெய்வபலம் கிடைக்கும். புண்ணிய ஸ்தலம் செல்லும் வாய்ப்பு கிட்டும். திருமணத் தடை விலகி, திருமணம் கைகூடும். நாணயத்தை காப்பாற்றுவீர்கள். கொடுக்கல்/வாங்கலில் நற்பலன் கிட்டும். சிலருக்கு வீடு மாற்றம் ஏற்படும். மகான் சந்திப்பு ஏற்படும். வியாபாரத்தில் சற்று மந்த நிலை ஏற்பட்டு, பிறகு உயரும். கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும். கடன் தொல்லை விலகும். வெளிநாடு செல்லும் வாய்ப்பு வரும். குரு/சனி வழிபட, நற்பலன் கிட்டும்.

**சிம்மம்** : மனத்தில் தைரியமும் தன்னம்பிக்கையும் கூடும். பணக்கஷ்டம் விலகும். கொடுக்கல்/வாங்கலில் சற்று எச்சரிக்கையாக இருத்தல் நலம். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. உணவுக் கட்டுப்பாடு அவசியம். சுபச் செலவு ஏற்படும். தடை விலகி, திருமணம் கைகூடும். வீண் வாதத்தைத் தவிர்க்கவும். கணவன் - மனைவி விட்டுக் கொடுத்து நடந்துகொள்வது நல்லது. நீண்ட கால ஆசைகள் நிறைவேறும். உத்தியோகத்தில் வேலைப்பளு ஏற்படும். வீட்டைக் கவனிக்க நேரம் இருக்காது. ராகு/கேது/குரு/சனி வழிபாடு செய்துவர, நற்பலன் கிடைக்கும்.

**கன்னி** : செலவு அதிகமாகும் வாரம். வீடு/மனை, வாகனம் வாங்கலாம். கணவன், மனைவிக்குள் அனுசரணை தேவை. கொடுக்கல்/வாங்கலில் கவனம் தேவை. உடல்நிலை சுமாராக இருக்கும். வேலைப்பளு அதிகரிக்கும். வெளிநாட்டுப் பணி கிடைக்கும். திருமணம் கைகூடும். பணக்கஷ்டம் வராது. புதிய தொழில் ஆரம்பிக்க நல்ல தருணம். வழக்கு வெற்றி பெறும். மன

## தஞ்சை பரத்வாஜ்

# நடக்கும்

## 20.8.2006 முதல் 26.8.2006 வரை

கன்னி ராசிக்கு ஃபாரின் வேலை கிடைக்குமாமே... அமெரிக்காவா... ஆஸ்திரேலியாவா சார்?



இறுக்கம் விலகும். நீண்ட காலமாகத் தீராமல் இருந்த பிரச்னைகள் எளிதில் தீர்ந்து விடும். நாணயம் காப்பாற்றப் படும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். ராகு/கேது வழிபாடு செய்துவர, நற்பலன் கிட்டும்.

**துலாம் :** எதிரிகளை வெல்லும் வாரம். உடல்நிலை நன்றாக இருக்கும். திருமணக் காரியம் கைகூடும். உத்தியோகத்தில் வேலை மாற்றம் ஏற்படும். கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும். நீண்டநாள் கனவு நிறைவேறும். வெளியூர்ப் பிரயாண வாய்ப்பு வந்து சேரும். கொடுக்கல்/வாங்கல் சிக்கல் தீரும். வியாபாரத்தில் நல்ல விறுவிறுப்பு இருக்கும். பணக்கஷ்டம் வராது. சத்ரு தொல்லை விலகும். மனக்கிலேசம் விலகும். புதிய தொழில் முயற்சி கைகொடுக்கும். வீடு மாற்றம் ஏற்படும். குரு/சனி வழிபாடு செய்து வருதல் நற்பலனைத் தரும்.

**விருச்சிகம் :** வேலையில் ஊதிய உயர்வு, இடமாற்றம் ஏற்படும். புதிய வேலை வாய்ப்பு வரும். பணக்கஷ்டம் விலகும். வீடு/வாகனம் வாங்க நல்ல தருணம். பூர்வீகச் சொத்து பாகப்பிரிவினை ஆகும். அயல்நாட்டுப் பிரயாண வாய்ப்பு வந்து சேரும். சுபச் செலவுகள் ஏற்படும். திருமணக் காரியம் கைகூடும். எதிர்ப்பு/தொல்லை விலகும். உடல்நிலை நன்றாக இருக்கும். வியாபாரத்தில் நல்ல



# பதில்கள்

**என் மகனுக்கு எப்போது திருமணம் ஆகும்? நல்ல வரனாக அமையுமா?**

**- டி. சேதுராமன், சென்னை**

உங்கள் பையனுக்கு சனிதிசை நடை பெற்று வருகிறது. 20.09.2006-க்குப் பிறகு திருமணம் கைகூடும். பிறந்த ஊருக்குத் தென் திசையில் உடன் பிறப்பு ஒருவருடன் பிறந்த, படித்த, பண்புள்ள வரன் அமையும். 25 வயதில் திருமணம் நடக்கும். சர்ப்ப தோஷம் உள்ள வரனைப் பார்க்கவும்.

**எனக்கு அரசு வேலை கிடைக்குமா?**

**- ரவிசங்கர், சென்னை**

உங்களுக்கு அரசு வேலை கிடைக்காது. தனியார் வேலை கிடைக்கும். 26 வயதில் நிரந்தர வேலை அமையும்.

**என் மகளுக்கு எப்போது திருமணம் நடக்கும்? வரன் சொந்தத்தில் அமையுமா?**

**- எம்.ஜி. வெங்கடேசன், சென்னை - 4**

தங்கள் மகளுக்கு 10.10.2006-க்குப் பிறகு திருமணம் கைகூடும். பிறந்த ஊருக்கு அருகில், உடன்பிறப்பு இருவருடன் பிறந்த, தனியார் துறையில் வேலை செய்யும், படித்த, பண்புள்ள பையன் வரனாக அமைவான். உறவில் அமையாது. தோஷம் எதுவும் இல்லை. 30 வயதில் திருமணம் கைகூடும்.

முன்னேற்றம் ஏற்படும். உத்தியோகத்தில் நல்ல பெயர் எடுப்பீர்கள். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். ராகு/கேது வழிபாடு நற்பலனைத் தரும்.

**தனுசு :** உல்லாசப் பிரயாண வாய்ப்பு வந்து சேரும். சுபச்செலவு ஆகும். உடல் நிலை நன்றாக இருக்கும். வாக்கு, தனம், கல்வி மேலோங்கும். பணக்கஷ்டம் விலகும். எதிர்ப்பு/தொல்லை விலகும். திருமணத் தடை விலகும். நண்பர்/உறவினர்களால் ஆதாயம் கிட்டும். வீடு/வாகனம் வாங்க நல்ல தருணம். வேலையில் ஊதிய உயர்வு கிட்டும். வீடு மாற்றம் ஏற்படும். தனவிருத்தி ஏற்படும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். ராகு/கேது/சனி வழிபாடு நற்பலனைத் தரும்.

**மகரம் :** உடல் நிலையில் கவனம் தேவை. குடும்ப வாழ்க்கையில் அனுசரணை தேவை. தெய்வ தரிசனம் கிட்டும். வேலைப்பளு அதிகரிக்கும். உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். கொடுக்கல்/வாங்கலில் எச்சரிக்கையாக இருக்கவும். நண்பர்/உறவினர்களால் செலவு ஏற்படும். கல்வியில் கவனம் செலுத்துங்கள். குரு/சனி வழிபாடு நற்பலனைத் தரும்.

**கும்பம் :** உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்படும். இருப்பினும், சின்னச் சின்ன மருத்துவச் செலவுகள் இருக்கும். சுபகாரியம் நடைபெறும். குடும்ப வாழ்வில் அனுசரணை தேவை. வாகனத்தில் செல்லும்போது எச்சரிக்கை தேவை. மறைமுக எதிர்ப்பு/தொல்லை ஏற்படலாம். வழக்கு வியாஜ்யம் சற்றுத் தள்ளிப் போகும். நண்பர்/உறவினர்களால் நல்ல தகவல் வந்து சேரும். அயல்நாட்டுப் பிரயாண வாய்ப்பு வந்துசேரும். உத்தியோகத்தில் வேலை மாற்றம் ஏற்படும். வீடு/வாகனம் வாங்க நல்ல தருணம். ராகு/கேது வழிபாடு நற்பலனைத் தரும்.

**மீனம் :** மறைமுக எதிர்ப்புகளைச் சமாளித்து, பெரும் வெற்றியை அடைவீர்கள். மனக்குழப்பம் தீரும். கணவன் - மனைவிக்குள் அனுசரணை தேவை. உடல்நிலையில் கவனமாக இருக்கவும். நண்பர்/உறவினர்களால் ஆதாயம் கிட்டும். வேலை மாற்றம் ஏற்படலாம். செலவுகள் சுபமானதாக இருக்கும். வியாபாரம் வெற்றி காணும். குழந்தைகள் வழியில் சுபகாரியம் கைகூடும். வேலைப்பளு அதிகரிக்கும். சிலருக்கு வீடு மாற்றம் ஏற்படும். தொலைதூரப் பிரயாண வாய்ப்பு வந்து சேரும். கொடுக்கல்/வாங்கல் நற்பலனை அளிக்கும். நண்பர்/உறவினர்களிடமிருந்து உதவி கிடைக்கும். புதிய முயற்சி அனுகூலம் ஆகும். ராகு/கேது/குரு வழிபாடு நற்பலனைத் தரும்.

# கொஞ்சம் கொஞ்சமாய்...

நான் சுதேசிக்கு மாறிட்டேன். நீங்க?

பெப்சி, கோக் போன்ற குளிர்பானங்களில் அங்கீகரிக்கப்பட்ட அளவுக்கும் அபரிமிதமாக உடலுக்குக் கேடு விளைவிக்கும் அபாயமான இரசாயனப் பொருட்கள் கலந்திருப்பது மீண்டும் நிரூபணமாகி, பரபரப்பு ஏற்பட்டு, பல மாநிலங்கள் இந்தக் குளிர்பானங்களுக்குத் தடைவிதித்துள்ளன. இந்த விவகாரம் குறித்து சென்னையில் உள்ள டாக்சிக் லிங்க் என்னும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு அமைப்பைச் சேர்ந்த ராஜேஷ் ரங்கராஜனிடம் பேசினோம்.

''பன்னாட்டுக் குளிர்பான தயாரிப்பு நிறுவனங்கள், இந்தியாவில் நடந்து கொள்ளும் முறை கடுமையான கண்டனத்துக்கு உரியது. அமெரிக்காவிலும் மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் குளிர்பானங்களில் இரசாயனப் பொருட்கள் இந்த அளவுக்கு மேல் இருக்கக்கூடாது என்று கடுமையான விதிமுறைகள் இருக்கின்றன. இந்த நிறுவனங்கள் அந்த நாடுகளில் எல்லாம் விதிமுறைகளைக் கடைப்பிடிக்கின்றன. ஆனால், இந்தியாவில் மட்டும் ஏனோ காற்றில் விட்டுவிடுகின்றன.

ஆனால், அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் இந்த விஷ(ய)த்தை அப்படியே விட்டுவிடத் தயாராக இல்லை. பன்னிரண்டு மாநிலங்களில் அமைந்துள்ள 25 குளிர்பானத் தொழிற்சாலைகளிலிருந்து, பதினொரு வகை குளிர்பானங்களின் ஐம்பத்தேழு சாம்பிள்கள் சேகரிப்பட்டு, பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன. ஒவ்வொரு சாம்பிளிலும் சராசரியாக உடல்நலத்துக்கு ஊறு விளைவிக்கக்கூடிய மூன்று முதல் ஐந்து இரசாயனப் பொருட்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இது இந்திய தரநிர்ணய அமைப்பு நிர்ணயித்துள்ள அளவைவிட இருபத்து நான்கு மடங்கு அதிகம் என்பது அதிர்ச்சியளிக்கும் உண்மை. அதிலும் கொல்கத்தாவில் சேகரித்த



கோக்கோ கோலா சாம்பிளில், அனுமதிக்கப்பட்ட அளவைப்போல நூற்று நாற்பதுமடங்கு இரசாயனப் பொருட்கள் இருந்தது நாடெங்கும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது.



• ரங்கராஜன்

இத்தகைய இரசாயனப் பொருட்களை மிகக் குறைந்த அளவில் தொடர்ந்து உட்கொண்டால், நாளடைவில் மூளை, நரம்பு மண்டலம், கல்லீரல், சிறுநீரகம் என்று எது வேண்டுமானாலும் பாதிக்கப்படலாம். இதுபோன்ற அத்துமீறல்களை அமெரிக்காவிலோ, ஐரோப்பிய நாடுகளிலோ செய்தால் உடனடியாக தொழிற்சாலைக்கு சீல் வைத்து விடுவார்கள். கடுமையான விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும். ஆனால் இந்தியாவில் எந்தவிதமான கட்டுப்பாடுகளுக்கும் உட்படாமல், இலட்சக்கணக்கானவர்களின் உடல் நலத்துக்குக் கேடு விளைவிக்கும் செயலைச் செய்கின்றன இந்தப் பன்னாட்டுக் குளிர்பான நிறுவனங்கள். இது குறித்து அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியது உடனடி தேவை. ஆனால், அரசு அவ்வளவு சீக்கிரத்தில் செயலில் இறங்கிவிடாது. மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சி ஏற்பட்டால்தான் கோர்ட் மூலமாக அரசாங்கத்தை நடவடிக்கை எடுக்க வைக்க முடியும்" என்கிறார் ராஜேஷ் ரங்கராஜன்.

- எஸ்.சந்திரமௌலி



# நெல்லை ஏக்கம்!

**வ**ழக்கறிஞர் கே.எஸ்.ராதாகிருஷ்ணன் எழுதிய 'நிமிர வைக்கும் நெல்லை' புத்தகத்தின் விரிவுபடுத்தப்பட்ட வடிவம் அண்மையில் வைகோவால் வெளியிடப்பட்டது. அரசியல் கலப்பின்றி நல்லதோர் இலக்கிய விழாவாக நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பாலபிரஜாபதி அடிகளார், கி.ராஜநாராயணன், ஆண்டாள் பிரியதர்ஷினி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முன்னிலை வகிக்க வேண்டிய எஸ்.தாணு விழாவுக்கு வரவே இல்லை. சிறப்புரையாற்ற வருவதாயிருந்த மேலாண்மை பொன்னுச்சாமியும் வரவில்லை. 'நல்ல இதயங்கள் இந்த விழாவுக்கு என்னைச் செல்ல வேண்டாம் என்று அன்போடு கேட்டாலும், இராதாகிருஷ்ணனுக்காக நான் வந்தே விட்டேன்" என்றார் ஆண்டாள் பிரியதர்ஷினி. 'கலை, கலாசாரம், சரித்திரத்தில் முத்திரை பதித்துள்ள நெல்லையிலிருந்து தமிழகத்துக்கு ஒரு முதல்வர் வரவில்லையே' என்கிற ஏக்கத்தை மேடையில் பேசிய அனைவருமே வெளியிட்டார்கள்.

- ஸ்ரீநி



# விரல்கள் பத்தும் சொத்து!

ஒரு மனிதனின் உடலில் எத்தனையோ அவயவங்கள் இருந்தாலும் அவன் அதிகம் பயன்படுத்துவது கைவிரல்களைத்தான். எழுத்தாளன் முதற்கொண்டு ஏர்பிடிப்பவன் வரை ஒவ்வொருவருக்கும் அதுதானே மூலதனம். இது பற்றிப் பிரபல வீணை வித்தகி கலைமாமணி ரேவதி கிருஷ்ணன் என்ன கூறுகிறார்? "என்னுடைய பலமாகக் கருதுவது பத்து விரல்களைத்தான். நான்



• மணிகண்டன்

பதினொன்றாவது வயதிலிருந்தே வீணை வாசித்து வருகிறேன். அன்று முதல் இன்றுவரை விரல்களுக்கு அதிகம் வேலை கொடுப்பேன். ஒரு பொருளை உபயோகிக்காமல் இருப்பதுதான், அதன் அழிவுக்கு முதல் காரணமாக அமைகிறது. சில சமயங்களில் வீணை மீட்டி, மீட்டி என் விரல்கள் தேய்ந்து இரத்தம் வரும். இருப்பினும் அதை பொருட்படுத்துவதேயில்லை. நாளடைவில் அதுவே எனக்குப் பழகிவிட்டது. சில நபர்களைச் சந்திக்கும்போது அவர்கள் கைகொடுத்து என்னை வாழ்த்துவர்கள். அப்போது அவர்களில் யாருக்கேனும் மிருதுவான விரல்கள் இருக்கும். அப்போது நான் அவர்களிடம், 'உங்கள் விரல்கள் எப்படி இவ்வளவு மிருதுவாக இருக்கின்றன?' என்று கேட்பேன். உடனே அவர்கள் 'நான் அதிகமாக வேலை செய்வதில்லை' என்பார்கள். நம் விரல்களை உபயோகித்ததால்தான் இன்று உயர்ந்த நிலையை அடைந்தோம் என்பதை அப்போது நான் உணர்வேன்" என்கிறார் ரேவதி கிருஷ்ணன்.



• அறிவுச்சுடர்

"விரல்கள் இல்லையென்றால் எங்களுக்கு சாப்பாடே கிடையாது" என்கிறார் டி.டி.பி. ஆபரேட்டர் அறிவுச்சுடர். "உலகின்

முக்கிய அம்சமாக மாறிவரும் கணினி முன்னால் காலை பத்து மணியளவில் உட்கார்ந்தால், மீண்டும் அங்கிருந்து நகர மாலை ஆறு மணியாகிவிடும். அதுவரை எனது விரல்கள் கணினியின் கீபோர்டுகளையே தழுவிக் கொண்டிருக்கும். இன்னும் சொல்லப் போனால், மனிதனையும் மிருகத்தையும் வித்தியாசப்படுத்திக் காட்டுவது விரல்கள்தானே. இரைகளை அடித்துத் தின்ன மட்டுமே மிருக விரல் பயன்படுகிறது. அதாவது ஒன்றை அழிப்பதற்காக. ஆனால் நாமோ ஆக்குவதற்குப் பயன்படுத்துகிறோம்" என்கிறார்.

பெரியவர்களை விடுங்கள்; பிஞ்சு விரல்களைக் கொண்டு நூலை ஊசியில் கோத்துச் சட்டைக்குப் பொத்தான் வைக்கும் மணிகண்டன் என்ன சொல்கிறான்? "வறுமை காரணமாத்தான் நான் இந்தத் தொழிலுக்கு வந்தேன். அந்த நேரத்துல எனக்கு உதவ யாருமே இல்ல. அப்பத்தான் என் முதலாளி 'டேய் கடவுள் மனுஷனுக்கு கொடுத்த பெரிய முதலீடு அவனோட விரல்கள்தான். அதப் பயன்படுத்து; அப்பத்தான் நீ வாழ்க்கைல முன்னேறுவே'ன்னு சொன்னாரு. நிறைய தடவ ஊசி கைல குத்தும். ஆனா நான் அதப் பத்திக் கவலைப்படறதில்ல. ஏன்னா எப்படியும் ஒருநாள் நான் பெரியாளா ஆயிடுவேன்னு எனக்கு நம்பிக்கை இருக்கு."

- விமலன்



• ரேவதி கிருஷ்ணன்



# சூப்பர் ஸ்டாரின் சந்நியாசம்!

நாடகாசிரியர் - இயக்குனர் விவேக் சங்கருக்குத் துணிச்சல் இருக்கிறது என்பதை முதலில் ஒப்புக்கொள்ள வேண்டும்.

நாடகச் சுருக்கம் இதுதான்: சூப்பர் ஸ்டாராக இருக்கும் திரைப்பட நடிகர் நரேந்திராவை விவேகானந்தராக நடிக்க வைக்க, தந்திரமாக ஒப்பந்தத்தில் கையெழுத்து வாங்கிவிடுகிறார் தயாரிப்பாளர். பேராசிரியர் ஒருவர் வந்து விவேகானந்தரின் வாழ்க்கையை நரேந்திராவிடம் பகுதி பகுதியாகச் சொல்கிறார். அந்தப் புரட்சி துறவியின் பேச்சும் கருத்தும் நரேந்திரா மனத்தைக் கவர, முழுதுமாக மாறிப் போய்விடுகிறார்.

ஆனால் கடைசியில் தன் நடிப்புத் தொழிலையே விட்டுவிட்டு, அனாதை ஆசிரமத்தில் தொண்டு செய்ய நரேந்திரா போய்விடுவது டூமச்.

விவேகானந்தராக டீ.வி. நடிகர் அப்சர், ராமகிருஷ்ண பரமஹம்சராக எம்.பி. மூர்த்தி கனகச்சிதம். தாடியும் நடிப்பும் இயற்கை. சிஸ்டர் நிவேதிதாவாக பிரேமா சதாசிவம், பேராசிரியராக சுந்தரராஜன் - மிகையில்லாத நடிப்பு. 'ரங் தே பஸந்தி' படத்தின் உத்தியைத்தான் விவேக் சங்கர் கையாண்டிருக்கிறார். கோடை நாடக விழாவில் பல விருதுகள் பெற்ற 'நரேந்திரா', இப்போது சபா நாடக மேடைகளில் ஒரு வெற்றிகரமான ரவுண்டு வரத் தொடங்கியிருக்கிறது.

- சாருகேசி

# நெருக்கம்

"அந்த பூஜாவைத்தானே நீங்க கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க குமரன்?" –சற்றுமுன் பத்ரி யதார்த்தமாகக் கேட்ட கேள்வியின் ஒவ்வோர் எழுத்துகளும் ஒரு தோட்டாவாகக் குமரனைத் துளைத்துக் கொண்டிருந்தன.

"பூஜா!"

"ம்?"

"நேத்து ஒரு கனவு!"

"நீ ஒண்ணும் அதைச் சொல்லத் தேவையில்லை."

"ஏன்?"

"உன்னோட எல்லா கனவுமே முத்தத்துலதான் முடியுது. அப்புறம் உன் கனவை நனவாக்கணும்னு கெஞ்சுவே."

## 4ம்!

பட்டுக்கோட்டை பிரபாகர்

"என்னமோ நான் ஒருத்தன் மட்டும்தான் விசித்திரமா நடந்துக்கற மாதிரி பேசாதே. அநியாயத்துக்கு ஏங்கற மாதிரி கெஞ்சறதுதான் உலகக் காதலர்கள் அத்தனைப் பேரோட அடையாளமும். அதே மாதிரி உலகக் காதலிகள் அத்தனை பெருக்கும் ஓர் அடையாளம் இருக்கு."

"என்னவாம் அது?"

"அவங்களுக்கு ரொம்பப் பிடிச்ச ஒரு விஷயத்தை பிடிக்கவே பிடிக்காத விஷயம் மாதிரி நாடகமாடறது! ரசிக்கிற ஒரு விஷயத்தை, போனாப் போகுதுன்னு அனுமதிக்கிற மாதிரி காட்டிக்கிறது!"

"போதும். உன் ஆராய்ச்சிக் கட்டுரையை நிறுத்திட்டு, அந்தக் கனவென்னன்னு சொல்லித் தொலைப்பா."

"நிஜமா நேத்து வந்த கனவு ரொமான்ட்டிக்கான கனவில்லை பூஜா. என்னைத் தூக்கத்திலேர்ந்து எழுப்பிவிட்ட கனவு. மனசைக் கலங்கடிச்ச கனவு."

"வீடு போதும் கண்ணா, சீக்கிரம் சொல்லு."

"நம்ம கல்யாண நாள் பூஜா. மணவறையில நான். இன்னும் நீ வந்து பக்கத்துல உக்காரல. முகூர்த்தப் பட்டுப் புடைவைல பிரமாதமான ப்ரைடல் மேக்கப்புல உன்னை எதிர்பார்த்து, மந்திரம் சொல்ற அய்யரை எரிச்சலாப் பார்த்துக்கிட்டு உக்காந்திருக்கேன். பொண்ணைக் கூட்டிட்டு வாங்கோன்னு அய்யர் சொல்றார். நானே கூட்டிட்டு வந்துடறேன்னு எழுந்து உன் ரூமுக்கு வந்து பார்த்தா, உன்னைக் காணோம். பூஜா, பூஜான்னு கத்தறேன். பதில் இல்லை. ஜன்னல் திறந்திருக்கு. கிட்ட வந்து வெளில பார்த்தா கொஞ்ச தூரத்தில ஒரு குதிரைல நீ போய்க்கிட்டிருக்கே."



"அப்புறம்? நீ இன்னொரு குதிரைல எங்கிட்ட வந்து முகூர்த்த நேரத்துல என்ன ஹார்ஸ் ரைடிங் வேண்டிருக்குன்னு என் காதைத் திருகிக் கூட்டிட்டு வந்து தாலி கட்டினியாக்கும்?"

"அப்படித்தான் செஞ்சிருப்பேன், அந்தக் குதிரையில் நீ மட்டும் இருந்திருந்தா."

"என்ன சொல்றே?"

"அந்தக் குதிரையை ஓட்டிட்டிருந்தது வேற யாரோ ஒருத்தன். அவன் பின்னால நீ!"

"நல்ல வேளை, கடைசி நிமிஷத்திலயாவது உன்னைக் கட்டிக்கிறது வேஸ்ட்டுன்னு எனக்குப் புத்தி வந்திருக்குதே... ஏய்! குமரா, என்ன இது, எதுக்குக் கலங்குறே?"



'பூஜா, அடிக்கடி நம்ம கல்யாணம் நடக்குமான்னு பயத்தோட நீதான் கேள்வி கேட்பே. இப்ப அந்தப் பயம் எனக்கு வந்துடுச்சி."

"அய்யோ என் அசட்டுக் காதலா, ஜஸ்ட் ஒரு கனவு. அதைப் போய் ஏன் இவ்வளவு சீரியஸா எடுத்துக்கறே?"

"கனவுதான்னாலும், ஏன் இப்படி நெகட்டிவா வரணும்? ஹனிமூன் போற மாதிரி, நமக்குக் குழந்தை பொறக்கற மாதிரி நல்ல கனவா வரக்கூடாதா?"

"அபத்தமா ஒரு கனவு கண்டுட்டு இப்படி அர்த்தமில்லாம கவலைப்பட்டா எப்படிப்பா? நியாயமாப் பார்த்தா இப்ப நான்தான் உன்னைக் கோவிச்சிக்கணும்."

"எதுக்கு?"

"கனவுங்கறது நம்ம அடி மனசுல பதுங்கியிருக்கற நிறைவேறாத ஆசைகள்னு ஒரு தியரி இருக்கில்ல... அப்படிப் பார்த்தா, நம்ம கல்யாணம் எப்படியாவது தடைபட்டா தேவலைன்னு உன் உள் மனசு விரும்புதா, என்ன?"

"பைத்தியம் மாதிரி பேசாதே பூஜா. அப்படிப் பார்த்தா, எனக்கு இப்படி ஒரு கனவு வந்ததுக்கே நீதான் காரணம்."

"நானா, எப்படி?"

"நீதானே அடிக்கடி எனக்குப் பயமா இருக்குன்னு உளறிட்டிருப்பே? அப்பல்லாம் உனக்குச் சமாதானம் சொன்னாலும் இவளுக்கு ஏன் அப்படித் தோணுதுன்னு வலியோட நான் யோசிச்சிருக்கேன். அத



னாலதான் அப்படி ஒரு கனவு வந்திருக்கணும்."

"சரி குமரா, என் பயம், உன் கனவு ரெண்டையும் இப்பவே அவமானப்படுத்திடலாமா? ரொம்ப சிம்பிள். பக்கத்தில் கோயில் இருக்கான்னு விசாரி. கடைக்குப் போய் மஞ்சள் கயிறு வாங்கு. கட்டிக்கிறதுக்கு என் கழுத்து தயாரா இருக்கு. கட்றதுக்கு உன் கை தயாரா இருக்கா?"

"கட்டியிருக்கணும். அந்த நிமிஷமே அவ சொன்ன மாதிரி எங்க கல்யாணத்தை நடத்தியிருக்கணும். நான் ஒரு முட்டாள். சரியான சந்தர்ப்பத்தைக் கோட்டை விட்டுட்டேன்" என்று மனதுக்குள் சொல்லிக்கொண்ட குமரன் நிமிர்ந்தான்.

பத்ரி தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்து, "ஸாரி, நான் ஏதோ நினைவுகள்ல ஆழ்ந்துட்டேன். பத்ரி, காலேஜ் நாட்கள்ல நான் பூஜாவை நேசிச்சது உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"என்ன குமரன், எல்லாத்தையும் மறந்துட்டீங்களா? பூஜாவோட சகஜமா பைக்ல சுத்திக்கிட்டிருந்தீங்களே... உங்க காதல் செய்தி காலேஜ் நோட்டீஸ் போர்டுல போடாததுதான் பாக்கி. எல்லாருக்கும் தெரியும். என் கேள்வி உங்களைச் சங்கடப்படுத்தியிருந்தா ஸாரி."

"சேச்சே... நீங்க ஒரு ஆர்வத்துல கேக்கறீங்க. அதுல என்ன தப்பு? ஆனா சந்தோஷமான பதில் சொல்ல முடியாத நிலைமையில் நான் இருக்கேன், பத்ரி."

"அப்ப நான் மன்னிப்பு கேட்டதில் தப்பே இல்லை. நீங்க ரெண்டு பேரும் பொருத்தமான ஜோடின்னு நினைச்ச பல பேர்ல நானும் ஒருத்தன். நாம ஆசைப்படற மாதிரி அப்படியே எல்லாம் நடந்துட்டா கடவுள்னு ஒருத்தனை மறந்துடுவமே. சரி, விடுங்க. என்னமோ தப்பா நடந்துருக்குன்னு புரிஞ்சிக்க முடியுது. அது என்னன்னு தயவுசெஞ்சி சொல்லாதீங்க குமரன். காதல் முறிவு பத்திப் பேசறது அதைவிட பெரிய சோகம்!"

"உண்மைதான். அது ஒண்ணும் ரகசியம் இல்லை. சில பேர்கிட்ட சொன்னா அது வெறும் தகவலா இருக்கும். சிலபேர்கிட்ட சொல்றது ஆறுதலா இருக்கும். உங்ககிட்ட இன்னொரு நாள் கண்டிப்பாச் சொல்றேன்" என்ற குமரன் எழ, பத்ரியும் நாற்காலியை ஓசை வராமல் நகர்த்தி எழுந்தான்.

வெளியே வந்து பரஸ்பரம் விலாசங்களையும், தொலைபேசி எண்களையும் பரிமாறிக் கொண்டதும், "பத்ரி, ஸண்டே லஞ்ச் என்னோட! மறந்துடாதீங்க" என்று கையசைத்துவிட்டு குமரன் தன் காரை நோக்கி நடந்தான்.

கூடத்தில் ஜமுக்காளம் விரித்து அதன்மேல் நகைப் பெட்டிகள் திறந்து வைக்கப்பட்டிருக்க, சுற்றிலும் பெண்கள் சிமெண்ட் தரையில் அமர்ந்து பிரமிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மஞ்சரி சமையல்கட்டில் அவர்களுக்கு காபி போட்டுக் கொண்டிருக்க, அம்சா அவர்களுக்கு ஒவ்வொரு நகையையும் எடுத்துக் காட்டி விவரித்துக் கொண்டிருந்தாள்.

> **"அரசே! நமது மகாராணியையே இவன் எதிர்த்துப் பேசிவிட்டான்!"**
> **"சபாஷ்! இவனுக்கு ஆயிரம் பொற்காசுகளைக் கொடுங்கள்!"**
> **- யுவராஜ்**

"ஏங்கா, பத்துக் கல்யாணத்துக்குச் செய்ற நகையில்ல அவங்க செஞ்சிருக்காங்க?"

"இதெல்லாம் நிச்சயத்துக்கு மட்டும் போட்டது. கல்யாணத்துக்குத் தனியா எங்களையே அவங்க கடைக்கு வந்து வேண்டியதை எடுத்துக்கச் சொல்லிருக்காங்க."

"அடேங்கப்பா! ஒரு வாட்டி போட்டதை இன்னொரு வாட்டி போடறதுக்கே ஒரு வருஷம் ஆவும் போலிருக்கே!"

"பின்னே? நகைக் கடைக்காரங்க அவங்க அந்தஸ்தை வேற எப்படிக் காட்டுவாங்க?"

"ஏண்டி அம்சா, உனக்கும் உன் புருஷனுக்கும்கூட ஏதோ வரிசை செஞ்சாங்கன்னு தாயம்மா சொன்னாளே, நிசமாவா?"

"ஆமாம் பெரியம்மா. அந்த வைரத்

தோடு இருக்கு பாருங்க. அதுதான் எனக்குக் குடுத்தாங்க. அவருக்கு வைரக் கல்லு வச்ச ப்ரேஸ்லெட் குடுத்தாங்க. அது பீரோல இருக்கு. அப்புறம் எனக்கு மூணு பட்டுப் பொடவையும் மஞ்சரிக்கு ஆறு பட்டுப் பொடவையும் குடுத்தாங்க."

''ஏண்டிம்மா, அந்தப் பொடவைங்களையும் எடுத்துக் காட்டேன். கட்டிப் பாக்கற பாக்கியம்தான் இல்லைன்னாலும், கண்ணாலயாவது பார்த்து சந்தோஷப்பட்டுக்குவோமில்ல?''

அம்சா பீரோவைத் திறந்து எடுத்துக் காட்டினாள். அவர்கள் ஒவ்வொரு புடைவையையும் தொட்டுப் பார்த்து விழிகளை விரித்துக் கொண்டிருக்க, மஞ்சரி பெரிய தட்டில் டம்ளர்களை வைத்து எடுத்து வந்து எல்லோரிடமும் நீட்டினாள்.



''அதிர்ஷ்டக்காரிடி நீ! யாருக்கு அமையும் இப்படி ஒரு வாழ்க்கை? கல்யாணம் பண்ணிப் போனதும் எங்களையெல்லாம் மறந்துடாதேம்மா.''

''அதெப்படிக்கா மறக்க முடியும்?'' என்ற மஞ்சரி, வீட்டு வாசலில் வந்து நின்ற சிவா கைகாட்டி அழைக்க, அவனை நோக்கிச் சென்றாள்.

''என்னண்ணா?''

''என்ன உள்ளே ஒரே கூட்டம்?'' என்றான் சைக்கிளைப் பூட்டியபடி.

''நம்ம தெருவுல உள்ளவங்க வந்திருக்காங்க.''

''உங்கண்ணி கொலு வைக்கிற மாதிரி எல்லா நகை, பொடவையும் எடுத்துக் காட்டி ஜம்பம் அடிச்சிட்டிருக்காளா? கண்ணு படும் மஞ்சரி. உங்கண்ணிக்குப் புரியறதில்ல. சரி, அதைவிடு. மாப்பிள்ளை பத்தி சொன்னப்போ மெட்ராஸ்ல காலேஜ்ல படிச்சதாத்தானே சொன்னாங்க?''

''ஆமாம். அதுக்கென்ன?''

''மெட்ராஸ்ல எந்த காலேஜ்ல படிச்சதா சொன்னாங்க?''

''அது தெரியலையேண்ணா. என்ன விஷயம்?''

''ஒண்ணுமில்லைம்மா. மெட்ராஸ்ல படிச்ச ஒரு பையன்கிட்ட கடையில பேசிட்டிருந்தப்போ, என் தங்கச்சியைக் கட்டிக்கப்போற மாப்பிள்ளைகூட அங்க தான் படிச்சவருன்னு சொன்னேன். எந்த காலேஜ்னு கேட்டாரு. முழிச்சேன். அதான் கேட்டேன். சரி, நீ போ. நான் உரக்கடை வரைக்கும் போய்ட்டு வந்துடறேன்.''

மீண்டும் பூட்டைத் திறந்து, சைக்கிளை மிதித்து தெரு முனை டீக்கடைக்கு வந்து இறங்கிய சிவா, அங்கே சிகரெட் பிடித்தபடி நின்றிருந்த நண்பன் சிங்கமுத்துவிடம் வந்தான்.

''என்ன சிவா, எந்த காலேஜாம்?''

''அவளுக்கும் தெரியலை. சிங்கா, மெட்ராஸுக்குப் போயி மாப்பிள்ளை பத்தி விசாரிக்கிறதைவிட, இப்படி செஞ்சா என்ன?''

''எப்படி?''

''பாண்டிச்சேரிக்கே போறது. பஸ் ஸ்டாண்டுல, அங்க இங்க அவரைப் பத்தி விசாரிக்கறது. நம்மை அங்க யாருக்குத் தெரியும்? நாளைக்கே போலாம். நீயும் வா. நீ சொன்னதுலேர்ந்து மனசு பக்பக்னு அடிச்சிக்குது. மாப்பிள்ளை பத்தி நாலு பேரு நல்லவிதமாச் சொன்னாத்தான் எனக்குத் திருப்தி வரும்'' என்ற சிவா, சிங்கமுத்துடன் மறுநாள் புறப்பட்டு பாண்டிச்சேரி வந்து பேருந்து நிலையத்தில் இறங்கியதும் முதலில் யாரை விசாரிக்கலாம் என்று யோசனையாகப் பார்வையைச் சுழற்ற... அவன் பார்வையில் விழுந்தான் ஒரு கடையில் பத்திரிகை வாங்கிக் கொண்டிருந்த பத்ரி.

(தொடரும்)

# "ஜி... தில்லாலங்கடி...

இரண்டு 'மென்'பான கம்பெனிக்காரர்களுக்கும் பூச்சி மருந்து விவகாரத்தால் கண்களில் பூச்சி பறக்கிறது. எலியும் பூனையுமாக இருந்த இரண்டு கம்பெனிகளின் மார்க்கெட்டிங் உயரதிகாரிகள் ஹோட்டல் ஒன்றில் சந்தித்துப் பேசுகின்றனர்.

"என்னஜி இப்படி ஆயிருச்சு?"

"ஆமாஜி. போன தடவை விவகாரம் பூரி மாதிரி உப்பிட்டு வர்றப்ப எப்படியோ அதை அமுக்கிட்டோம். ஆனா இப்ப முடியாது போலிருக்கே?

"நம்மளோட விளம்பரங்களால செமையா துட்டு பார்த்த மீடியாவே இப்ப எவ்வளவு முடியுமோ அவ்வளவு வாரி விடுறாங்களே?"

"ஆமாஜி, இப்ப இருக்கற நிலைமையிலே உங்களைத் தவிர வேற யாரையும் என்னால நம்ப முடியலீங்க."

"நாமளும் எவ்வளவுதான் சாஃப்ட் டிரிங்ஸ்னு சொல்லி விளம்பரப்படுத்தினாலும், விஷயம் குலுக்கி வைச்ச நம்ம சரக்கு மாதிரியே பொங்கிருச்சே!"

"இப்படியே போனா, நம்ம டிரிங்ஸை ஃப்ரியா கொடுத்தாக்கூட யாரும் குடிக்க மாட்டாங்க போல!"

"நீங்க வேற, பீகார் மக்களைக்கூட நம்மால ஏமாத்த முடியாது."



"பீட்சா கடை டு பீடா கடை, நர்சரி ஸ்கூல் டு காலேஜ் கேண்டீன் வரை கோலோச்சிட்டு இருந்தோம். இன்னிக்கு என்னடான்னா, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ஸ்டேட்னு டைம்டேபிள் போட்டுத் தடை பண்ணுறாங்க."

"டீ.வியில, சினிமாவுல நம்ம டிரிங்ஸ் ஸீன்ல வந்தாக்கூட 'குடிப்பழக்கம் உடலுக்குத் தீங்கு'ன்னு வாசகத்தைப் போடுவாங்கன்னு நினைக்கிறேன். எத்தனை கவிஞனுங்க நம்மளை கவிதையில யூஸ் பண்ணியிருப்பானுங்க. துரோகிங்க, அவங்ககூட இனிமே நம்மளை நெகட்டிவா யூஸ் பண்ணுவாங்க போல!"

"சினிமாக்காரங்க, ஸ்போர்ட்ஸ்காரங்க எல்லாம் நம்மளைப் பார்த்தாலே தெறிச்சு ஓடுறாங்க. இனிமே யாராவது நோயாளிங்களை வைச்சுத்தான் விளம்பரம் எடுக்க முடியும்!"

"தாகம் எடுத்தா நம்ம டிரிங்ஸைக் குடிச்சிக்கிட்டிருந்த பசங்க, தயிருக்குப் பதிலா இதைச் சாதத்துல ஊத்திச் சாப்பிட்டுக்கிட்டிருந்த பொண்ணுங்கன்னு யாருமே இப்ப திரும்பிக்கூட பார்க்கறதில்லே! நிலைமை இப்படியே போச்சன்னா நஷ்டம் நங்கூரம் போட்டு உட்கார்ந்துக்கிடுமே!"

"சிகரெட் பாக்கெட்ல போடற மாதிரி 'இதைக் குடிப்பது உடல் நலத்துக்குத் தீங்கானது'ன்னு போட்டு, விக்கறதுக்கு பர்மிஷன் கேப்போமா?"

"நல்லாத்தான் இருக்கு. சிகரெட், பான்பராக் மாதிரி அதையும் படிச்சுக்கிட்டே மக்கள் பரமானந்தமாக் குடிப்பாங்க!"

"இன்னொரு ஐடியாவும் எனக்குத் தோணுது. 'டாஸ்மாக்' மாதிரி 'பெப்கோ'னு நம்பர் போட்ட தனி கடைகள் ஆரம்பிச்சு, குடிமகன்கள் ...ந்து குடிக்கிற மாதிரி 'பார்' அட்டாச் ...ண்ணிரலாம்."

"சூப்பர், இதுல ஏதாவது வொர்க்-...வுட் ஆகுதான்னு பார்ப்போம். இல்...ாட்டி ஏதாவது உட்டாலக்கடி வேலை ...ண்ணிட வேண்டியதுதான்."

"அதுக்கும் என்கிட்ட ஐடியா இருக்கு. ...ம்மளோட இதே ப்ராடக்ட்டையே



# ...மாங்கே மோர்!"

லைட்டா பேரை மாத்தி, மூலிகைக் குணங்கள் நிறைந்த பானம்னு விளம்பரப்படுத்தி மக்களைத் திசை திருப்பிரலாம்."

"இல்லாட்டி, இந்திய மக்களைக் கவுக்க ஒரே வழிதான் இருக்கு. அது பக்தி. புனித நீர் கலந்த பானங்கள்னு எதையாவது கிளப்பிவிட்டு மார்க்கெட்டைப் பிடிச்சிரலாம்."

"புது விளம்பரத்துல மயங்கி மக்கள் வாங்கி உள்ளே ஊத்திக்குவாங்க. இதே பூச்சி மருந்துதான் புதுசும்னு கண்டு பிடிச்சு அடுத்த ரிப்போர்ட் வர்றதுக்குள்ள இன்னும் ஒரு வருஷம் ஓடிப்போயிரும்."

"சூப்பராச் சொன்னீங்க. இன்னொரு விஷயத்தையும் பண்ணலாம். கேன்சரைத் தடுக்க, எய்ட்ஸை ஒழிக்க, அந்த அறக்கட்டளைக்கு, இந்த அறக்கட்டளைக்குன்னு பணத்தைக் கோடிக் கணக்குல அள்ளி விட்டாக்கூட இந்தச் சலசலப்பை திசை திருப்பலாம்."

"அட, இதை நான் யோசிக்கவே இல்லியே! இப்ப பாருங்க, நாம கவுந்து கிடக்கிறோம். லோக்கல் கோலி சோடா கம்பெனிக்காரங்க எல்லாம் குஷியில குதியாட்டம் போடுறாங்க. பெட்டிக்கடைகள்ல மோர் பாக்கெட்லாம் இப்ப டன் கணக்குல விக்குதாம்."

"நாமளும் நம்ம ப்ராடக்ட் மோர் வித்தா என்ன?"

"ஏற்கெனவே தில் மாங்கே மோரு மோருன்னுதான் வித்திங்க. நமக்குத் தான் மோர் தயாரிக்கிற ஃபார்முலா தெரியாதே. அது போக, மோரெல்லாம் இயற்கை பானமாயிரும். அது நம்ம கொள்கைக்கு விரோதமானதாச்சே!"

"அதுவும் சரிதான். இப்ப பேசனதுல ஏதாவது ஒரு ஐடியா கண்டிப்பா வொர்க்-அவுட் ஆகும். இந்திய மக்களைச் கலபத்துல விடவே கூடாது. சரி, தாகமா இருக்கு. ஏதாவது ஆர்டர் பண்ணுங்க."

"பேரர், குடிக்க டிரிங்ஸ் என்ன இருக்கு?"

"கோ..."

"ஏய் சொல்லாதே"

"பெ..."

"நிறுத்து. அதெல்லாம் குடிக்க நாங்க என்ன லூஸா? போய் ரெண்டு இளநீர் கொண்டு வா!"

கற்பனை : **முகில்**

ஃபேக்ஸ் ஃப்ரம் டெல்லி!

# வேகத்துக்குத் தடா!

தலைநகர பஸ்களெல்லாம் இனி வேகத் தோட, விவேகமாவும் ஓடப்போகுது. 'டெல்லி பஸ்ஸா'ன்னு கிலில ஓடினவங்க எல்லாம் இனி தைரியமா ஏறலாம். எக்கச்சக்க வேகத்துல தலைதெறிக்க ஓடிக்கிட்டிருந்த தலைநகர பஸ்கள், இனிமேல் ஒரு மணி நேரத்துக்கு 40 கி.மீ.ங்கற வேகத்துக்கு மேல போகவே முடியாது. டெல்லிப் போக்குவரத்துக் கழக பஸ்கள்ல ஆக்ஸிலேட்டர்களுக்கு அடியில தகர ப்ளேட்டுகளைப் பொருத்தப் போறாங்க. இதனால குறிப்பிட்ட வேகத்துக்கு மேல நிச்சயமா பஸ்களால போகவே முடியாதாம். தலைநகரத்துல நடக்கிற பல விபத்துகளுக்கு பஸ்களின் இந்த அதிவேகம்தான் காரணம். அதனாலதான் இந்த அதிரடியான நடவடிக்கை.



பிரச்னைக்குக் காரணமான்னு பல் கலைக்கழகத்துல ஆராய்ஞ்சுக்கிட்டிருக் காங்க.

ஆராய்ச்சிகள் நல்லபடியாகத் தொடரட்டும்... டெல்லி ரயில் நிலையத்தில் இருக்குற 1,500 போர்ட்டர்களுக்கு ரயில்வே ஸ்டேஷன்ல வர்றவங்களை உன்னிப்பா கவனிக்கறது எப்படின்னு ஒரு பயிற்சியே நடந்துக்கிட்டு இருக்கு. ரயில்வே ஸ்டேஷன்ல 24 மணி நேரமும் ஓடி ஆடி வேலை செய்றவங்க அவங்கதானே? அதனால சந்தேகத்துக்கு இடமளிக்கற மாதிரி யாராவது நடந்துக்கிட்டாலோ அல்லது ஏதா

வேகத்துக்குத் தடை நல்லதுதான். தாறுமாறான மொழிபெயர்ப்புக்கும் சீக்கிரம் தடை வந்தா நல்லா இருக்கும்னு டெல்லியில் இருக்குற இந்திரா காந்தி தேசிய திறந்தவெளிப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் விரும்பறாங்க. ஆங்கிலப் பாடங்களிலிருந்து ஹிந்திக்கு மொழி பெயர்ப்பு செய்யப்பட்ட பாடங்களின் நிலை ரொம்பவே மோசமா இருக்காம். பொருளாதாரப் பாடத்தில் 'வால் ஸ்ட்ரீட் க்ராஷ்'ங்கறதை 'சுவர் இடிந்து தரையில் விழுந்தது'ன்னும் 'டபிள்யூ. டபிள்யூ. ஹன்டர்'ன்ற வரலாற்று நிபுணரின் பெயரை 'டபிள்யூ. டபிள்யூ. வேடன்'ன்னும் மொழிபெயர்ப்பு செய்தால் சும்மாவா இருக்க முடியும்? மொழிபெயர்ப்பாளர்களுக்கு வழங்கப்படும் சம்பளப் பற்றாக் குறைதான் இப்படி எக்குத்தப்பான

வது பொருளைக் கொண்டு சென்றாலோ போர்ட்டருங்ககிட்ட 'லபக்'னு மாட்டிக்க வேண்டியதுதான்.

வெளிநாடுகள்லேர்ந்து தங்கள் நோய்களுக்கான சிகிச்சை எடுத்துக்க மட்டுமே இந்தியா பக்கம் வந்துக்கிட்டிருந்த மக்கள், இப்போ தங்களுக்கு என்ன நோய் இருக்குன்னு கண்டுபிடிச்சுக்கவும் வர ஆரம்பிச்சுட்டாங்க. அரபு நாடுகள் மற்றும் இலங்கை, பங்களாதேஷ், நேபால், யு.கே. லேர்ந்தும் விமானம் ஏறி நம்ம தலைநகரத்துக்கு வந்து இரத்தத்தைப் பரிசோதனை செய்துக்கறாங்க. நோயின் வகை என்னன்னு கண்டுபிடித்துச் சொல்வதில் டெல்லியில் உள்ள பல மருத்துவ நிறுவனங்கள் சுறுசுறுப்பா இயங்கறதுதான் காரணம்.

**- நளினி சம்பத்குமார்**

# கவுன்சிலிங் இலவசம்!



பெங்களூரில் பவன்குமார் என்ற ஆண் குழந்தைக்கு, அதன் ஐந்தாவது மாதத்திலேயே இதயத்தில் ஏதோ பிரச்னை என்று தெரிந்தது. ஆபரேஷன் செய்வதற்கு இலட்சக் கணக்கில் செலவாகும் என்பதால் மனமுடைந்து அவனுடைய ஏழைத் தாய் தற்கொலை செய்துகொண்டு விட்டாள். அடுத்த மூன்று மாதங்களில் அவனுடைய அப்பாவும் மனைவியைப் பின் தொடர்ந்து போய்விட்டார். குழந்தை பவன்குமாரை அவனுடைய பாட்டி எடுத்து வளர்க்க ஆரம்பித்தார். வீட்டு வேலை செய்து பிழைத்து வரும் அந்த ஏழைக் கிழவியின் நிலை பெங்களூர் மணிபால் ஆஸ்பத்திரியில் பணியாற்றி வரும் டாக்டர் சதீஷுக்குத் தெரிய வந்தது. அவர் 'ஆபரேஷன் செலவுக்கு ஆகும் பணத்தில் ஒரு பகுதியை நான் ஏற்றுக் கொள்கிறேன்' என்று சொன்னார். மீதிப் பணத்துக்கு என்ன செய்வது? மணிபால் மருத்துவமனையிலுள்ள ஒரு சமூக நலக் குழு அதற்கு முன் வந்தது. அவர்கள் நான்கு நல்லிதயம் படைத்தவர்களிடம் இருந்து 1,10,000 ரூபாய் திரட்டினார்கள். ஒன்றரை வயது பவனுக்கு ஆபரேஷன் வெற்றிகரமாக முடிந்தது. மணிபால் மருத்துவமனை மற்ற செலவுகளை இலவசமாக வழங்கியது.

புதிதாகக் கல்லூரியில் சேரும் ஒரு மாணவனுக்கு 'ராகிங்' ப்ராப்ளமா? நெருங்கிய நண்பர் அல்லது உறவினர் இறந்து விட்டதால் சோகக் கடலில் மூழ்கியிருக்கிறீர்களா? உங்களைப் பாதித்துவிட்ட ஏதாவது பிரச்னையால் மனம் உடைந்து போயிருக்கிறீர்களா? பெங்களூரில் 40129129 என்னும் நம்பருக்கு போன் செய்தால் மனோதத்துவம் படிக்கும் ஒரு கல்லூரி மாணவர் உங்களுக்கு 'கவுன்சிலிங்' செய்து ஆறுதல் அளிப்பார். பெங்களூரில் உள்ள கிறிஸ்தவக் கல்லூரி, உளவியல் மருத்துவமனை, பெங்களூர் கிழக்கு ரோட்டரி கிளப் மூன்றும் சேர்ந்து 'சஹாய்' என்னும் அமைப்பை உருவாக்கியுள்ளது. மனோதத்துவம் பயிலும் 50 மாணவர்கள் முறை வைத்துக்கொண்டு போனில் பேசி ஆறுதல் அளிக்கிறார்கள்.



• சந்தோஷ் ஹெக்டே

பெங்களூரின் புதிய 'லோக் அயிக்தா'வாக (லஞ்ச ஒழிப்பு அதிகாரி) பதவியேற்றிருக்கிறார் சந்தோஷ் ஹெக்டே. 'லஞ்ச ஊழல் வழக்குகளை விசாரிப்பதற்காகத் தனி கோர்ட் அமைப்பேன்' என்கிறார் இவர். 'கர்நாடகத்திலுள்ள அமைச்சர்கள், எம்.எல்.ஏக்கள், அரசியல்வாதிகள், உயர் அரசு அதிகாரிகள் ஆகியோர் தங்களுடைய சொத்து விவரங்களை எங்களுக்குத் தெரிவிக்க வேண்டும்' என்று கூறும் இவர், 'வெப்சைட்' மூலம் தம்முடைய சொத்து விவரங்களையும் வெளியிட்டுள்ளார்.

- அனிதா ராமச்சந்திரன்

# “கலாசாரத்தை

**வடிவேலுவுக்கு காமெடி ரேஸில் முதலிடம். போதாததற்கு இம்சை அரசன் 23-ம் புலிகேசியின் கலக்கல் சக்சஸ் வேறு. மனிதர் அந்தரத்தில் மிதப்பார் என்று பார்த்தால் கால்களைத் தரையில் அழுத்தமாக ஊன்றியபடி நடந்து வந்து நம்மை வரவேற்கிறார்.**

**இம்சை அரசனுக்கு இந்த அளவு வெற்றி கிடைக்கும்னு எதிர்பார்த்தீங்களா?**

“நிச்சயமா இல்லை. நடிக்க வந்து பதினைஞ்சு வருஷமாச்சு. இப்படியொரு வரவேற்பை இதுவரைக்கும் பார்த்ததில்லை. மதுரை தமிழ் பேசியே பழக்கப்பட்ட வடிவேலு செந்தமிழ் பேசினதை மக்கள் ஒப்புக்கிட்டாங்க. குழந்தையில இருந்து பெரியவங்க வரைக்கும் எல்லோருக்கும் இம்சை அரசனைப் பிடிச்சிருக்கிறது பெரிய விஷயமாச்சே. குடும்பத்தோட கூட்டம் கூட்டமா வந்து ரசிச்சுட்டுப் போறாங்க. ஒரு பெரிய நடிகரோட படம் மாதிரி அப்படியே அள்ளிக்கிட்டாங்க. மனசுக்கு ரொம்ப திருப்தியா இருக்கு. இம்சை அரசனை நானும் தியேட்டர்ல போய்ப் பார்த்தேன். மீசையும் தொப்பையுமா என்னைப் பார்க்கும்போது எனக்கே அடையாளம் தெரியலை. சென்னை மாதிரியான ஏ கிளாஸ் சென்டரிலும் ஜனங்க படபடன்னு கைதட்டறது மனசுக்குச் சந்தோஷமாக இருக்கு.”

**இருந்தாலும் அந்த சீரியஸ் கேரக்டரை நீங்க பண்ணியிருக்கத்தான் வேணுமா?**

“ஆரம்பிக்கும்போதே இதுல டபுள் கேரக்டர். அதுல ஒரு கேரக்டர் சீரியஸா இருக்கும்னு வேற டைரக்டர் சொல்லிட்டார். நானும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். நான் ஹீரோவா நடிச்சா மக்கள் சிரிப்பாங்கன்னு. அப்படிச் சிரிச்சா அதுவே பெரிய சக்ஸஸ்தான்னு சொல்லிட்டு சிரிச்சார் டைரக்டர். சீரியஸோ, காமெடியோ மக்கள் ரசிக்கணும். அதுதான் முக்கியம்.”

**இம்சை அரசனோட வெற்றி உச்சத்துல தூக்கி வெச்சுடுச்சே. இனிமே என்ன பண்ணப் போறீங்க?**

“சினிமாவுல வெற்றியெல்லாம் புதுச்சட்டை மாதிரிங்க. ‘டேய்... உனக்குப் பொருத்தமா, பிரமாதமா இருக்குடா’ன்னு சொல்வான். அப்படியான்னு ஒரு நிமிஷம் நம்மளைக் கண்ணாடியில் பார்த்துட்டு சட்டையைக் கழட்டி ஆணியில மாட்டிட வேண்டியதுதான். நேரம் கிடைக்கும்போது எட்ட நின்னு சட்டையை



**வள்ளியப்பன்,**
**உரிமையாளர்,**
**கமலா தியேட்டர்...**

“ரஜினி படத்துக்கு வர்ற ஆடியன்ஸ் மாதிரி இம்சை அரசன் படத்துக்கு ஜேஜேன்னு குழந்தைங்களோட குடும்பமாக வர்றாங்க. ஞாயிற்றுக்கிழமையில் டிக்கெட் இல்லாம குழந்தைங்க வருத்தமா திரும்பிப் போறதைப் பார்க்க முடியுது. முதல் மூணு வாரத்துல 84 ஷோ ப்ளஸ் ரெண்டு ஸ்பெஷல் ஷோ போட்டிருக்கோம். எல்லாமே ஹவுஸ்ஃபுல்தான். எங்க தியேட்டர்ல 900 பேர் உட்கார்ந்து படம் பார்க்கலாம். இந்த ஒரு மாசத்துக்குள்ள ஒரு லட்சம் பேராவது படத்தைப் பார்த்திருக்காங்க. ஒரு காலத்துல ஃபர்ஸ்ட் ஷோன்னு கேட்டுதான் டிக்கெட் எடுப்பாங்க. ஈவ்னிங் ஷோ டிக்கெட் கொடுங்கன்னு கேட்கறதெல்லாம் இப்போதான். இந்தப் படத்துக்கு நிறைய பேர் ஃபர்ஸ்ட் ஷோ டிக்கெட் குடுங்கன்னு கேட்கிறாங்க. இதுலேர்ந்து என்ன தெரியுதுன்னா தியேட்டருக்குப் போய்ப் படம் பார்க்கிற பழக்கத்தை நிறுத்தினவங்களை இம்சை அரசன் திரும்பவும் தியேட்டருக்குக் கூட்டிட்டு வந்துட்டாங்கறதுதான்.”

## - வடிவேலு விளாசல்

# சிங்கப்படுத்தக் கூடாது!

வேடிக்கை பார்த்துட்டு அடுத்த சட்டையைத் தேட வேண்டியதுதான். நல்லா இருக்குதுங்கிறதுக்காக ஒரே சட்டையை எத்தனை நாளைக்குத்தான் போட்டுக்கிட்டு இருக்க முடியும்."

**கரெக்ட். ஆனா ஹீரோவாகிட்டீங்களே... இனிமே ஹீரோவாதான் நடிப்பேன்னு சொல்லுவீங்களா?**

"நல்ல கதையாப் போச்சு. காமெடி டிராக்குதாங்க எனக்கு மெயின் டிராக். எம்டன் மகன், காதல் ஜில்ஜில்னு காமெடி டிராக்கில் கலக்கியிருக்கேன். பார்த்துட்டுச் சொல்லுங்க. நடுவே இம்சை அரசன் மாதிரி நல்ல சப்ஜெக்ட் கிடைச்சா வருஷத்துக்கு ஒண்ணு பண்ற ஐடியாவும் இருக்கு."

**தேவர் மகன் இசக்கி எங்கேதான் போனார்? திரும்பவும் வருவாரா மாட்டாரா?**

"ஹையோ. அது மாதிரி பண்ண மனசுல கொள்ளை ஆசையோட காத்துக்கிடக்கேன். கேரக்டர் கிடைச்சா கண்டிப்பா பண்ணுவேன். யாரு அது மாதிரி கேரக்டர் கொடுக்கிறாங்க?"

**எப்பவும் அதிகமாப் பேசமாட்டீங்க. இப்போ திடீர்னு 'உயிர்' படத்தைப் பத்தி விமர்சனம் பண்ண ஆரம்பிச்சுட்டீங்களே?**

"அதைப்பத்தி பேச வேணாம்ங்க. ஏதோ சொல்லணும்னு தோணுச்சு. மனசுல வெச்சுக்காம சொல்லிட்டேன். அவ்வளவுதான்."

**தமிழ் சினிமாவுல காமெடின்னாலே அதுல பாதி ரெட்டை அர்த்த வசனங்கள்தான். அதைப் பத்தியெல்லாம் கண்டுக்காம வடிவேலு கலாசாரத்தைப் பத்திப் பேசறாரேன்னு சொல்றாங்களே...**

"பிரச்னை வளர்றதுக்கு இதுதான் காரணம். நீ சரியா, நான் சரியான்னு பார்த்துக்கிட்டிருந்தா நம்ம சமூகத்துக்குத்தான் கெடுதல். மனசை நெருடுற விஷயத்தை மனசுக்குள்ளே வெச்சுக்காம பட்டுன்னு பேசிட்டேன், அவ்வளவுதான். நமக்குன்னு இருக்குற கலாசாரத்தை அசிங்கப்படுத்துற மாதிரி படம் வர்றது நல்லாவா இருக்குது? படம்னா குடும்பத்தோட சேர்ந்து உட்கார்ந்து பார்க்கிற மாதிரி இருக்கணும். இதுக்கு மேல இதுல சொல்றதுக்கு என்ன இருக்குது?"

**- ஜெ.ராம்கி**



## சூப்பர் மார்க்கெட்

"உலகே மாயம் வாழ்வே மாயம்!" - என்ன சுமிக்கு ஏதேனும் காதல் தோல்வி பிராப்ளமான்னு கணக்குப் போடறீங்களோ! முதல்ல அதை நிறுத்திட்டு இந்த மாயப் பட்டியல்ல மூணாவதா ஒண்ணைச் சேத்துக்குங்க - தனிமை! 'தனிமையும் மாயம்'னு சொல்றவர் தத்துவ ஞானி ஜே.கிருஷ்ணமூர்த்தி!

சார்ந்திருத்தல் அப்படின்றதைப் பத்தி அலசறப்போ அவர் சொல்றார் : நண்பன், உறவு, காதல், மருந்து, மது அல்லது வேறு போதைப் பொருட்கள் அப்படின்னு ஏதோ ஒண்ணைத் தேடிக்கிட்டுப் போறோம். அப்புறம் அது இல்லைன்னா முடியாதுன்ற ஒரு சிச்சுவேஷனுக்கு நம்மை ஆளாக்கிக்கறோம். தனிமையாயிருக்குன்றதுக்காக இதையெல்லாம் நாடிப் போகறது ஒருவித எஸ்கேபிஸம்தான் - கடவுளைச் சார்ந்திருக்கிறதுகூட எஸ்கேபிஸம்தான் என்கிறார் ஜே.கே.!

தனிமையை எதனாலயும்

**சுமி**

விரட்ட முடியாதாம். ஏன்...? பிகாஸ் தனிமைன்னு எதுவுமே கிடையாதாம்! தனிமைன்றது மனசுடைய கற்பிதம். - இது ஜே.கே.வோட ஸ்டாண்ட்!



• ஜே.கே.

இதையே சுமியோட புத்திக்கு எட்டின லாங்குவேஜ்ல சொல்லணும்னா, தனியா இருக்கறப்போ வி ஆர் ஆக்சுவலி வித் அவர் செல்வ்ஸ். நம்மோடவே நாம் முழுமையா இருக்கறப்போ எப்படித் தனியா இருக்க முடியும்?

சரிசரி, சுமிக்கு மரை கழன்டு போச்சுன்னு நீங்க டிசைட் பண்றதுக்கு முன்னாடி ஒரு சின் உதவியோட எக்ஸ்ப்ளெயின் பண்றேன். ரீசன்டா மெடிக்கல் காலேஜ்லருந்து சில ஃப்ரெண்ட்ஸ படை சேர்த்துக்கிட்டு குற்றலாம் போனோம். வீக் என்ட் கிரவுட்ல புகுந்து புறப்பட்டு அருவிக் குளியல் அனுபவிக்கற தில் எங் கேங்குக்கே இல்லே. அவ்வளவு பேய் கும்பல்! ஆனா, சேதுபதி மன்னர்க கட்டின அரண்மனைக்குப் போய் சுத்திப் பார்க்க முடிஞ்சுது. பழைய கா கல் கட்டடம். இரண்டு வீடு உயரத்து சீலிங் - அதுல ஓடுற தேக்கு மர பீம்கள் குறுக்குல இரும்பு கரட்டர்ஸ் நல்லா ம மழுன்னு இழைச்ச மரத்துல மாடிப்ப அதுல ஏறிப்போனா சிலுசிலுன்னு சாரல்ல நனைஞ்சுக்கிட்டிருக்க மொட்டை மாடி. சுற்றிலும் பச்சை பசேல்னு மலைச் சரிவுகள். சென்டர்



நின்னு பார்த்தா... சொர்க்கத்துலேர்ந் இறங்கி வந்த மாதிரி குற்றாலம் மெயி ஃபால்ஸோட மேல் பகுதி தெரியுது.

சளசளன்னு படியேறி வந்த எங் கூட்டம், இந்த ஸீனைப் பார்த்தது கொஞ்சம் நேரம் வாயடைச்சுப் போச் அதுவரைக்கும் தொண்டை தண்ண வத்தறதைப் பத்திக்கூட கவலைப்படா பேசிட்டு வந்த நான், மூணு செகண் பேசாம இருந்தாகூட மூச்சுமுட்டி செ துடற மாதிரி அவஸ்தைப்படக்கூடி மீனா, பிறந்ததே பேசறதுக்குத்தான்ங்க மாதிரி பேசக்கூடிய ரிச்சர்ட்ஸ் எல்ல ருமே வாயடைச்சுத்தான் போனோம்

கொஞ்சம் நேரத்துக்கு. அவங்கவங்க தங்களுக்குள்ள புகுந்துக்கிட்ட மோமன்ட் அது.

அசத்தலான அந்த சீன்லருந்து அகன்று வந்தப்புறம் திங்க் பண்ணிப் பார்த்தேன்... ஜே.கே. சொன்னதோட அர்த்தம் புரிஞ்சுது. ரொம்ப நிறைவான அந்த சீனைப் பார்த்தப்போ யாருக்கும் கம்பெனியோ, பேச்சோ தேவைப்படலை. அவ்வளவு பேர் சேர்ந்து இருந்தும் அவங்கவங்க தனித்தனியாத்தான் தங்களுடைய சந்தோஷத்தையும் நிறைவையும் அனுபவிச்சிருக்காங்க - ஸோ, தனிமையை ஜெயிக்கணும்னா தனக்குள் தானே நிறைவு காண்ணும் - குற்றாலத்துக்குப் போகாமலே!



* லாலு

'தனி' விஷயம் கொஞ்சம் தனியே இருக்கட்டும். மணி விஷயத்துக்கு வருவோம். லாலுவைப் பத்தின நியூஸ் படிச்சிருப்பீங்களே... ரயில்வே துறையை நஷ்டத்திலேர்ந்து லாபத்துக்குத் திருப்பின பிறகு அவர் இன்னும் பெரியாள் ஆயிட்டார். முஸ்ஸோரியிலே ஐ.ஏ.எஸ். மாண

# ...ஷயமும் 'மணி' விஷயமும்...



வர்களுக்கான பயிற்சி முகாம்கள்லயும் ஐ.ஐ.எம். களில் எம்.பி.ஏ. படிக்கற ஸ்டூடன்ட்ஸுக்கும் ஸ்பெஷல் லெக்சர் நடத்த அவரைக் கூப்பிட்டிருக்காங்க. இன்றும் ஹார்வர்ட் யூனிவர்ஸிட்டி, ஃப்ரெஞ்சு வர்த்தக நிபுணர்கள், வேற பல டாப் ஃபைனான்ஸ் கம்பெனீஸ் எல்லாம் ரயில்வேஸோட செயல்பாட்டை ஆராய்ச்சிக் கண்கொண்டு பார்த்துக்கிட்டிருக்காம்.

ரயில்வே கிச்சன்ல கரப்பானும் எலியும் ஓடினா என்ன... கேஷ் கையிருப்பு 13,000 கோடியாச்சே! ●

# நீங்கள் கேட்டவை - தராசு

● வ.இராமுவேல், திருச்சி - 17

? எண்சாண் உடம்புக்கு சிரசே பிரதானம். அப்படியிருக்க, தலையில் தேங்காய் உடைத்து நேர்த்திக் கடன் நிறைவேற்றினால் அபாயமல்லவா?

! கருணையும் அன்பும் வடிவான கடவுள் விபரீதமான இத்தகைய குரூரங்களை நிச்சயமாக விரும்பமாட்டார்;



• விமர்சனம்...



• ...இலக்கு!

நமது அறியாமை என்னும் தேங்காயைப் பகுத்தறிவு என்னும் தளத்தில் உடைத்துச் சுக்குநூறாக்கினால் ஏற்று மகிழ்வார்.

● பி.பத்மா, அரங்கநாதபுரம்

? ஒரு சில வருடங்களாகவே தி.மு.க.வை எதற்கெடுத்தாலும் குறை சொல்லுவதும் அ.தி.மு.க.வின் தவறுகளைக் கண்டுகொள்ளாமலிருப்பதும் உங்களிடம் நான் காணும் மாற்றம். 47NP பக்கத்தில் 48NP உள்ளதாலா?

! ஒரு சில வருடங்களாக அல்ல; ஒரு சில மாதங்களாகத்தான். அதற்கு முன் ஜெ.தான் அதிகமாக விமர்சனத்துக்கு உள்ளானார். எதிர்கட்சியின் செயல்பாடுகளைவிட ஆளும் கட்சிகளின் செயல்பாடுகள் அதிக விமர்சனத்துக்கு உள்ளாவதுதான் இயல்பு. எங்கள் NP - N : நியாயம் P : பேசுவதுதான்! 48, 47 எல்லாம் அதே! அதே!

● ச.ஆ.கேசவன், இனாம் மணியாச்சி

? அறுபதாம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ள சுதந்திர பாரதம் இன்னும் யாரிடமோ அடிமையுற்று அவஸ்தை படுவதுபோல் தோன்றுகிறதே?

! அரசியல் சுதந்திரம் வந்தது; பொருளாதார சுதந்திரம் பறிபோச்சு! அதான் அப்படித் தோணுது. காந்திஜியின் கொள்கைகளை தூசு தட்டி அமலாக்கினால் நிஜ விடுதலை கிடைக்கும். 'Outsource to rural areas' என்று எம்.எஸ்.சுவாமிநாதன் இன்று சொல்கிறார். காந்தி அன்றே இதைத்தான் சொன்னார். கேட்பார்தான் இல்லை. இதுபோல் எத்தனையோ!

● எம்.ஜோதிகுமார், சென்னை - 106

? மாமூல் பிரிக்கும் தகராறில் போலீசார் இரண்டு பேர் காவல் நிலையம் எதிரிலேயே கட்டிப்புரண்டு சண்டை போட்டிருக்கிறார்களே?

! இந்தச் செய்தியைவிட அதிக அதிர்ச்சி அளிப்பது 'போலீஸார் மாமூல் பெறுவது மாமூலான விஷயம்தான்' என்று முதல்வர் பேசியிருப்பது. ஜோக்காகக்கூட சொல்லியிருக்கக் கூடாது. இவ்விஷயத்தில கண்டிப்பு தேவை; கருணை அல்ல.

## பணம் குவியும் கோயில்களில்தானே

● பி.ராஜேஸ்வரி, மதுரை - 16

? போலி இறை தூதர்கள் எல்லா மதங்களிலும் பெருகிவிட்டனரே?

! இப்படிச் சொல்வதைக் காட்டிலும் 59 ஆண்டுகளில் அறியாமை ரொம்பப் பெருகிவிட்டதாகச் சொல்லலாம். நமது கல்வி பரப்பும் திட்டங்களும் கல்வியின் தரமும் அப்படி இருக்கின்றன.

● **ஆரூர் சேகர், சென்னை**

**? கல்கி பரபரப்பான பத்திரிகை அல்ல என்ற குற்றச்சாட்டுக்கு தராசுவின் பதில் என்ன?**

! உண்மைதான். இது குற்றச்சாட்டு அல்லவே; பாராட்டு தானே!

● **ஜோ.ஜெயக்குமார், நாட்டரசன்கோட்டை**

**? கள்ள வோட்டு, கள்ள நோட்டு - நாட்டுக்கு அதிகம் தீங்கு விளைவிப்பது எது?**

! கள்ள வோட்டினால் பதவிக்கு வருபவர்கள் தகுதியற்றவர்கள். அவர்களால் கள்ளநோட்டுப் புழக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாது. எனவே கள்ள நோட்டை விட கள்ள வோட்டே அதிக ஆபத்து.

● **ஸ்ரீநிவாஸ் சுதர்சனன், சென்னை**

**? பணம் குவியும் கோயில்களில்தான் பல தவறுகளும் அக்கிரமங்களும் நடக்கின்றன - இது நல்லதா?**

! நல்லதல்ல; அரசின் தலையீடு குறைந்து, ஊர் மக்களின் செல்வாக்கு கோயில்களின் பராமரிப்பு - நிர்வாகத்தில் அதிகரித்தால் அக்கிரமங்கள் குறையும். Grassroot Democracy என்பது இதுதான்.

● **எஸ்.பாலசந்தர், திருவாரூர் - 1**

**? இஸ்ரேல் போல நாமும் தீவிரவாதத்தை ஒடுக்க களத்தில் இறங்க வேண்டும் என துக்ளக் ஆசிரியர் சோ சொல்வதை ஒப்புக்கொள்கிறீர்களா?**

! இஸ்ரேல் தனது நோக்கத்தில் வெற்றி காணவில்லையே! பச்சிளங் குழந்தைகள் உள்பட பல நூறு மக்கள் கொல்லப்பட்டதும் நகரம் கல் குவியலானதும்தான் மிச்சம். போர் நின்றதும், ஹிஸ்போல்லா தனக்கு மாபெரும் வெற்றி என்கிறது. அதன் பயங்கரவாதம் மேலும் தீவிரமடையும்.



★ கல்லாத சரித்திரம்!

● **வி.ஆர்.கிருஷ்ணன், தஞ்சை**


**? ரேஷன் அரிசி இரண்டு ரூபாய்க்கு விற்றும் வெளி மார்க்கெட் அரிசி விலை குறையவே இல்லையே?**

! மார்க்கெட் நிலவரம் - விலை வேறு; மானியங்கள் அளித்து செயற்கையாக ரேஷன் அரிசி விலையைக் குறைப்பது வேறு. இரண்டு ரூபாய் ரேஷன் அரிசி மார்க்கெட்டில் 18 ரூபாய் என்றால், கள்ளக் கடத்தல்தான் பெருகுமே யொழிய மார்க்கெட்டில் அரிசி விலை குறையாது.

● **நா.பாலசுப்பிரமணியன், சென்னை - 40**

**? அண்டை மாநிலங்களில் நல்ல படியாக மழை பெய்துள்ளதால் நதிநீர் ஒப்பந்தத்தை நன்கு பின்பற்றலாமே?**

# அக்கிரமங்கள்...?



★ செல்வச் சர்ச்சை!

! மழை பெய்தாலும் பெய்யாவிட்டாலும் கடைப்பிடிக்கப்பட வேண்டியது ஒப்பந்தம்! மழை பெய்கிற காலத்தில் உபரிநீர் ஒப்பந்தத்துக்கு மேலாகவே வருவதால் சிக்கலே இல்லையே.

●**எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி**

***? தனிநபர் விமர்சனங்கள் சட்டமன்றத்தைக் கொச்சைப்படுத்துவதாகும் என்கிறாரே ஜெ...?***

! தரக்குறைவான தனிநபர் விமர்சனங்கள் சந்தேகமின்றி சட்டமன்றத்தின் கௌரவத்தைக் குலைக்கும். அங்கு மட்டுமல்ல; எங்கு நடந்தாலும் விமர்சகருக்கு இழிவுதான் - ஜெவின் கருணாநிதி விமர்சனங்கள் உள்பட.



● பணிப் பிரச்னை!

●**வசீகரன், தேனாம்பேட்டை**

***? புலிகள் ஒழிந்தால்தான் இலங்கைப் பிரச்னை தீருமா?***

! ஒழிய வேண்டியதில்லை; ஓரிரு அம்சங்களில் கொஞ்சம் விட்டுக் கொடுத்தாலே போதும். எல்லோரும் நிம்மதியாக வாழலாம். ஒரு சிலரின் ஈகோதான் பல்லாயிரம் குடும்பங்களின் அவதிக்குக் காரணமாகிறது என்பதை சரித்திரம் பல முறை நிரூபித்திருக்கிறது.

●**எஸ்.கருணையானந்தம், உசிலம்பட்டி**

***? கணக்குப் பாடத்தில் 200க்கு 200 சரி... வீராணம் திட்டத்தில் 295 கோடியைக் கோட்டைவிட்டது...?***

! இப்படிப்பட்ட ஆட்சி நடத்தியதால்தான் கோட்டையையே கோட்டைவிட நேர்ந்தது!

●**த.ஞா.செ., சென்னை - 2**

***? எய்ட்ஸ் நோயை ஒழிக்கவே முடியாதா?***

! முடியும். அதற்கு ஒழுக்கம் என்ற தடுப்பு மருந்தை ஒவ்வொருவரிடமும் இறைவன் கொடுத்திருக்கிறான். அதன் மகத்துவம் புரியாமல் போனதால்தான் இன்று செயற்கை மருந்தை நாடி பலர் ஓடிக் கொண்டிருக்கிறார்கள்.

●**ஆர்.பிரகாஷ், திருச்சி - 4**

***? இரவுப் பணிகளில் பெண்களை நியமிக்க வேண்டாம் என்று பிருந்தா கராத் கூறும் யோசனை சரியா...?***

! பெண்களை யாரும் கட்டாயப்படுத்தி வேலைக்கு வைக்கவில்லை. அவர்களாகவே பல காரணங்களை உத்தேசித்து, யோசித்து இரவு நேரங்களிலும் பணியாற்ற முன் வருகிறார்கள். அவர்களைப் பணிக்கு அமர்த்தும் நிறுவனங்கள் அவர்களின் பாதுகாப்புக்கும் உத்தரவாதம் தரவேண்டும். இதைக் கட்டாயமாக்கி சட்டம் வரவேண்டும். ●

❒ ரூ.100 பரிசு பெறுபவர் :
**ஸ்ரீநிவாஸ் சுதர்சனன்,**
ப்ளாட் 7, மூன்றாவது மாடி,
புதிய எண்.4, பழைய எண்.20,
நேரு நகர் இரண்டாவது தெரு,
சென்னை - 600 020.

★ ரூ.50 பரிசு பெறுபவர் :
**வி.ஆர்.கிருஷ்ணன்,**
31/1990, சட்டயப்ப வாத்தியார் சந்து, மானோஜியப்பா வீதி,
தஞ்சை - 613 009

முகில்

# 'சிவாஜி' படப்பிடிப்பில் சகுனத்தடை!

## – ரஜினி அப்செட்

சென்னை ஆகஸ்ட், 16 - 'சிவாஜி' படப்பிடிப்பில் தொடர்ந்து சகுனத் தடைகள் எழுந்தன. இதனால் படப்பிடிப்பு காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

ஏவி.எம். தயாரிப்பில் ஷங்கர் இயக்கத்தில் ரஜினிகாந்த் நடிக்கும் 'சிவாஜி' படப்பிடிப்பு, தண்டையார்பேட்டை, திடீர் நகர், கீரிப் பாளையம், ஒரத்தநாடு, ஆப்கானிஸ்தான், உகாண்டா போன்ற இடங்களில் தொடர்ந்து விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

சென்ற வாரம் ஒரத்தநாட்டில் ரஜினிகாந்த், ஸ்ரேயாவின் தலையில் பேன் பார்க்கும் காட்சி பிரம்மாண்டமாக எடுக்கப்பட்டது. இதற்காக இந்தியா முழுவதிலுமிருந்து ஆயிரக்கணக்கான விதவிதமான பேன்கள் வரவழைக்கப் பட்டிருந்தன. ரஜினி, ஸ்ரேயாவின் தலையில் ஒரு பேனைத் தேடிக் கண்டுபிடித்து அதனுடன் சண்டையிட்டுக் கொல்வதாகக் காட்சி எடுக்கப்பட்டபோது, அந்தப் பேன் ரஜினியின் கண்டுவிரலைக் கடித்துவிட்டது.

இதனால் ரஜினி வலியால் துடித்தார். அவரது கண்டு விரலிலிருந்து ஒரு சொட்டு ரத்தம் வெளிப்பட்டது. ஆனால் இதனால் படப்பிடிப்பு தடைபட்டு விடக்கூடாது என்று கவலைப்பட்ட ரஜினி, தடுப்பூசி ஒன்றைப் போட்டுக் கொண்டு, தொடர்ந்து நடித்தார்.

இந்த சண்டைக்காட்சி மிரட்டும் விதமாக வந்துள்ளதாக, கோடம்பாக்கத்தில் பேச்சு எழுந்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆப்கனிஸ்தானின் குகைப் பகுதி ஒன்றில் ரஜினி - ஸ்ரேயாவின் ரகசியத் திருமணக் காட்சி படமாக்கப்பட்டது. அக்குகை ஒஸாமா பின் லேடனுடையது என்பது இதில் குறிப்பிடத்தக்கது.

பின்லேடன் இத்திருமணத்துக்கு சாட்சிக் கையெழுத்து போடுவது போல காட்சிகள் வருகின்றன. அதன்பின் அமெரிக்கா செல்லும் ரஜினி, அங்கு அதிபர் தேர்தலில் போட்டியிட்டு வெல்வதாக கதை நகர்கிறது.

நேற்று முதல் உகாண்டாவில் 'குருவியே, கொருக்குப் பேட்டை அருவியே' என்ற பாடலுக்கான படப்பிடிப்பு நடந்தது. ஆரம்பத்தில் உதவி இயக்குநர் ஒருவர் தும்மினார். அது சகுனத் தடையாகக் கருதப்பட்டது. சிறிது நேரம் கழித்து மீண்டும் ஆரம்பிக்க நினைக்கை யில், லைட்பாய் தும்மியதால், ரஜினி அப்செட் ஆனார். எனவே படப்பிடிப்பு மறுதேதி குறிப்பிடப் படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

இனி சிவாஜி படப்பிடிப்பில் யாரும் தும்மக் கூடாது எனத் தடை விதிக்கப்பட்டுள்ளது. 'சிவாஜி' படத்தின் புதிய ஸ்டில்கள் நாளை இன்டர் நெட்டில் வெளியிடப்படும் என இயக்குநர் ஷங்கர் நமது நிருபரிடம் தெரிவித்துள்ளார்.



**சிறுகதை**

# காத்திருந்த காதல்!

சினிமாவில் நடப்பது போலவே ஒரு சம்பவம் தன் வாழ்விலும் நடந்துவிட்டது போலத் தோன்றியது சுந்தரத்துக்கு... மஞ்சுளாவை அவர் பக்கத்து வீட்டு மாடியில் பார்த்தபோது ஒரு கணம் அதிர்ந்து போனது அவர் இதயம். கிட்டத்தட்ட அவளிடமும் அதே ரீஆக்ஷன்.

யதார்த்தமாக அப்பாவைக் கூப்பிடுவதற்காக மாடிப்பக்கம் வந்த சுந்தரத்தின் ஒரே மகள் வர்ஷினிகூட சுந்தரத்தையும் மஞ்சுளாவையும் பார்த்துக் கொஞ்சம் போலத் திணறித்தான் போனாள்.

வர்ஷினியைப் பார்க்கவும் மஞ்சுளாவிடம் ஒரு மீட்சி. தன் நரைத்த தலைமுடியைக் கோதிக் கோதி விட்டபடியே அந்த மாடியைவிட்டு நீங்கி மறைநது போனாள்.

''அப்பா...''- வர்ஷினியின் அழைப்பொலி சுந்தரத்தை மீட்டுத் திருப்பியது.

''என்னப்பா... யார் அவங்க?''

''யாரு...?''

''என்ன யாரு... பக்கத்து வீட்டு மாடில...'' அவள் முடிக்கவில்லை...

''பழைய பழக்கம்மா... விடு!'' அவர் பதிலோடு மாடியில் இருந்து இறங்கி நடக்கத் தொடங்கினார். அவள் கேள்விகளுடன் தொடர்ந்தாள்.

''பழைய பழக்கம்னா...''

''அந்தக் காலத்துல காலேஜ்லகூட படிச்சவங்கம்மா...''

''ஓ...கேர்ள் ஃப்ரெண்டா?''

''ம்...''

''அப்ப நல்லா கலகலன்னு பேச வேண்டியதுதானே? கடற்கரை சிலைங்க மாதிரி ரெண்டு பேரும் நின்னா என்ன அர்த்தம்?''

- வர்ஷினியின் கேள்விக்கு அவரால் உடனே ஒரு பதிலைக் கூற முடியவில்லை. ஹேங்கரில் தொங்கும் சட்டையைத் தேடி எடுத்து மாட்டிக்கொண்டு பீரோவைத் திறந்து அதனுள் இருந்து ஒரு பழைய டைரியையும் எடுத்துக்கொண்டு வாக்கிங் ஸ்டிக் சகிதம் வெளியே கிளம்பி விட்டார்.

மெல்ல வாசல் பக்கமாக சென்று ஒரு யூகமாக பக்கத்து வீட்டுப் பக்கம் பார்ப்பது தெரியாமல் பார்த்தாள் வர்ஷினி.

மஞ்சுளா மறைவாக நின்று சுந்தரம் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் கண்களைக் கண்ணீர் மறைத்திருப்பதையும் பார்க்க முடிந்தது.



வர்ஷினிக்குள்ளும் ஒரு நெருப்பு தன்னைத்தானே விசிறிவிட்டுக் கொண்டு எரியத் தொடங்கியது!

இரவு மணி பத்தாகிவிட்டது! சுந்தரம் தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்திருப்பதைக் கவனித்துக்கொண்டே




தான் இருந்தாள் வர்ஷினி. அவருடைய தலைமாட்டில் தலையணைக்குக் கீழ் அந்த டைரி.

அதற்குள் தனக்கான விடை இருக்கும் என்று அவளுக்குத் தோன்றியது. அது தன் கைக்கு வரவேண்டும் என்றால் அப்பா தூங்க வேண்டியது அவசியம்.

அவள் கணவன் ஒரு மெடிக்கல் ரெப்ரசென் டேடிவ் ஆக இருப்பவன். வீடு முழுக்க ஒரே மாத்திரைக் கூட்டம்தான். அதில் தூக்கத்துக்கு உதவும் ஒரு மாத்திரையைத் தேடி எடுத்துப் பாலில் கலந்து, அதை அப்பாவின் முன்னால் நீட்டினாள்.

"அப்பா... இந்தப் பாலையாவது குடியுங்க... இன்னிக்கு நீங்க சரியாகவே சாப்பிடலை" என்றாள்.

அவரால் மறுக்க முடியவில்லை. குடித்த பதினைந்தாவது நிமிடத்தில் வேதாள குகையைப் போல வாய் பிளக்க, தூக்கமும் அவரை தூக்கிக் கொண்டு போனது.

அந்த டைரி வர்ஷினியின் கைகளில்! அதனுள் பழுப் பேறிய ஒரு கவருக்குள் கடிதம் ஒன்று! இதயம் படபடக்க அதைப் பிரித்தாள்.

'என்னுயிர் சுந்தரம்!

நான் உங்களைப் பிரியும் நேரம் நெருங்கிவிட்டது. நமது காதலுக்குச் சாதி மட்டும்தான் விரோதி என்று நினைத்துக் கொண்டிருந்தேன். உங்கள் அப்பா, என் அப்பாவிடம் வாங்கிய கடனும் இப்போது சேர்ந்துகொண்டு விட்டது. வாங்கிய கடனை அவர் வாங் கவே இல்லை என்று சொன்ன தால் என் அப்பாவுக்கு உங்கள் குடும்பம் மேல் துளிக் கூட மதிப்பே இல்லை.

'அது திருட்டுக் குடும்பம்மா... நாணயமில்லாத குடும்பம். இதற்குமேல் என் பேச்சைக் கேட்காமல் நீ அவனுக்குக் கழுத்தை நீட்டினால், நானும் உன் தாயும் தண்டவாளத்தில் தலையைக் கொடுப்போம். இதை எல்லா அப்பன்களையும் போல மிரட்டலுக்காக நான் கூற வில்லை. இதுதான் என் சத்திய பிரமாணம்' என்று அப்பா உறுதிபட என்னிடம் கூறிய தோடு எழுந்தும் போய்விட்டார். இங்கே தொடர்ந்து இருந்தால் நான் மனம் மாற சிரமப்படக் கூடும் என்று ஊரை விட்டே போகவும் தீர்மானித்து விட்டார். எந்த ஊர்? எந்தத் தெரு? எதுவும் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் தெரியும். நான் உங் களைப் பிரியும் நேரம் வந்து விட்டது. நமது நான்கு வருட காதலுக்கு இப்படியும் ஒரு முடிவு.

சாதி மட்டும் காரணமென் றால் ஓடிப்போய் அதை முறி யடிப்பதை, முற்போக்கானவர்க ளாவது ஏற்பார்கள். நாணயக் குறைபாட்டுக்கு உங்களால் தான் என்ன செய்துவிட முடியும்; என்னால்தான் என்ன

இந்திரா சௌந்தர்ராஜன்

செய்துவிட முடியும்?

உங்களை மனதில் சுமந்துகொண்டு நான் என்னாவேன் என்று எனக்கே தெரியாது. எனக்காகக் காத்திருக்காமல் நீங்களாவது வாழப்பாருங்கள். இறுதி முத்தங்களுடன் உங்கள் பாதம் தொட்டுப் பிரியும் உங்கள் மஞ்சுளா!'

கடிதத்தைப் படித்த வர்ஷினிக்கும் கண்களிரண்டும் கலங்கிவிட்டன. சற்றுத் தள்ளி சுவரில் அவளது தாத்தா மருதாசலம், புகைப்படத்தில் சிரித்துக் கொண்டிருந்தார். சற்றுப் பக்கத்திலேயே அவள் அம்மா புஷ்பாவும் புகைப்படமாய்... இரண்டு படங்களிலும் தொங்கிக் கொண்டிருந்த பிளாஸ்டிக் பூ மாலை அவர்கள் நினைவுகளில் மட்டும் வாழ்பவர்கள் என்றது.

அவள் அம்மா அடிக்கடி சொல்லியிருக்கிறாள், "உன் தாத்தா ஒரு பணப் பேய்... உங்கப்பாவை நான் கல்யாணம் பண்ணிக்க எங்கப்பாகிட்ட லட்சக்கணக்குல வரதட்சணை கேட்டவர்" என்று... மௌனமாக டைரியை சுந்தரத்தின் தலையணை அடியிலேயே திரும்பவும் வைத்தாள்.

அந்த நேரம் பார்த்துத் தொலைபேசியின் அலறல். போய்க் காதைக் கொடுத்தாள். மறுபுறம் அவள் கணவன். "என்ன வர்ஷி... இன்னிக்கு போனே பண்ணலை..."



"மனசு சரியில்லீங்க. நீங்க எப்படி இருக்கீங்க?"

"ம்... இருக்கேன்... ப்ரியாதான் அம்மா எப்ப வருவாங்கன்னு உசுரை வாங்கறா..."

"இன்னும் ஒரு நாலு நாள் சமாளிங்க..."

"ஐய்யோ... என்னாச்சு... இப்பவே ஒரு வாரம் ஓடிப்போச்சு தெரியும்ல..."

"அதுக்கென்ன பண்ண... அப்பாவுக்கு இப்பத்தான் உடம்பு கொஞ்சம் தேறியிருக்கு. நல்லவேளை மஞ்சக் காமாலை இல்ல, சாதாரண வைரஸ் ஃபீவர்தான்."

"ஆமா, மனசே சரியில்லேன்னியே... என்ன விஷயம்... ஏதாவது விவகாரமா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லை..."

"மறைக்காதே வர்ஷி..."

"ஒண்ணுமில்லங்க...நான் நேர்ல சொல்றேனே."

"இதோ பார்... நான் இப்பவும் உன் அப்பாவை நம்ம கூட வெச்சுக்கத் தயார். அவர்தான் பொண்ணு வீட்ல மாமனார் இருக்கறதான்னு ஒரு காம்ப்ளக்ஸ்ல இருக்கார். அவர் இன்னும் அந்தக் காலத்துலயே இருக்கார். இப்பல்லாம் எல்லாமே மாறிப்போச்சு. தனியா கிடந்து கஷ்டப்பட வேண்டாம்னு உன் அப்பா கிட்ட சொல்லு."

"எஸ்.டி.டி பேசிக்கிட்டு இருக்கீங்க... ஞாபகம் இருக்கட்டும்... நான் நீங்க சொன்னதை மட்டுமில்ல... அதுக்கு மேலயும் சில விஷயங்கள அவர்கிட்ட சொல்லப் போறேன். பாவம் அப்பா. அவர் எல்லா காலத்துலயும் பிறர் விருப்பங்களுக்காகவே வாழ்ந்திருக்கார். நம்ம காதலுக்குப் பச்சைக் கொடி காட்டினதையும் சேர்த்துத்தான் சொல்றேன்... விவரமா உங்களுக்கு நான் அப்புறமா சொல்றேன். இப்ப போய்ப் படுங்க..."

- ரிசீவரை வைத்துவிட்டு ஒரு பெருமூச்சுடன் நிமிர்ந்தாள் வர்ஷினி!

**ம**றுநாள்!

வாசலிலேயே காத்திருந்து, கடைத் தெருவுக்குப் புறப்பட்ட மஞ்சுளாவைப் பின்தொடர்ந்து சென்று 'ஹலோ' சொல்லி, ஒரு தொடர்பையும் உருவாக்கிக் கொண்டு கோயில் ஒன்றின் மரத்தடிக்கே அவளை அழைத்துச் சென்று, ஒருவிதத் தீவிரத்துடன் பேச

ஆரம்பித்தாள் வர்ஷினி.

"உங்கள என்ன உறவுல அழைக்கறதுன்னே தெரியல. ஆனா நீங்கதான் மஞ்சுளா... என் அப்பாவை ஒரு காலத்துல ஆத்மார்த்தமா காதலிச்சவங்கங்கறது எனக்கு நல்லா தெரியும். நீங்க இறுதியா எழுதின கடிதத்தை அப்பாவுக்குத் தெரியாம அவரோட டைரில இருந்து எடுத்துப் படிச்சுப் பார்த்தேன்.

முதல்ல ரொம்ப ஷாக்காதான் இருந்தது. ஏன்னா அப்பாவுக்குள்ள இப்படி ஒரு இழப்பு இருந்ததை அவர் காட்டிக்கிட்டதே இல்லை. ஆனா அப்பா இப்ப ரொம்ப கஷ்டப்பட்டுக்கிட்டு இருக்கார். என் அம்மா நான் காலேஜ் படிக்கும் போதே இறந்துட்டாங்க. அப்ப இருந்தே அப்பாவோட கஷ்டம் அதிகமாயிடுச்சு. ஆனாலும் அப்பா வெளிக்காட்டிக்காம சமாளிச்சுக்கிட்டே இருக்கார்.

நான் கல்யாணம் ஆகி மும்பைல இருக்கேன். என்கூட வந்துருங்கப்பான்னா வரமாட்டேங்கறாரு. தனியாவே சமைச்சு சாப்பிட்டுக்கிட்டு..."

– வர்ஷினி பேசப்பேச, மஞ்சுளாவின் கண்களில் கண்ணீர் திரண்டு உருள ஆரம்பித்தது.

"சாரிங்க... உங்கள நான் ரொம்ப டிஸ்டர்ப் பண்ணிட்டேன். எனக்கு இப்ப என்ன தெரியணும்னா..."

– வர்ஷினி முடிக்கும் முன் மஞ்சுளாவே கைகளை உயர்த்தி அவளுக்கான பதிலை கூறத் தயாரானாள்.

"சத்யமா உங்கப்பா இந்த ஊர்ல அந்த வீட்ல இருக்கறது எனக்குத் தெரியாது. நான் தெரிஞ்சு வரலம்மா.."

"ஐயோ அதுக்கில்ல... உங்களைப் பார்த்தா..."

"பார்த்தா..."

"இல்ல... உங்க கழுத்துல தாலிச்சரடு இல்ல... ஒரு வேளை உங்க கணவர்...?"

"கணவரா...?" கண்ணீருக்கு இடையில் மஞ்சுளா சற்றுச் சிரித்தும் விட்டாள்.

"அப்படின்னா...?"

"நான் கல்யாணமே செய்துக்கலம்மா. என்னால முடியல. எப்படியோ இதுவரை தனியாவே தாக்குப் பிடிச்சுட்டேன். ஒரு லேடீஸ் ஹாஸ்டலோட வார்டனா இருக்கேன். எங்க ஹாஸ்டல்ல தங்கி இருக்கற பொண்ணோட கல்யாணத்துக்காக இந்த ஊருக்கு வந்தேன். அந்தப் பெண்ணோட வீடுதான் அது."

– மஞ்சுளா சொல்லி முடித்த நொடி வர்ஷினிக்கு கண்களிரண்டும் பனித்துவிட்டன. சட்டென்று அவள் கைகளை இழுத்துப் பிடித்தவள் "அம்மா, நான் ரொம்பக் கொடுத்து வெச்சவ..." என்று அந்தக் கைகளிரண்டையும் கண்களில் ஒத்திக் கொண்டாள்.

மஞ்சுளாவுக்கும் மின்னல் வெட்டியது போல இருந்தது.

"நான் அம்மாவா... என்னம்மா சொல்றே?" என்றாள் பதைப்புடன்.

"ப்ளீஸ்... மாட்டேன்னு சொல்லிடாதீங்க. அப்பாவை நான் ஒரு துரதிருஷ்டசாலியாத்தான் பார்த்திருக்கேன். உங்களைப் பார்க்கவும் அவர் கணக்குல கொஞ்சம் அதிர்ஷ்டம் பாக்கி இருக்கற மாதிரியும் தெரியுது. ப்ளீஸ்... மாட்டேன்னு மட்டும் சொல்லிடாதீங்க..." என்று வர்ஷினி உதடுகள் துடிக்கக் கெஞ்சினாள்.

மஞ்சுளாவால் பேச முடியவில்லை. கரகரவென கண்ணீர் வழிந்தது... வழிந்து கொண்டே இருந்தது.

காதலுக்கு வயதேது?

---

"எதிரி நாட்டு மன்னர் நம்மீது போர் தொடுக்கப்போகும் செய்தி கேட்டதும் என் புஜம், மீசை, மார்பு, நரம்பெல்லாம் துடிக்கிறதே... இதற்கெல்லாம் என்ன காரணம் அமைச்சரே?"

"அளவற்ற பயம்தான் மன்னா!"

- வீ.விஷ்ணுகுமார்

33



# கொஞ்சிக் கொஞ்சிப் பேசி...

மறுநாள் காலை பிலடெல்பியாவுக்குச் சென்று 'வால்ட்விட்மன்' வாழ்ந்த வீடு, அவரது கல்லறை ஆகியவற்றை எல்லாம் பார்த்தேன். 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த அக்கவிஞரின் வீட்டை வெளிப்புறம் மாற்றி அமைத்துவிட்டு, உட்புறத்தில் அவர் பயன்படுத்திய பொருட்கள், அவர் அமர்ந்த நாற்காலி போன்றவற்றை அப்படியே அந்தக் கலைச்சூழலுக்கு ஏற்ப வைத்திருந்தது மிக வியப்பாக இருந்தது.

பிறகு அக்கவிஞரின் கல்லறையை நோக்கிச் சென்றோம். அமெரிக்காவில் கல்லறைகளைப் பார்ப்பதற்காகவே ஒருமுறை அந்த நாட்டுக்குச் செல்ல வேண்டும். பச்சைப் புல்வெளிகள், பசுமையான பூமரங்கள், நீரூற்றுகள், பளிங்கு போன்ற நீரோடைகள், சொல்லி வைத்தாற்போல எந்தச் சத்தமும் போடாத பறவைகள்; இவற்றுக்கு நடுவே பளிங்கு மேடைக் கல்லறைகள்.

என்னுடன் வந்த நண்பர் இந்த அழகான சூழலைப் பார்த்துவிட்டு, "சே செத்தாலும் இங்கதான் சாகணும். அது மட்டுமில்லை, இவ்வளவு நல்ல இடம் இருக்குமின்னு தெரிஞ்சா, அடிக்கடி சாகலாமே!" என்று ஆர்வமாகச் சொல்லிவிட்டு, "உங்களுக்கு ஒரு ஜோக் நினைவிருக்கிறதா? ஒரு காதலன் தன் காதலியை, யாருக்கும் தெரியாமல் ரகசியமாய்ச் சந்திக்க நினைத்து அவளைக் கூட்டிக்கொண்டு சுடுகாட்டுக்கே வந்துவிட்டானாம். அந்தச் சூழலைப் பார்த்த காதலி பயந்துபோய் 'ஐயோ, இதென்ன இங்க கூட்டிட்டு வந்துட்டீங்க...' என்று பதற்றமாகக் கேட்க, 'சும்மா இரு. இந்த இடத்திற்கு வர அவனவன் சாகிறான்' என்றானாம் அமைதியாக" என்று நண்பர் ஜோக் சொல்லி முடித்தபோது, யாரும் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை.

இரண்டு நாட்கள் சென்றபின் பத்மினி அவர்கள் இல்லத்துக்குச் சென்ற போது, 'கொஞ்சிக் கொஞ்சிப் பேசி மதி மயக்கும்... வஞ்சகரின் உலகம் வலை விரிக்கும்' என்ற 'கைதி கண்ணாயிரம்' படத்தில் திருமதி ராஜசுலோசனாவுக்கு, பி.சுசீலா பாடிய பாடல் கேட்டுக் கொண்டிருந்தது.

நாங்கள் உள்ளே சென்றதும் "வாங்க, உங்களைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தோம்" என்று சொன்னபடி தனக்கேயுரிய சிரிப்போடு எங்களை வரவேற்றார் ராஜசுலோசனா. வயோதிகம் ஏற்பட்டிருந்தாலும், குரலிலும் அந்தச் சிரிப்பிலும் இளமை தெரிந்தது.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆரோடு 'நல்லவன் வாழ்வான்' படத்தில் கதாநாயகியாக நடித்து, பின்னர் 'குலேபகாவலி'யில் போதையோடு பாடுகிற பாட்டாக 'உன் ஆசையும் என் நேசமும் இரத்தப் பாசத்தினால் வாடுவதைப் பாராயடா' என்று பாடியாடியதும், நடிகர் திலகத்தோடு 'அம்பிகாபதி', 'படித்தால்

கு.ஞானசம்பந்தன்

மட்டும் போதுமா' எனப் பல படங்களில் நடித்த அந்தக் காட்சிகளும் என் கண் முன்னே மின்னல் வேகத்தில் வந்து சென்றன.

"மிகப்பெரிய கதாநாயகர்களோடு நடித்த நீங்கள் 'கைதி கண்ணாயிரம்' படத்தில் நகைச்சுவை நடிகர் 'டணால்' தங்கவேலுவோடு நடித்து, அந்தப் படத்தில் மிக அருமையாக காமெடியும் பண்ணியிருப்பீர்களே! அது எப்படி?" என்று நான் ராஜசுலோசனாவிடம் கேட்டேன்.

"இருங்க இருங்க, நானும் வந்திட்டேன்" என்று சொல்லியபடி உள்ளிருந்தே வேகமாக வந்த நாட்டியப் பேரொளி பத்மினி, ராஜசுலோசனா அருகில் உட்கார்ந்து அவரது தோளில் கைபோட்டுக் கொண்டு, "நாங்கள் இருவரும் சேர்ந்து நடனமாடி நடித்த படம் எது தெரியுமா?" என்று கேட்டார்.

யோசித்த நான், " 'திருமால் பெருமை', 'கரையேறி மீன் விளையாடும் காவிரி நாடு' என்ற பாடல்தான் அது" என்றேன்.

"சரியாச் சொன்னீங்க..." என்று சொன்ன ராஜசுலோசனா, 'என்ன கேட்டீங்க? 'கைதி கண்ணாயிரம்' படத்தில் தங்கவேலு அண்ணனோடு சேர்ந்து காமெடி பண்ணியதைத்தானே? அந்தக் காலத்தில் அதெல்லாம் பெரிய வாய்ப்புங்க. சரோஜாதேவிகூட 'சபாஷ் மீனா' படத்தில் சந்திரபாபுவுக்கு ஜோடியாக வருவாங்க தெரியுமா?" என்றார்.

"ஏன், தங்கவேலு நடிச்ச



'ரம்பையின் காதல்' படத்திலே அவருக்கு ஜோடியா சகலகலாவல்லி நம்ம பானுமதியம்மா நடிச்சிருப்பாங்களே, அதை மறந்திட்டீங்களா?'' என்று பத்மினி கேட்டார்.

"உண்மைதாங்க..."

''அதுசரி, 'படித்தால் மட்டும் போதுமா?' படத்திலே நடிகர் திலகத்துகிட்ட சவுக்கடி வாங்குவீங்களே... அடி ரொம்ப பலமா?'' என்று கேட்ட போது, "இல்லீங்க... அப்படி அடிக்கிற மாதிரி நடிக்க சிவாஜி சாரால மட்டும்தான் முடியும். ஒரு அடிகூட மேலே படாம முகத்தில் மட்டும் ஆக்ரோஷத்தைக் காட்ட வேற யாரால முடியுங்க?'' என்று கேட்டுச் சிரித்தார் ராஜசுலோசனா.

"எனக்கு ஒரு விஷயம்தான் புரிய மாட்டேங்குது'' என்று நான் தொடங்கியவுடன், "போச்சுடா உங்களுக்கே புரியாத விஷயம்னா அது நல்லாத்தான் இருக்கும். சொல்லுங்க...'' என்று குறுநகையோடு கேட்டார் ராஜசுலோசனா.

"உங்களுக்குத் தாய்மொழி தெலுங்கு. இவங்களுக்கு (பத்மினி) மலையாளம், சரோஜாதேவிக்கு கன்னடம். இது மாதிரி அஞ்சலிதேவி, ஜமுனா, கண்ணாம்பான்னு எல்லோருக்கும் தாய்மொழி வேறாக இருந்தாலும் தமிழை அருமையாகப் பேசி தமிழ்ப்பட உலகில் வெற்றிக்கொடி நாட்டினீங்களே... அது எப்படி? இன்னிக்கு வர்ற நடிகைகள் யாருக்கும் தமிழே தெரியலையே அது ஏன்?'' என்று கேட்டேன்.

''அப்பவெல்லாம் எங்களுக்கு முன்னுக்கு வரணும், எந்த மொழிப் படத்தில் நடிக்கப் போனாலும் அந்த மொழித் தெரிஞ்சு பேசணும் அப்படீன்னு ஒரு வேகம், ஆர்வம் இருந்ததுங்க. அதுமட்டுமில்லை, அப்போதெல்லாம் படங்களை ஆறுமாசம், ஒருவருஷம் கூட நிறுத்தி நிதானமா எடுப்பாங்க...' என்றார் பத்மினி.

"இப்ப எல்லாமே வேகம். படமும் வேகமா தியேட்டரை விட்டு ஓடிப் போயிடுது'' என்று ராஜசுலோசனா சொன்னார்.

''அது மட்டுமில்லைங்க... ஒரு நடிகைக்கு, நடிகருக்கு மற்றவர் பின்னணி பேசறதா வந்த பிறகு அவர்களின் சொந்தக் குரல் மக்களைச் சென்றடையாமல் போச்சுங்க. நான் சிறுபிள்ளையா இருக்கிறப்ப ரேடியோவிலே ஒலிச்சித்திரம்னு சினிமா திரைக்கதை வைப்பாங்க. அப்ப அதைக் கேட்டுக்கிட்டு இருக்கிற படிக்காத பாட்டி கூட, 'இது சாவித்ரி குரலு, இவர் பாலையா, இவரு ரெங்காராவு'ன்னு சொல்றதைக் கேட்டிருக்கேன். இப்ப, சிம்ரன், சினேகா, ஜோதிகா, பூமிகா யார் பேசறதைக் கேட்டாலும் ஒரே மாதிரி தான் இருக்கு... ஏன்னா இவங்க எல்லோருக்கும் பின்னணி பேசறவங்க ஒரே பெண்தானாம்...'' என்றேன் நான்.

இரவு நேரம் அதிகமாகிவிட்டதால், நாங்கள் அவர்களிடமிருந்து விடைபெறும் நேரம் வந்தது. வெகுநாள் பழகிய நண்பர்கள் போல எங்களுக்குள் ஓர் உணர்வு ஏற்பட்டது. எங்கள் கார் பனிப் படலத்தைக் கிழித்துக் கொண்டு நியூ ஜெர்ஸி வீதிகளில் விரைந்தது.

(ரீல் சுற்றும்)


''உங்க தலையைப் பார்த்ததும்தான் எனக்கு ஞாபகமே வந்தது.''

''என்ன விஷயம்?''

''வரும்போது வழுக்கையா ஒரு இளநீர் வாங்கிட்டு வரச் சொன்னா என் மனைவி.''

- பா.விஜயசாரதி





# கலாமின் ஞானக்குடில்!

பொள்ளாச்சியைச் சேர்ந்த எலக்ட்ரிக்கல் இன்ஜினீயர் தனபால். கோவையில் சொந்தமாக சாஃப்ட்வேர் கம்பெனி நடத்தி வரும் இவர், 'குருத்து' என்ற தமிழ் ஆவணப்படம் தயரித்து வெளியிட்டார். அதில் என்ன ஸ்பெஷல் என்கிறீர்களா? அது நம் ஜனாதிபதி அப்துல் கலாம் பற்றியது. ராமேஸ்வரத்தில் பிறந்த ஒரு சாதாரண இந்தியக் குடிமகன், நாட்டின் முதற் குடிமகனாகி, ராஷ்ட்டிரபதி பவனுக்குச் சென்ற கதையின் சுருக்கம்தான் இந்த ஆவணப் படம். இதைப் பார்த்து மனம் நெகிழ்ந்த கலாம், தனபாலைப் பாராட்டி இருக்கிறார். அடுத்த கட்டமாக, ஆங்கிலத்தில் பல புதிய விஷயங்களையும் சேர்த்து மீண்டும் 'ஒரு சின்ன கனவு' என்ற தலைப்பில் படமெடுத்திருக்கிறார் தனபால்.



• 'சின்னக் கனவு' வெளியீட்டு விழாவில்...

"நம் ஜனாதிபதியின் அண்ணனை ராமேஸ்வரத்தில் சந்தித்துப் பேட்டி கண்டேன். கலாம், ஜனாதிபதியாகப் பதவி ஏற்றுக்கொண்டபோது, தம்முடைய சொந்தச் செலவில்தான் தம் அண்ணனையும் மற்ற குடும்பத்தினர்களையும் டெல்லிக்கு வரவழைத்தாராம். ஜனாதிபதியின் சில உறவினர்கள் இன்னமும் அங்கு கூரை வேய்ந்த வீடுகளில்தான் வசிக்கிறார்கள். அவர்கள் கலாமின் அன்பைத்தவிர வேறு எதையும் அவரிடமிருந்து எதிர்பார்க்கவில்லை என்பதைக் கண்டு வியந்தேன். எனக்கு நான்கு தடவைகள் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச வாய்ப்புக் கிடைத்தது. ஒருமுறை, 'வாருங்கள்! உங்களுக்கு மொகல் கார்டனைச் சுற்றிக் காட்டுகிறேன்' என்று அழைத்துக் கொண்டு போனார். அங்கே ஒரு குடிசையைக் காட்டி, 'இதற்கு நான் சூட்டியுள்ள பெயர் ஞானக் குடில். இங்கே அமைதியாக உட்கார்ந்திருந்தால் புதிய சிந்தனைகள் வரும்' என்றார். ஒவ்வொரு முறையும் ஜனாதிபதி மாளிகைக்குள் நுழையும் போது, ஜனாதிபதி என்ற பெரிய மனிதரைச் சந்திக்கப் போகிறோம் என்ற பிரமிப்பு இருக்கும். ஆனால், வெளியே வரும்போது, பண்பாடுமிக்க, எளிய, பாசமுள்ள சொந்தத் தாத்தாவைப் பார்த்துவிட்டு வருவது போன்ற உணர்வுதான் மேலோங்கி நிற்கும்" என்று கூறும் தனபால், தாம் எடுத்துள்ள கலாம் பற்றிய படத்தை அனைத்துப் பள்ளிகளிலும் காட்ட விரும்புகிறார். அதற்காகப் பள்ளிகள் தம்மை அணுகலாம் என்கிறார்.

- எஸ். சந்திரமௌளி

# இப்படியும் ஒரு பிழைப்பு!

● பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் உதவியாளருடன் ரயிலில் பயணம் செய்ய இலவசச் சலுகை உண்டு. ஆனால் இந்தச் சலுகைகளை பல பாராளுமன்ற உறுப்பினர்கள் 'காசாக்குவதாகப் புகார்கள் எழுந்துள்ளன. உறுப்பினர் போவதாக ரிசர்வேஷன் சார்ட் சொல்லும். ஆனால் உள்ளே பயணி வேறு யாரோவாக இருப்பார். 'அமைச்சராக உள்ள காங்கிரஸ் பாராளுமன்ற மேலவை உறுப்பினர் ஒருவர் மற்றும் ம.தி.மு.க., தி.மு.க.வைச் சேர்ந்த இரு மக்களவை உறுப்பினர்கள் பேரில் ஆட்கள் அடிக்கடி பயணம் செய்கிறார்கள். இந்தத் தில்லு முல்லு உறுப்பினர்களுக்குத் தெரியாமல், அவர்களது உதவியாளர்களே கூடச் செய்யலாம்' என்கிறார் ஓர் ரயில்வே அதிகாரி. ஏற்கெனவே தொகுதி நிதி முதலான வேறு பல வாய்ப்புகள் இருக்கும்போது இப்படியும் ஒரு பிழைப்பா?



● மத்திய கப்பல் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் டி.ஆர்.பாலு, ஒவ்வொரு வெள்ளி இரவும் சென்னைக்கு வருகிறார். மறுநாள் காலை இந்தியா முழுதும் உள்ள நெடுஞ்சாலை ஒப்பந்தக்காரர்களை சென்னைக்கு வரவழைத்து ஆலோசனை நடத்துகிறார். பணிகளை எப்படி விரைவுபடுத்துவது என்பதுதான் அதில் முக்கிய அஜண்டா. இவர் இப்படி என்றால், மற்றொரு மத்திய இணையமைச்சரிடம் வேலை நடக்க வேண்டுமென்றால் கஸ்டம்ஸ் மற்றும் வருமானவரி அதிகாரிகள் பாண்டிச்சேரிக்கு ஓடுகிறார்கள். ஏன்? அங்குதான் அமைச்சரின் சகோதரர் இருக்கிறாராம்!

● "முதல்வர் அமெரிக்கா போய்விடுவார்" என்று ஜெ. சொன்னாலும் சொன்னார், இது பற்றிய விவாதம் பரவலாகிக் கொண்டிருக்கிறது. "முதல்வர் மூப்பு காரணமாக, இயல்பான தளர்வுடன் இருக்கிறாரே தவிர, மற்றபடி அவருக்கு எந்த உடல் பிரச்னையுமில்லை. மற்ற நாடுகளிலிருந்து சென்னைக்கு மருத்துவ வசதி பெறுவதற்காக பலர் வரும்போது முதல்வர் ஏன் அமெரிக்கா செல்ல வேண்டும்? எனவே இது சம்பந்தமான வதந்திகள் பொய்" என்கிறார் கலைஞருடன் நெருக்கமாக இருக்கும் அறிவாலயப் பிரமுகர் ஒருவர். அதே சமயம் "இல்லையில்லை; சிறுநீரக சிகிச்சைக்காக முதல்வர் அமெரிக்கா போவார்" என்று குடும்ப வட்டாரத்திலிருந்து செய்தி கசிகிறது.

● சர்ச்சை காரணமாக கடந்த இரு வருடங்களாக அமைதி காத்த ஜெயேந்திரர் பக்தர்கள், அடுத்த மாதம் ஸ்வாமிகளின் பிறந்தநாளை அமர்க்களமாக சென்னையில் கொண்டாட இருக்கிறார்களாம். ஏழைகளுக்கு உதவி, கருத்தரங்கம் என்று ஜமாய்க்கப் போகிறார்களாம்.

- சஞ்சயன்






படம் : பொள்ளாச்சி சுந்தரம்

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 06 - 08 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 06 - 08* Registered as a Newspaper in Srilanka.

# அதிசயம்! ஆனால் உண்மை!

இளைஞர்களே ! வழுக்கைத் தலையால்
உங்கள் காதல், திருமணம் தடைபட்டுவிட்டதா ?
இனி கவலை வேண்டாம் !

மூன்றே மணி நேரத்தில் இளைமையான தோற்றத்தைப்
பெற்று காதல் திருமணத்தில் வெற்றி பெறலாம்



சுதந்திர தினச்
சிறப்புச் சலுகை
**50%**

*Hair Weaving, Hair Bonding &*
*Silicon System Treatments are Done Here !*



## சிறப்பம்சங்கள்

வித்தியாசமான முறை
பக்க விளைவுகள் அற்றது
ஷாம்பு போட்டுக் குளிக்கலாம்
நீச்சலும் அடிக்கலாம்
அறுவை சிகிச்சை கிடையாது
இது விக்கும் அல்ல
வாகனங்கள் ஓட்டலாம்
நீங்கள் விரும்பும் ஹேர்
ஸ்டைலில் தலை வாரலாம்

**FAIR & HAIR**
**HEALTH & BEAAUTY CURE**

- 51, Salai Road, Uraiyur, (Near Rockfort School) TRICHY-620 003. Phone : 0431-2768497, 2760545. Mobile : 98424-38381, 94431-38381.
- 17/1, L.B.Road, Adyar, CHENNAI - 600 020. Phone : 24469596, Mobile : 94 49-18848
- 128-A, North Marat Street, Yanaikkal, Opp. To Anjeneyar Temple, Simmakkal, MADURAI - 625 001. Phone : 0452-2620567, 2628383. Mobile : 94433-38382